www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JUDE
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஜூலை 19–25,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 266

## சூரியக்கந்தையும் செம்மணியும்





## வளைப்பும் வழுவலும்



## சென்னையில் புலிப் பாய்ச்சல்

## மன்சூர் மீது அழகி புகார்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## திருமலையில் பந்தாட்டம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

திருமலையில் மாணவர்கள்
பந்தாடப்பட்டுள்ளனர்!
பூட்ஸ் கால்கள்
பந்தாடியுள்ளன!

திட்டமிட்ட குடியேற்றத்தால்
அள்ளுப்பட்ட திருமலையில்,
இப்போது திட்டமிட்ட
அடக்குமுறை அதிகாரம்
கோலோச்சுகிறது!

திருமலைச் சந்தை
குத்தகையில் ஆரம்பித்து,
தமிழ்க் கிராமங்களிலிருந்து
மக்களை வெளியேற்றுதல்
உட்பட பல்வேறு காரியங்கள்
நடந்தேறி வருகின்றன!

வேலையற்ற பட்டதாரிகளின்
போராட்டத்துக்கு
ஆதரவு தெரிவித்து
ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதை
சிருடைமினர் குழப்பியுள்ளனர்!

மாணவர்கள் எனக் கருதப்பட்ட
அனைவரும்
தாக்குதலுக்கு உள்ளாகினர்!

போராடும் உத்வேகம்
எந்த ரூபத்தில் எழுந்தாலும்
அது தமிழ்ப் பேசும் மக்களிடம்
இருந்து எழுமானால்
அதிகாரத்தில் உள்ளோருக்கு
பொறுக்க முடியாமலுள்ளது!

அடங்கியும், மடங்கியும்
பணிந்தும், குனிந்தும்
வாழப் பழகுவதற்கே
அவர்கள் ஆவலுற்றுள்ளனர்!

அத்தகைய மேலாதிக்க
எண்ணத்தின் வெளிப்பாடாகவே
மாணவர்கள் மீதான
தாக்குதலை நோக்க வேண்டும்!

தலைநகரில்
ஜனாதிபதி இல்லம் அருகே
பிரிட்டிஷ் தூதரகம் முன்
ஆர்ப்பாட்டம் நடத்தக்கூட
அனுமதி தரப்படுகிறது!

ஆனால்- திருமலையில்
வேலை கேட்டுப் போராடிய
மாணவர்களுக்கு
ஆதரவு தெரிவிக்கக்கூட
அவசரகால சட்டத்தின்கீழ்
மிரட்டல் விடுக்கப்படுகிறது!

ஜனநாயக சூழல்
சிவில் நிர்வாகம் பற்றி
தமிழ்க் கட்சிகள்
வாய்நோகாமல் பேசுகின்றன!

திருமலையில் சிவில் நிர்வாகம்
யாருடைய அதிகாரத்தின் கீழ்
இருக்கிறது?

படை அதிகாரியே
நேரடியாக கூறியிருக்கிறார்
"என்னைக் கேட்காமல்
எக் காரியத்திலும் இறங்கக் கூடாது.
அவசரகால சட்டப்படி
அதிகாரம் எனக்கே!" என்கிறார்.

தமிழ்க் கட்சிகளின்
பிரதிநிதிகளிடம் மேற்கண்ட
கருத்தை கூறியுமிருக்கிறார்!

அவர் தம்மிடம் சொன்னதை
வெளியே சொல்வதற்கு
தமிழ்க் கட்சிகளுக்கு
வெட்கமோ வெட்கம்!

தென்னிலங்கையில்
மாணவர்கள் தாக்கப்பட்டிருந்தால்
எத்தனை பிரச்சனை எழுந்திருக்கும்?

அரசும், எதிர்க்கட்சியும்
கயிறிழுத்திருப்பர்!
'ஜனநாயகக் கொலை' என்று
பத்திரிகைகள் அழுதிருக்கும்!

வடக்கு-கிழக்கில்
அத்துமீறல்கள் நடந்தால்
பெரும்பான்மை இனக்கட்சிகள்
வெகுஜன தொடர்பு ஊடகங்கள்
எவையும் அலட்டிக் கொள்வதில்லை!

ஏதோ பக்கத்து நாட்டு
பிரச்சனை போன்றே
பார்த்துக்கொண்டிருக்கின்றன!

ஆனால், வடக்கு-கிழக்கு
இணைந்திருக்க வேண்டும்
என்று கூறினால் மட்டும்
தங்கள் மடியில்
கைவைப்பது போல
குதிக்கிறார்கள்!

பாராமுகத்தின் காரணமும்
பேரினவாதம்தான்!
பாரம்பரிய பிரதேசம்
என்று கூறுவதை
எதிர்த்து குதிப்பதும்
பேரினவாதம்தான்!

அடக்க நினைப்பது
அழிக்க நினைப்பது,
பிரதேச, இன
ஒற்றுமையை குலைக்க முனைவது
என்று பல்வேறு ரூபங்களில்
பேரினவாதம் காரியமாற்றுகிறது!
மாணவர் மீதான தாக்குதலும்
அந்த ரூபங்களில் ஒன்றுதான்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஞானம்

எதைப்பற்றியும் தெளிவு; எதிலும் தெளிவு என்பதே ஞானம். உயிர்களையும், உடலையும் புரிந்து கொண்ட மனிதனுக்கே ஆண்டவன் ஞானத்தைத் தருகிறான். நமது உடலே இறைவனுக்கும் நமக்கும் உள்ள பெரிய தடை. அதுவே ஞானத்துக்கும் இறைவனுக்கும் பெரிய பாதுகாப்பு. உடல் ஞானத்திற்குப் பெரிய பாதுகாப்பு என்று அறிந்தால், உயிரும் உடலும் இறைவனுக்கே என்று மனிதன் அறிவான். பிறகு எல்லாப் பொருளிலும் கடவுளைக் காண்பான். அப்போதுதான் ஞானம் என்ற தெளிவைப் பெறுவான். கடவுளையும் ஞானத்தையும் அடைய எண்ணுபவர்கள் உடலை நேசிக்கக் கூடாது. ஆனால் காக்கவேண்டும். இதுவே இறைவனிடம் இருந்து ஞானத்தைப் பெறும் வழி. தேக அபிமானம் உள்ளவன் ஞானத்தைப் பெறமுடியாது. இறைவனைக் கண்களால் பார்க்க முடியாது. இக் கருத்தை அறிந்த மனிதன் மனம் தளரக் கூடாது. நம்மைக் காக்கின்ற ஆண்டவனிடம் ஞானம் உள்ளது. அது அவனை வணங்கும் அடியவர்களிடமே வந்து சேரும். மனைவி, மக்களைத் துற, பின் இறைவனை நினை, பக்தியும் ஞானமும் வரும்!' என்று இறைவன் சொன்னதில்லை. கடவுளின் அருளைப் பெற்று ஞானம் பெற்றபின் மனிதன் இதனை உணர்ந்து கொள்கிறான். ஆதலால் இறைவனை உள்ளன்போடு வழிபட்டால் இறைவனிடம் இருக்கும் தெளிவு, ஞானமாக மனிதனுக்குக் கிடைத்துவிடும்.

தொகுப்பு: சி. பாலாம்பிகை, சிலாபம்.

# ஆன்மீகம்



## தனயனின் அறிவுத்திறன்

அக்காலத்து மெய்ஞானிகளில் ஒருவரான அப்துல் காதிர் என்பவர் தன் வீட்டார் உணவின்றி பசியோடு களைத்துப் போயிருந்ததை கண்ணுற்று கடலிலிருந்து மீனையாவது பிடித்து வந்து சமைத்துக் கொள்ளலாமென்றெண்ணி தம் சிறிய மகனோடு கடலுக்குச் சென்றார்.

தூண்டில் மூலம் பிடிக்கப்பட்ட மீன்களை தனது தனயனிடம் கொடுக்கக் கொடுக்க அச் சிறுவன் மீண்டும் கடலிலேயே மீன்களை எறிந்து விடுவதைக் கண்டு வியப்படைந்தவராக, "ஏன் மகனே! இப்படிச் செய்கிறீர்?" எனக் கேட்டார்.

"தந்தையே! தாங்கள் சொற்பொழிவாற்றும் பொழுதெல்லாம் படைப்பினங்களில் யாரேனும் அல்லாஹ்வின் திக்ரை (தியானம்) செய்ய மறந்துவிடும்போது அவர்கள் இக்கட்டில் மாட்டிக்கொள்கிறார்கள். அவர்களின் உடலுக்கும் சேதம் ஏற்பட்டு விடுகிறது," என்று கூறுவீர்கள். இப்போது இந்த மீன்கள் தூண்டிலில் மாட்டிக்கொண்டு விட்டன. சிறிது நேரத்தில் உடலுக்கும் சேதம் விளைந்து விடப்போகின்றது. இவைகள் அல்லாஹ்வின் திக்ரை மறந்த உயிரினங்கள். இவைகளைப் புசிப்பதால் நாமும் எங்கே திக்ரை மறந்துவிடுவோமோ? என்ற பயம் வந்துவிட்டது. எனவே அதனை திருப்பிக் கடலில் எறிந்து விடுகிறேன்!" இதைக் கேட்ட தந்தை அன்போடு மகனை வாரி அணைத்துக்கொண்டார்.

இச் சிறுவனின் அறிவுத்திறனை மனதில் கொள்வோமாக.

வை.எம். தாஹிர் கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.263

### பரிசுக்குரிய கவிதை

#### நாங்களே

உதைபடும்
பந்தாக மட்டுமா?
உதைக்கும்
கால்களாகவும்
நாங்களே!

கிருஷ்ண மூர்த்தி-
மாளிகாவத்தை,
கொழும்பு-10.



### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### பந்தாடியவர்கள்

என்னைப் பந்தாடியவர்கள்
அகதியாக்கினார்கள்;
உன்னைப் பந்தாடியவர்கள்
சகதியாக்கினார்கள்!

டி. ஜோர்ஜ்-லபுகலை.

#### எந்தக் கிண்ணம்?

கண்விழித்தாடியும் சில
கிண்ணம் தவறி விடும்-ஆனால்
இவர் கண் மூடி ஆடுகின்றார்
எந்தக் கிண்ணம் எடுக்க?

திருமதி எஸ். ரவிந்திரன்-வவுனியா.

#### நல்ல பாடம்

உதைக்கும் பந்தாம் நாமிங்கு...!
உருளும் நிலைதான் எமக்கிங்கு...!
உலகக் கிண்ணம் அதைப் பெறவே
உதைக்கும் வீரர் முன்னாலே,
உருளும் பந்தை நாம் நினைத்தால்
அர்த்தம் எமக்கும் அரும்பாடம்!

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி, மட்டக்களப்பு.

#### எமக்கென்ன?

உதைபடும் பந்துபோல்
வதைபடும் தமிழினம்
வகை தெரியாது தவிக்க,
கொண்ட நோக்கம் கைவிட்டு
தம் வலுவை முடக்கி
காரணங்கள் கூறி
காரியம் ஏதுமின்றி
சிற்றரசு ஆசையிலே
தமிழ்க் கட்சிகள்
உதைப்பது
நம் தலையை!

ம. திருவரசுராசா- வவுனியா.

## கவிதைப் போட்டி இல.266



#### பாதுகாப்பு!

கால்களுக்கு மட்டும்தான்
காப்புறுதி!
அதனால்தானோ...
முக(ம்) மூடி!?

வாஹிட் ஏ. குத்தூஸ்-
கோட்டைமுனை.

#### 58–98

ஆண்டு 58ல் தமிழரைப்
பந்தடித்தார்!
முடியவில்லை இன்னும்
ஆண்டு இப்போ 98!!

'திக்கவயல்'-மன்னார்.

#### தணிக்கை!

பந்து விளையாட்டிலும்
பயங்கரத் தணிக்கையோ..!?

எஸ்.மௌனேஷ்-மட்டக்களப்பு.

**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 25.07.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.266,
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

பௌத்த மதகுருமாருக்கு யுத்த நிலவரம் விளக்கப்படுகிறது. ஏனைய மதகுருமாருக்கு ஏன் விளக்கப்படவில்லை? பௌத்த மதகுருமாருக்கு பென்ஸ் கார் கொடுத்தார்கள். இந்து மதகுருமாரை சந்திக்கக்கூட மறுத்தார்கள். இதுதான் இங்கு நிலவரம். இன்னுமா தெரியவில்லை உள் நோக்கம்?

எம். மகாலிங்கம், கொழும்பு-06.



காதிலை பூ கந்தசாமியார் கலக்குகிறார். கந்தசாமியாரும் முத்துத்தம்பியும் நடத்தும் பேச்சு வார்த்தையில் பொடி வைப்பும் உண்டு. 'பயோடேட்டா'வும் நன்று.

என். முருகதாஸ், கொழும்பு-11.

## யார் அது?

கவியரசு கண்ணதாசன் தன் சுயசரிதையில் குறிப்பிட்டது எந்த அரசியல்வாதியை என்று அறிய ஆவல். கலாரசிகர் என்று குறிப்பிட்டுள்ளார். என் ஊகம் இன்னும் வாழும் தலைவர் ஒருவரே அந்த கலாரசிகர், என்பதுதான்! சரிதானா?

கு. ராஜயோகம், மட்டக்களப்பு.

## சின்னமீன் பெரியமீன்

மலையக அமைப்புக்களின் திடீர் தேர்தல் ஐக்கியம் தொடர்பான கேள்விக்கு சிந்தியாவின் பதில் மிக அருமை. உண்மையும் அதுதான். பெரியமீன் தொண்டா, சின்ன மீன்களை விழுங்கப் போகிறார். மலையக மக்கள் முன்னணியின் பிளவும், வீழ்ச்சியும் இ.தொ.காவுக்குக் கிடைத்த மற்றொரு வெற்றி.

ஆர். ரதன், மஸ்கெலியா.

## சோறும் சுதந்திரமும்

தமிழ்க் கட்சிகளின் அரசியல் என்பது அன்றாடப் பிரச்சனைகளைச் சார்ந்து நடத்தப்படும் ஒன்றாகிவிட்டது. ஒரு காலத்தில் சோறும் வேண்டும், சுதந்திரமும் வேண்டும் என்று கூறியதை கிண்டலடித்துத் திரிந்தவர்கள்இன்று சுதந்திரமே வேண்டாம் சோறு மட்டும் போதும் என்கிறார்கள். ஜனநாயகம் குறித்து இக்கட்சிகள் கூறும் வியாக்கியானங்களும் வேடிக்கையாகவே உள்ளன.

கே. கண்ணன், திருக்கோணமலை.

## போறாமைப் புலம்பல்

முரசே! உன் கணிப்புக்களும், கருத்துக்களும் உறுதியாகவும், உத்தரவாதமாகவும் இருப்பதுதான் உன் பலம். உன் பாணியில் முயன்று பார்த்தவர்கள், முடியாமல் போனதால் சேறுபூசத் தொடங்கியுள்ளனர். பிறந்தநாள் வாழ்த்துக்குக்கூட உன்னைவிடப் பல மடங்கு கட்டணம் அறவிடும் இங்குள்ள பத்திரிகை ஒன்று, 'முரசு' வியாபாரப் பத்திரிகை எனக் கூறி பொறாமையைக் கொட்டியுள்ளது. (பிரதி அனுப்பியுள்ளேன்) இவர்கள் மட்டும் பொதுநலத்துக்கு பாடுபடத்தான் யாழில் இருந்து தப்பிவந்து இங்கு பத்திரிகை நடத்துகிறார்களாக்கும்!

சி. லிங்கேஸ்வரன், கனடா.



## பாதுகாப்பு

மாகாணசபைத் தேர்தலை நடத்த தெற்கில் பாதுகாப்பு போதாதாம். யாழில் மட்டும் பாதுகாப்பு ஒழுங்காகக் கொடுத்தோ தேர்தல் நடந்தது? வேட்பாளர்கள் எவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படவும் இல்லை. அப்படியானால் அரசுக்கும் தெற்கில் மனித உயிர்களைப் பாதுகாப்பது மட்டும்தான் முக்கியமா? இப்போதாவது தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ளுமா?

சி. நந்தகுமார்,
யாழ்ப்பாணம்.

## யாழ் கட்சிகள்

தமிழ்க் கட்சிகள் யாழ் கட்சிகளாகிவிட்டன என்று கூறுவது தவறில்லை. கிழக்கில் கிடைக்கும் ஆசனங்களைவிட யாழில் பெறும் ஆசனங்கள் அதிகம் என்பது பிரதான அல்லது தலையாய காரணம். நிவாரண வெட்டு எங்கும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. யாழில் வெட்டியதும் இக் கட்சிகள் துள்ளியடித்த காரணம் யாழ் மக்கள் மீதான பற்றுதல் அல்ல. தேர்தலில் வாக்குப்பெறும் நோக்கத்தில் உள்ள பற்றுதல்.

மு. தங்கராசா, யாழ்ப்பாணம்.

உலகை வலம் வரும் முரசே! நாடுவிட்டு நாடு வந்தபோதும் உன்னை வாரா வாரம் காண்பதில் என் தனிமை போய்விடுகிறது. ஜனநாயக போலித்தனத்தை கோடிட்டுக் காட்டும் உனக்கு பாராட்டுக்கள்.

க. பிரபா, ஜெர்மனி.

## சபாஷ் ராஜேஸ்

அன்பின் ராஜேஸ்குமார்! 'முள்நிலவு' சூப்பரப்பா. ஆயிரம் நாவலை எழுதி உலக சாதனை படைத்துள்ள ராஜேஸ் குமாருக்கு முரசு மூலம் வாழ்த்துக்கள். காதல் கதையிலும் விறுவிறுப்பு தர உங்களால் மட்டுமே முடியும். சபாஷ் ராஜேஸ்குமார்.

கி. பகீரதி, மன்னார்.

முரசே! 'மேற்கே ஒரு குற்றம்' அபாரம். சுஜாதாவுக்கு கைகுலுக்கு. கணேஷ், வசந்த் இணைந்து துப்பறிவது அபாரம். வசந்த் பயங்கர ஜொள்ளு ஆசாமி.

இ. கீதா, கொழும்பு-11.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

இடி அமீன் வெகு பிரமாதம். 'மனித மாமிச மலை' என்று பட்டம் கொடுக்கலாம். குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்த தலை என்னவாகியது?

எச். ஜமால்தீன், புத்தளம்.



படிப்பகம்

www.padippakam.com

# 'ஜயசிக்குறுய்' சமரில் பெண் புலிகள்

## புலிகளின் களமுனைத் தளபதி பாராட்டு

"'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பின்னர், அதற்கு எதிரான சண்டைகளில் பெண் புலிகளின் பங்கே முக்கியமானது!" இவ்வாறு புலிகளின் வன்னிக் களமுனைத் தளபதி கருணா அம்மான் 'சுதந்திரப் பறவைகள்' ஏட்டிற்கு வழங்கியுள்ள பேட்டியில் கூறியுள்ளார்.

தனது பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: "இச் சமரில் ஆண் உறுப்பினர்களைவிட பெண் உறுப்பினர்களே பெரும் எண்ணிக்கையில் கூடுதலான பங்காற்றி வருகின்றனர்.

உலகின் யுத்த காலங்களில் இதுவரையில் பெண்கள் பின்னல் வேலைகளுக்கே ஈடுபடுத்தப்பட்டனர். ஆனால் இங்கே அவர்களே யுத்தத்தை நடத்துகின்றனர்.

பெண் உறுப்பினர்கள் அனைத்துத் துறைகளிலும் வளரவேண்டும் என்று எமது தலைவர் விரும்பினார்.

ஜயசிக்குறுய் சமர் சாதாரணச் சமரல்ல; அடர்ந்த பெரும் காடுகளுக்குள் பதுங்கு குழிகள் அமைத்து சமரில் ஈடுபட்டு வருகின்றோம்.

காட்டுச் சமரின் போது காலநிலை மாற்றங்களையெல்லாம் பெண் உறுப்பினர்கள் சந்தித்தனர். மழைக்காலங்களில் குளிருடன் நுளம்புக் கடியும், கோடை காலங்களில் தண்ணீர் வரட்சியால் குளிப்பதற்கே பெரும் சிரமமும் ஏற்படுகின்றன.

**பதுங்கு குழிவாழ்வு**

எந்தக் காலநிலைக்குள்ளும் பதுங்குகுழி வாழ்க்கையை வாழ பெண் உறுப்பினர்கள் தம்மைப் பழக்கப்படுத்திவிட்டனர்.

கடும் மழைக்குள்ளும், வெயிலுக்குள்ளும் இந்தக் காட்டில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பதுங்கு குழி அமைப்பது இலகுவான வேலை யல்ல.

முக்கியமாக இந்தச் சமர் எமது தலைவரின் எதிர்பார்ப்புக்களையும், கனவுகளையும் நிறைவேற்றிவைக்கும் களம். ஆட்பற்றாக்குறையால் பெண்களை புலிகள் இணைத்துக் கொண்டதாக யாரேனும் கூறலாம்.

பெண் விடுதலை பேச்சளவில் மட்டும் வைத்திருக்காது, செயலிலும் காட்டி வருகிறார்கள் பெண்புலிகள். தமது தேவைகளுக்கு யாரிலும் தங்கியிருக்க வில்லை. பிறரின் தலையீடு இன்றி தாமாகவே சுதந்திரமான முடிவுகளை எடுக்கிறார்கள்.

உலகில் இராணுவ நடவடிக்கைகளில் பெண்கள் அந்தப் பகுதிகளைவிட்டு தூர ஓடுவதுதான் வழக்கம். இங்கே முன்னின்று சண்டை பிடிக்கின்றனர்!" என்றும் கருணா தனது பேட்டியில் கூறியுள்ளார்.

# சர்வதேச ரீதியாக புலிகளுக்கு நிதி குவிகிறது!

## பிரபாவின் உரையுடன் பிரசாரம்!

உலகத் தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுத்து புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரை ஒலிப்பதிவு நாடாவாகவும், பிரசுரங்களாகவும் வெளிநாடுகளில் பிரசாரப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து இலங்கைத் தமிழர்கள் வாழும் பல நாடுகளில் பெருமளவு நிதி புலிகளுக்கு சேர்ந்துள்ளதாக அறிய முடிகிறது.

நோர்வே, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் தாமாக முன்வந்து பெருமளவான நிதி வழங்கியுள்ளனராம்.

நோர்வே ஒஸ்லோவில் இலங்கைத் தமிழர்கள் சிலர் தங்க நகைகளையும் வழங்கியதாகக் கூறப்படுகிறது.

**அரசு முயற்சி**

வெளிநாடுகளில் புலிகளுக்கு நிதி திரளும் விடயம் இலங்கை அரசின் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ஓரளவு தெரிந்துள்ளது.

புலிகளுக்கு நிதி திரட்டும் முயற்சிகளை தடுப்பதில் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆர்வமாக இருந்து வருகிறார்.

**வரவேற்பு குறைகிறது**

எனினும், குறிப்பிட்ட நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு ஊறு நேராமல் தமது நடவடிக்கைகளை புலிகள் மேற்கொள்வதால் இலங்கை அரசின் முயற்சிகளுக்கு பயன் கிட்டவில்லை.

அதுதவிர, அரசியல் தீர்வு பின்தள்ளப் பட்டுள்ளமை, மற்றும் போர்க்கால அனர்த்தங்கள் பற்றிய தகவல்கள் வெளியாகி வருகின்றமை, காணாமல் போனோர் விவகாரங்கள் போன்றவற்றால் சர்வதேசரீதியாக இலங்கை அரசுக்கு இருந்த முன்னைய வரவேற்பு குறைந்து வருகிறது.

சமீபத்திய பத்திரிகைத் தணிக்கை வெளியுலகில் பலத்த அதிருப்தியையும், இலங்கை அரசின் மனித உரிமை செயற்பாடுகள்மீது சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளன.

கிளிநொச்சியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் தகவல்கள் புகைப்பட ஆதாரங்களுடன் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளால் அங்குள்ள மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் இராஜதந்திரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன. அப் புகைப்படங்கள் பலத்த அனுதாபத்தைத் தோற்றுவித்துள்ளன என்று கூறப்படுகிறது.

**தணிக்கையும் புலிகளும்**

தற்போது போர்முனைச் செய்திகளுக்கு அரசு தணிக்கையை அமுல் படுத்தியிருப்பதால், விடுதலைப் புலிகளின் தகவல்களையே சர்வதேச செய்தியாளர்கள் நாடுகின்றனர்.

ஆதாரங்களோடு புலிகள் தகவல்களைக் கொடுப்பதால் செய்தி நிறுவனங்கள் மத்தியிலும் புலிகள் இயக்கப் பிரச்சாரங்களுக்கு அங்கீகாரம் கிடைத்து வருகிறது.

வன்னியில் இருந்து சற்றலைட் தொலைபேசி ஊடாக உடனுக்குடன் தமது வெளிநாட்டுக் கிளைகளுக்கு புலிகள் தகவல்களை அனுப்புகின்றனர்.

இலங்கை அரசுமீது நம்பிக்கை கொண்டிருந்த வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் படிப்படியாக நம்பிக்கை இழக்கத் தொடங்கியுள்ளன.

செம்மணி புதைகுழிகள் பற்றிக் கூறப்பட்டும்கூட அரசு எவ்வித நடவடிக்கையிலும் உடனடியாக ஈடுபட முன்வராமையும் வெளியுலக மனித உரிமை அமைப்புக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதாம்.

# அரசின் அலட்சியம்-எம்.பிக்கள் கண்டனம்!

## சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் தெரிவிப்பு

"செம்மணியில் நானூறு புதைகுழிகள் இருப்பதாக கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். அவ்வாறு தெரிவித்த பின்னரும் அரசாங்கம் காண்பித்து வரும் அலட்சியம் அதிர்ச்சியளிக்கிறது. நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி உள்ளது." இவ்வாறு ஈ.பி.டி.பி. எம்.பிகள் ஐந்து பேர் கூட்டாக வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதிக்கும், சர்வதேச மன்னிப்புச் சபை, மற்றும் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் இக் கண்டனக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வொன்றை காண்பதில் இருந்து வெகுதூரம் விலகி யுத்தம் நடத்தும் ஆர்வமே மேலோங்கி உள்ளது. மனித உரிமைகளும், மனித உயிர்களின் பெறுமதியும், மனித வாழ்க்கைக்கான உத்தரவாதங்களும் இந்த யுத்தத்தின் வெற்றிக்காக பணயம் வைக்கப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் மட்டும் அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர். அவர்கள் பலியாகிவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது. அதனை மறுத்த அரசாங்கத்தால் தகுந்த ஆதாரத்துடன் தனது மறுப்பை உறுதி செய்ய முடியாமல் போனதுடன், இன்றுவரை உருப்படியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவும் இல்லை.

யாழில் காணாமல் போனோருக்காக விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று எமது கட்சித் தூதுக்குழுவுக்கு ஜனாதிபதியால் தரப்பட்ட உத்தரவாதமும் ஆறுமாதங்களாகியும் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

**ஆராயத் தவறியமை**

இந்நிலையில்தான் செம்மணியில் புதைகுழிகள் இருக்கின்றன என்ற திடுக்கிடும் தகவலை கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரிகள் கூறியதுடன், தாம் அடையாளம் காட்டத் தயாராக இருப்பதாகவும் நீதிபதிகள் முன்பாகவே கூறியிருந்தனர்.

மாபெரும் மனித அவலம் தொடர்பாக வெளியாகும் சகல தகவல்களையும் ஆராய்ந்து பார்க்க அரசு கடமைப்பட்டுள்ளது. எவ்வித ஆராய்வும் இன்றி அவற்றை பொய்யென்று அரசு எப்படி கருதிக் கொண்டது என்பது எமக்கு ஆச்சரியமாக உள்ளது.

கிளிநொச்சி சுதந்திர புரத்தில் நடைபெற்ற விமானத் தாக்குதலில் 25 பொதுமக்கள் பலியானமை, அதன் பின்னர் 27.06.98ல் கிளிநொச்சி கோளாவிலில் நடந்த விமானத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் பலியாகியமை போன்ற சம்பவங்கள் தொடர்பாகவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டும் அரசு காண்பிக்கும் அலட்சியம் ஏமாற்றத்தையே தந்துள்ளது.

தமிழ் பேசும் மக்களை விடுவிப்பதாகவே இந்த யுத்தம் எனக் கூறியபடி, தமிழ் பேசும் மக்களின் அவலங்களை சகஜமானவையாகவும், சாதாரணமானவையாகவும் நோக்குவதும், அவலங்களை தடுக்கவும், நடைபெற்ற அவலங்களுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தாமதிப்பதுவுமே நடைமுறையாக உள்ளது."

மேற்கண்டவாறு அக் கண்டனக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி. எம்.பிகள் ரமேஷ்நடராஜா, எம். சந்திரகுமார், எஸ். சிவதாசன், கே. தங்கவேல், யு. பாஸ்கரன் ஆகிய ஐந்து எம்.பிகள் அக் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# தேவானந்தாவுக்கு மேலதிக சிகிச்சை

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. உடல் நிலை தேறியபின்னர் மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு ஒன்றுக்கு சென்றுள்ளார். தலையில் பட்ட காயம் பெரும்பாலும் ஆறிய நிலையில், கண், மற்றும் காதுப் பகுதிகளில் மேலதிக சிகிச்சை பெறுவதற்கே வெளிநாடு சென்றுள்ளார்.

தேவானந்தா எம்.பி.யின் சிகிச்சைக்கான செலவை மட்டும் அரசு பொறுப்பேற்றுள்ளது. தேவானந்தாவுடன் பாதுகாப்புக்காகவும், உதவிக்காகவும் செல்வோருக்கான செலவையும் தாம் ஏற்பதாக அரசு முதலில் கூறியபோதும் பின்னர் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுவிட்டதாம்.

விமான நிலையத்தில் நடந்து சென்று விமானத்தில் ஏறுமளவுக்கு தேவானந்தாவின் உடல் நிலை தேறியிருந்தது.

கொழும்பு பொது மருத்துவமனையில் பத்திரிகையாளர்கள் சிலரை தேவானந்தா சந்தித்தார். வீரகேசரி, தினமுரசு, தினக்குரல், சண்டே லீடர், சண்டே ரைம்ஸ் ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளர்களை அவர் சந்தித்தார்.

# 'சிறைக்கு வரவேண்டும்!'

## கடிதமும் வந்திருந்தது

"களுத்துறைச் சிறையில் நடைபெறும் உண்ணாவிரதத்தை முன்னிட்டு தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கிறோம்." மேற்கண்டவாறு களுத்துறைச் சிறையில் இருந்து டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடிதம் ஒன்று வந்திருந்தது.

இக் கடிதம் தேவானந்தாவுக்கு வந்திருந்த விடயம் 12.07.98 அன்றே தெரியவந்ததாம். அவருக்கு வந்திருந்த கடிதங்களை ஆவணப்படுத்திக் கொண்டிருந்தபோதே மேற்படி கடிதம் கிடைத்தது. சிறீகாந்தன் என்ற பெயரில் அக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் நேரில் வந்து உத்தரவாதம் தந்தால் உண்ணாவிரதத்தை கைவிடத் தயார் என்று உண்ணாவிரதத்தின் முன்னரே கைதிகள் சிலரால் கூறப்பட்டதும் தெரிந்ததே.

# மின்மாற்றி, தொலைத் தொடர்பு தகர்ப்புகள்

## பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு சவால்!

### வன்னித் தினசரி விபரிப்பு

"நாட்டில் இடம்பெற்றுவரும் மின்மாற்றித் தகர்ப்புகளும், தொலைத் தொடர்பு நிலைய குண்டு வெடிப்புக்களும் பொருளாதாரத்தை மட்டும் பாதிக்கும் ஒன்றல்ல. சந்திரிக்கா அரசுக்கு, அரசியல்-இராணுவ ரீதியிலும் விடப்படும் சவாலாகும்!" இவ்வாறு வன்னியில் இருந்து வெளியாகும் 'ஈழநாதம்' தினசரி ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.

மின்மாற்றிகள் மீது நடத்தப்படும் தாக்குதல் அமைச்சர் அநுருத்த ரத்வத்தைக்கு சவால் விடுவது போன்றதாகும் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

"சிறீலங்காவின் இன்றைய பொருளாதாரத்தில் தொலைபேசி பரிவர்த்தனையும், மின்சாரமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதே சமயம் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையக் குண்டு வெடிப்புக்கள் வர்த்தக உலகை பெரிதும் பாதித்துள்ளன.

தொடர்ச்சியாக இடம்பெறும் குண்டு வெடிப்புக்களால் பல மில்லியன் ரூபாய்களுக்கு வாரா வாரம் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதுவும் ஒரு வகையில் அரசுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. அதிலும் இவ் இழப்பீடுகளை உடன் சீர் செய்ய வேண்டி இருப்பதால் அது ஒரு அழுத்தம் தரும் சுமையாகவே மாறியுள்ளது!" என்றும் ஈழநாதம் தெரிவித்துள்ளது.

# ஆயுதங்கள் கைப்பற்றல்

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் ஆயுதக் கிடங்கு ஒன்று கைப்பற்றப்பட்டதாக படையினர் கூறியுள்ளனர்.

ரி.56 ரக துப்பாக்கிகள், எஸ்.எல்.ஆர். ரகத் துப்பாக்கிகள், ஷொட்கன் துப்பாக்கிகள், மோட்டார் ஷெல்கள், மோட்டார்கள் போன்றவை கைப்பற்றப்பட்டதாக படையினர் கூறியுள்ளனர்.

# விமானத் தாக்குதல்!

மட்டக்களப்பு, பொலன்னறுவை, அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் புறங்களிலுள்ள காட்டுப் பகுதிகளை நோக்கிய தாக்குதல்களை படையினர் மேற்கொண்டு திரும்புகின்றனர். புலிகள் இயக்கத்தினரின் மறை விடமாகக் கருதப்படும் தொப்பிக்கல் மலைப்பகுதியில் கடந்த 12.07.98 அன்று காலை புக்காரா விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் சம்பந்தமாக மேலதிகமாக எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

# ஓட்டோ சாரதி வேடத்தில் சென்று தாக்குதல்!

## அவ்விடத்திலே புலி–பொலிஸார் இவ்விருவர் பலி!

மட்டக்களப்பு-வாழைச்சேனையில் பொது மகன் மாதிரிச் சென்ற புலி உறுப்பினர் முஸ்லிம் நபரொருவருக்குச் சொந்தமான ஓட்டோ ஒன்றை, நோயாளியொருவர் இருப்பதாகவும் தன்னுடன் வருமாறும் கூறி கறுவாக்கேணி நோக்கி ஓட்டோவை எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்.

கறுவாக்கேணிக்கு ஓட்டோ சென்றதும் அங்கு வைத்து அதில் இரு புலி உறுப்பினர்கள் ஏறிக்கொண்டனர். ஓட்டோக்காரரை அவ்விடத்தில் நிற்குமாறு கூறினர்.

அவரது சேர்ட்டைக் கழற்றி ஒருவர் அணிந்துகொண்டார். மீண்டும் வந்த வழியே ஓட்டோவை எடுத்துக் கொண்டு சென்று சோதனைச் சாவடியை நெருங்கினர். அங்கிருந்த இரு பொலிஸாரைச் சுட்டுவிட்டு கைக்குண்டொன்றையும் வீசினார்கள். கைக்குண்டு வெடிக்கவில்லை.

துப்பாக்கிச் சூடு நடந்த பொழுது அங்கு மறைந்திருந்த மற்றொரு பொலிஸ்காரர் ஓட்டோவில் வந்தது புலிகள்தான் என அடையாளம் கண்டு ஓட்டோமீது சுட்டபொழுது அதில் வந்த புலிகள் இருவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இதனிடையே, கறுவாக்கேணியில் ஓட்டோக்காரரைத் தடுத்து வைத்துக்கொண்டு தாக்குதலுக்குச் சென்ற புலிகள் உறுப்பினர்களுடன் வயர்லெஸ் கருவி மூலம் தொடர்பேற்படுத்திக்கொண்டு நின்ற புலிகள் உறுப்பினர் திடீரெனத் தொடர்பு துண்டிக்கப்பட்ட விபரீதத்தை உணர்ந்து ஓட்டோக்காரரான முஸ்லிம் நபரை ஓடித் தப்புமாறு பணித்தாராம்.

தற்சமயம் ஓட்டோக்காரர் அவரது ஓட்டோவுடன் வாழைச்சேனைப் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின்போது அகப்பட்ட மீன் வியாபாரியான முஸ்லிம் இளைஞர் ஒருவருக்கு துப்பாக்கிச் சூடுபட்டு கை முறிந்துள்ளது. இச்சம்பவம் 11.07.98 அன்று காலை 9.00 மணியளவில் நடந்தது.

**ஏழைத் தொழிலாளி**

வாழைச்சேனை கிண்ணையடியில் கடந்த 12.07.98 அன்று நடந்த மற்றொரு சம்பவத்தில் அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த க. தவசீலன் (23), வை. தங்கவடிவேல் (25), த. காளிராசா (20), பி. செல்லத்துரை (21) ஆகிய நான்கு இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். கிண்ணையடிப் பகுதிப் படையினர் இவர்களை மீன்பிடிக்க அனுமதித்திருந்தனர். ஆனால் அப்பகுதியில் பதுங்கியிருந்த சீருடையினரே இந்த மீனவ இளைஞர்களைச் சுட்டதாகவும் கூறப்படுகிறது.

வாழைச்சேனை- கல்குடா வீதியில் ஒருவர் படையினரால் சுடப்பட்டார். பின்னர் அந்தச் சம்பவம் பற்றி செய்தியறிக்கையில், மூன்று சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் ஒரு கைக்குண்டு, கண்ணிவெடிகள் என்பன அவ்விடத்தில் காணப்பட்டன என்றும் கூறப்பட்டது. ஆனால் கொல்லப்பட்டவர் மேசன் தொழில் செய்துவந்தவர். இச்சம்பவம் 08.07.98 அன்று நடைபெற்றது.

# வாகரையில் தாக்குதல்!

வாகரையைக் கைப்பற்றிப் படையினர் நிலைகொண்ட பின்னர், கடந்த 04.07.98 அன்று படையினர் வீதிப் பாதுகாப்பிற்குப் புறப்படும்போது சிறு எதிர்ப்பொன்றைப் புலிகள் காண்பித்தனர். ஆனால் எந்தத் தரப்பினருக்கும் இழப்புக்கள் ஏற்படவில்லை. வாகரையில் படையினர் நிலை கொண்ட பின்னர் புலிகள் காட்டிய முதல் எதிர்ப்பு இதுவாகும்.

# சுற்றிவளைப்புக்கள்!

(காரைதீவு நிருபர்)

அண்மைக்காலமாக கல்முனைப் பிராந்தியத்தில் தொடர்ச்சியான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்தே இத்தேடுதல் வேட்டையை திடீர் திடீரென நடாத்துகின்றனர். கடந்தவாரம் கல்முனை, காரைதீவு, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, மணற்சேனை மீண்டும் கல்முனை பாண்டிருப்பு என அடிக்கடி சுற்றிவளைப்பு தொடருகிறது.

இளைஞர்களை ஓரிடத்தில் கூட்டி விரிவுரை ஒன்று நிகழ்த்தி விடுவிக்கப்படுகிறது. சந்தேகத்திற்கிடமானவர்களை வாரமொருமுறை பொலிஸில் பதியுமாறு கூறப்படுகிறதாம். கல்முனை (தமிழ்) பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட அதிரடிப்படை முகாம் 4 நாட்களில் அகற்றப்பட்டது. மின்மாற்றி தகர்க்கும் படலமும் தொடருகிறது. மக்கள் பீதியில் உள்ளனர்.

# புளுக்குணாவையில் பதிலடித் தாக்குதல்!

## புலி-பொலிஸார் 24 பேர் பலி!

படையினர் கிழக்கில் அம்பாறை- மட்டக்களப்பு எல்லைப் புறங்களில் மேற்கொண்ட படை நகர்வுக்குப் புளுக்குணாவையிலிருந்து சென்ற விசேட அதிரடிப்படையினரும் பங்கு கொண்டனர். இவர்களது சுற்றி வளைப்பின் போதே காவல்துறைப் பெண் புலிகள் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டனர் என்பது அறியப்பட்ட விடயமாகும்.

அதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் கடந்த 07.07.98 அன்று காலை அரந்தலாவைப் பகுதியில் வீதிப்பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மற்றும் விஷேட அதிரடிப் படையினர்மீது புலிகள் திடீர்த் தாக்குதலைத் தொடுத்தனர். இச்சம்பவத்தில் 13 பொலிஸார் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 16 பேர் காயமடைந்தனர்.

இதே சம்பவத்தின்போது படையினரின் ஷெல் வீச்சுக் காரணமாக பலியான 11 புலிகளின் பெயர் விபரங்கள்: மேஜர் விக்ரர், கப்டன்களான வில்சன், சுஜேந்திரன், லெப்டினன்களான கெனடி, பாலதர்மன், புண்ணியகுமார், விமல ரூபன் 2ம் லெப்டினன்களான சுகந்தன், சூரி, கண்ணதாஸன், பாலசுந்தரம் ஆகியோரே பலியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# அப்துல் ஹமீது இராஜினாமா!

## பொறாமைதான் காரணம்?

ஒலிபரப்புத்துறையில் தமிழ்கூறும் நல்லுலகில் ஒப்பாரும் மிக்காருமில்லையெனக் கூறுமளவு சாதனைகள் பல புரிந்த பி.எச்.அப்துல் ஹமீது இலங்கை வானொலியிலிருந்து இராஜனாமாச் செய்துள்ளார்.

உள்ளத்தால் விரும்பியோ, வேறு ஒரு பதவியில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற அவாவினாலோ ஹமீது அவர்கள் தனது பதவியை விட்டு விலகவில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

அப்துல் ஹமீது உள்நாட்டில் மட்டுமல்லாமல் உலகின் பல பாகங்களிலுமுள்ள நேயர்களின் அபிமானம் பெற்றவர். இதன் காரணமாக- இலங்கை வானொலி அமைப்பில் பணிபுரியும் சில சக ஊழியர்களின் பொறாமையும் அவர்கள் விரித்த சதிவலையும்தான் அவரைப் பதவியிலிருந்து விலகத் தூண்டியிருக்கின்றன என்பதுதான் உண்மை.

மாணவனாக இருக்கும்போதே வானொலியுடன் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்ட அப்துல் ஹமீது, தனது குரல் வளத்தாலும், தமிழ் வளத்தாலும், நினைவாற்றலாலும் ஒலிபரப்புத் துறையில் தனக்கென தனியானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

தமிழ்நாட்டிலிருந்து சன் ரி.வி. ஒளிபரப்பில் வாரம் தோறும் ஒளிபரப்பாகும் 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி தமிழ் நாட்டின் பல்வேறு நகரங்களிலும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளின் தலை நகரங்களிலும் கனடிய நகரங்களிலும்கூட இந் நிகழ்ச்சிக்கான ஒளிப்பதிவுகள் இடம் பெற்றுவருகின்றன. இதற்காக இவர் பிறநாடுகளுக்குச் சென்று வர வேண்டியிருப்பதனால் சம்பளமில்லாத விடுமுறையில் தான் சென்று வருகிறார்.

நாட்டிலிருக்கும் காலங்களில் ஹமீது அவர்களின் குரலிலேயே தமது விளம்பரத்தைப் பதிவுசெய்ய விரும்பும் வர்த்தகர்களின் கோரிக்கையை நிறைவேற்ற சம்பளமற்ற விடுமுறை காலத்தில் அவர் ஒலிபரப்புக் கலையகத்துக்கு வருவதையும் சிலர் ஆட்சேபித்துள்ளனர்.

இதன்பின்னரே மனமுடைந்த நிலையில் அப்துல் ஹமீது தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில நிலவும் போட்டி, பொறாமை நீண்டகால நோயாக நிலவிவருகிறது. அதற்கு ஹமீதும் பலியாகியுள்ளார்.

அபேதானந்தன்.

# இப்படிச் செய்யலாமா?

யாழ் குடாநாட்டில் வலிமேற்கு உதவி அரச அதிபர் பணிமனை (சுழிபுரம் பிரதேச சபைக் காரியாலயத்திற்கு அருகாமையில்) கட்டடம் கட்டப்பட்டு அரை குறையில் இருக்கிறது. தொடர்ந்து இக் கட்டடத்தை கட்டி உ.அ.அ பணிமனையை இயங்க வைப்பதுதான் யாழ் மாவட்ட பா.உறுப்பினர்கள் செய்யவேண்டிய கடமையாகும். ஆனால் அவ்வாறு செய்யாமல் மீண்டும் சங்கானையில் புதிதாக நிலம்வாங்கி உ.அ.அ பணி மனையை அங்கு அமைப்பதற்கு ஈ.பி.டி.பி. பா.உக்கள் நடவடிக்கை எடுத்துவிட்டார்கள்.

ஏற்கனவே கட்டிய கட்டடம் அரைகுறையில் இருக்கிறது. முன்னைய அரச அதிபர்கள் ஆய்வு செய்து சுழிபுரத்தில் கட்ட அங்கீகாரம் அளித்துள்ளார்கள்.

இப்படியெல்லாம் இருக்கும்போது புதிதாகச் சங்கானையில் பணிமனை அமைக்க இப் பா.உ எப்படிச் சம்மதித்தார்கள்? பின் தங்கிய கிராமப் பகுதிகளை (தீவுப்பகுதி) முன்னேற்றுவதில் அக்கறையுள்ள ஈ.பி.டி.பி.யினரும் இப்படிச் செய்துவிட்டார்களே!

ந. சிவரஞ்சன், சுழிபுரம்.

# பள்ளம் மேடான பாதை

லிந்துலை நோனாதோட்டம், இராணிவத்தை, பேருந்து பாதைகள் 1980ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை வாகனங்கள் செல்ல வசதியற்றவைகளாக குண்டும் குழியுமாக இருக்கின்றன.

நுவரெலியா பிரதேச சபை, மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியன நடைப்பெறும் காலங்களில் மட்டும் இப்பாதைகளில் மேற்பூச்சு வேலைகள் நடைபெறுகின்றன. ஏனைய காலங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

இதனால் இப்பகுதியில் வாழும் பொது மக்களுக்கு பெரும் சிரமங்கள் உண்டாகின்றன. அவையாவன:

1. கர்ப்பிணித் தாய்மார் பிரசவ வேதனையுடன் செல்லும்போதும், அவசர சிகிச்சைக்கான நோயாளர்கள் செல்லும் போதும் பெரும் துன்பம் நேருகிறது.

2. பாடசாலை மாணவ-மாணவியர் மற்றும் தொழில் நிமித்தம் செல்வோர் குறித்த நேரத்தில் செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

3. நகரத்தில் இருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் பொதுமக்கள்-சொந்த வாகனக் காரர்கள் அறவிடும் கூடிய கட்டணச் சுமையை ஏற்கவேண்டியுள்ளது.

4. அரசாங்க பேருந்து அவ்வப் போது சேவையில் ஈடுபட்டாலும் பாதையின் சீர்கேடினாலும் அடிக்கடி பழுதடைவதும் இப்பகுதி மக்களுக்குப் பெரும் சிரமமாக இருக்கிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக் குறையை நிவர்த்திசெய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஏ.எஸ். தங்கவேல், வேவள்ளி தோட்டம், அக்கரபத்தனை.

# "எனக்கொரு துவக்குத் தாங்கோ!"

மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஜூன் மாத முதல் வாரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களால் களை கட்டியிருந்தது. அங்கு வந்தோரைக் கவர்ந்திழுக்கும் பல்வேறு இயக்கப் பரப்புரைகளைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர். அவற்றில் சில உணர்ச்சிக் கோஷங்கள் இவை:

* "கல்வியும் எங்கள் முலதனம் அதில் கத்தி வைக்கிறது ஆளுமினம்."
* "நானொரு விதவைத் தாய் நடத்துவது சமாதானப்போர்."
* "ஒரு பிடி மண்ணும் உயிரிலும் பெரிது."
* "மழலை மொழியேனும் தமிழாக இருந்தால்..."
* "போருக்குப் படிப்பா படித்திடப் போரா?"
* "சிந்தித்தாலாகுமோ? செயற்பட வேண்டுமே!"
* "அம்மா எனக்குமொரு துவக்குத் தாங்கோ!"
* "உன் சகோதரியைப் பார்! நீ என்ன செய்கிறாய்?"

# புலிகளின் நகர்வு-பொதுமக்கள் அச்சம்!

கிழக்கில் புலி இயக்கத்தினரின் வசமுள்ள காட்டுப் பகுதிகளை நோக்கிய படை நகர்வுக்குத் திட்டமிட்டவுடனேயே புலிகள் அதனை முன்கூட்டியே அறிந்து தமது தளங்களைக் காலி செய்து விட்டனர். புலிகள் இவ்விதம் காலி செய்து நகர்வதைக் கண்டபொது மக்கள் ஏதோ விபரீதம் நடக்கப் போவதையுணர்ந்து- முன்னேற்பாடாக எல்லைப் புறங்களிலிருந்தும், புலிகளின் தளங்களை அண்டியுள்ள பகுதிகளிலிருந்தும் தமது முட்டை முடிச்சுக்களுடன்- பாதுகாப்பான இடங்களாக அவர்கள் கருதிக்கொள்ளும் மக்கள் கூடிவாழும் பகுதிகளுக்கு நகர ஆரம்பித்துள்ளனர்.

இம்முறை கரும்புலிகள் தினத்திற்குச் சில நாட்களுக்கு முன்னர் கிழக்கில் புலிகளைக் கலைக்கும் நடவடிக்கையைப் படையினர் மேற்கொண்டுள்ளனர். இதனால் புலிகள் நகருக்குள் ஊடுருவி தாக்குதல்களை நடத்தக்கூடும். குறிப்பாக கரும்புலித்தினமான ஜூலை 05ம் திகதி கரும்புலித் தாக்குதல்கள் திட்டமிடப்பட்டிருக்கலாம் என எச்சரிக்கையுடன் நோக்கப்பட்டாலும் அவ்வாறான தாக்குதல்கள் எதுவும் இவ்வாண்டு கரும்புலித் தினத்தில் இடம் பெறவில்லை.

# மாகாண சபைத் தேர்தலும் மலையக மக்கள் முன்னணியும்

மலையக மக்கள் முன்னணி முன் வைத்த பின்வரும் கோரிக்கைகளை 'இந்திய வம்சாவளி மக்கள் பேரணி' ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் ம.ம.முன்னணி நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் தனித்தே போட்டியிடத் தீர்மானித்துள்ளது. அதன் கோரிக்கைகள் பின்வருமாறு:

1. மலையகத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதான தனியான மாகாண நிர்வாக அலகு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டத்துக்கு பேரணி ஒத்துழைக்க வேண்டும்.

2. மலையகத் தமிழ் மக்கள் செறிவாக வாழும் மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள், பிரதேச சபைகள் உருவாகுவதற்கு பேரணி வழிகோலவேண்டும்.

3. மலையகத்திற்கு தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக் கழகம் என்பன நிறுவுவதற்கு அரசாங்கத்தை பேரணி வற்புறுத்தவேண்டும்.

4. மலையகத் தமிழ் மக்களின் கல்வித் தாராதரத்தினை கவனத்தில் கொண்டு விகிதாசாரத்திற்கேற்ப அரசாங்க உத்தியோகங்கள் வழங்க அரசினைத் தூண்டவேண்டும்.

5. மலையக இளைஞர்களின் கைதுகள் பற்றியும் அவர்களின் புனர் வாழ்வு தொடர்பான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த பேரணி செயற்படவேண்டும்.

6. பேரணியின் பெயரானது 'மலையகம்' என்ற சொற்பதம் தாங்கியிருக்க வேண்டும். முதன்மை வேட்பாளர் என்ற ஒருவர் இனங் காணக் கூடாது. பேரணிக்குள் எந்தவொரு அமைப்புக்கும் விசேட முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.

தற்போதைய நிலையில் மலையக மக்கள் முன்னணியானது மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால்தான் ம.ம.முன்னணி மலையகத்தில் தொடர்ந்து வளர்வதற்கு ஏதுவாயிருக்கும் என்று ம.ம.முன்னணியினர் கருதுகின்றனர்.

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவை.


SPOKEN ENGLISH

BY K. M. N. NALRAVI

இப்பொழுது வெள்ளவத்தையில்

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 18 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப் பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: பழைய மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பம்.

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Col - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)



விளம்பரப் பகுதி

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218



நீங்களும் நடனம் ஆட வாருங்கள்!

உங்கள் ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய இப்பொழுதே முன்வந்து சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்

அ.அ. இல W/A 10328
D. S. INN DANCING ACADEMY

ஆதரவில்
7 மாத பாடத்திட்டத்தில்,
✱ டிஸ்கோ ✱ ரொக் ✱ ஜேஸ் ✱ ஜேவ் ✱ றெப் ✱ பெலே ✱ பரத நாட்டியம் மற்றும் இந்திய திரைப்பட நடனம்,
★ மேற்கெத்திய நடனம்,
★ தமிழ் ★ இந்தி ★ சிங்கள திரைப்பட பாடலுக்கேற்ப நடனம் பயிற்றுவிக்கப்படும்.

பயிற்றுனர் அனைவரினதும் அபிமானம் பெற்ற திரு. தினும் சேனாதீர அவர்களினால் பயிற்றுவிக்கப்படும்.

பாடத்திட்டத்திற்கான விதிமுறைகள்
✚ இப்பாடத்திற்கு வயதெல்லை கிடையாது
✚ திறமையானவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்
✚ திறமையானவர்கள் '51வது நிகழ்ச்சியில் D. S. INN SUPER DANCE ஆதரவில் தொலைக்காட்சி மற்றும் இலங்கையில் தயாராகும் திரைப்படங்களுக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மேலதிக விபரங்களை கீழ் காணும் இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.
ஜூலை மாதம் 19ம் திகதி ஞாயிறு தொடக்கம் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு கோட்டை Y.M.C.A. மண்டபத்தில் நடைபெறும்.
ஜூலை மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எல்லா செவ்வாய்க்கிழமைகளிலும் பிற்பகல் 3.30 மணிக்கு கல்கிசை, டொட்டிகொடெல்ல வீதியில் அமைந்திருக்கும் Y.M.C.A மண்டபத்தில் நடைபெறும்.
ஜூலை மாதம் 25ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் எல்லா சனிக்கிழமைகளிலும் பிற்பகல் 2.30 மணிக்கு ரத்மலானை செல்பன் சந்தியில் அமைந்துள்ள ...



மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.



மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை முலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை முலம் நீக்கி புத்துயிர் பெற்று நீங்களே உங்களை வெல்லுங்கள்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை தீர்க்க வழியின்றி தவிக்கத் தேவையில்லை. வெட்கத்தை விட்டு முழுவிபரங்களையும் கடிதமூலம் விளக்கி எழுதவும். எமது கேள்விகளுக்கு பதில் தெரிந்தபின் பதிவு நாடாமூலம் தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சையும், உடல் குறைபாடுகளுக்கு மருந்தும் அளித்து பூரண சுகமடையலாம். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆச்சரியப்படும் வகையில் சுகமாகியுள்ளனர். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்)

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாக குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்துக்கு: கொழும்பில் 5 நாட்கள் மட்டும்.

கொழும்பில் ஜூலை 19 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் NO-072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

கல்முனையில் ஆகஸ்ட் 8,9 மட்டும்
T.M.M. பாமஸி T.P. - 065-28329

வவுனியாவில் ஆகஸ்ட் 15,16 மட்டும்
வவுனியாவில் (2ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P.024-22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில்
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.



Metro College International

புதிய பிரவேசங்கள்

நடைபெறும வகுப்புக்கள்
Nursery முதல் London (A/L) வரை
புதிய கல்வியாண்டு ஆரம்பம் Sep. 2 1998.

- புத்தம் புதிய நவீன விஞ்ஞான ஆய்வுகூடம்.
- அதி நவீன Computer களை கொண்ட ஆய்வுகூடம்.
- 'வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு குறுகிய காலப்பயிற்சிகள் வழங்கப்படும்.
- கடந்த இரண்டு London (O/L) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைத்தந்த பாடசாலை.
- இலகுவான தவணைக்கட்டணம்.

மேலதிக விபரங்கட்கு :


M.C.I.
ORA ET LABORA

Mr. K. Arunasalam.
(Principal)
Metro College International
No 17, Charlimont Road,
Wellawatte.
T.P : 074-511164.





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்யவதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831




படிப்பகம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வன்னிக் களத்தில்

## முதுகெலும்பான கிழக்கு அணி

மாங்குளம் நகரை கைப்பற்றுவதை விட அதனை சுற்றிவளைப்பதே நோக்கம் என்று முன்னாள் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க கூறியிருக்கிறார்.

மாங்குளத்தை நேரடியாக கைப்பற்றும் முயற்சி கைகூடவில்லை. அதனால் வன்னி, யாழ் சாலையின் இருபுற உட்பாதைகள் வழியாக மாங்குளம் நகரை மேவிச் செல்ல படையினர் முயற்சிக்கின்றனர் என்பதை தணிக்கைக்கு முன்பே கூறியிருந்தோம்.

அதனைத்தான் பிரிகேடியர் சரத் முனசிங்காவும் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

மூன்று மைல் விட்டம்கூட இல்லாத மாங்குளம் பிரதேசத்திற்கு முன்னேறி முடிக்க கிட்டத்தட்ட ஆறுமாதங்களாகியும் முடியவில்லை. வளைக்க, வளைக்க மாங்குளம் வழுவிக் கொண்டிருக்கும் அதிசயம் என்ன? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

'ஜயசிக்குறுய்' களமுனைத் தளபதியாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முன்னாள தளபதி கருணா அம்மானை பிரபாகரன் நியமித்திருக்கிறார்.


கருணா அம்மான்


புலிகளின் பெண்கள் அணி

சமர்களுக்கு எல்லாம் தாய்ச் சமர் என்று புலிகளால் அழைக்கப்படும் 'ஜயசிக்குறுய்' சமரை எதிர்கொள்ளும் பாரிய பொறுப்பை கருணா ஏற்றுள்ளார்.

கிழக்கின் பெண்கள் அணிப்பிரிவும் ஜயசிக்குறுய் களத்தில் நிற்கிறது. புலிகளது பெண்கள் அணியில் முக்கிய தளபதிகளில் ஒருவராக இருப்பவர் செல்வி சப்பதகி. மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

இவரது தலைமையில் தான் பெண் அணியினர் மட்டக்களப்பில் இருந்து புறப்பட்டு கால் நடையாக உட் பாதைகள் வழியாக வன்னிக் களத்திற்கு சென்றனர்.

அவ்வாறு செல்லும் போது இடைநடுவே படை யினருடன் ஏற்பட்ட மோதலில் முகிலா என்னும் பெண்புலி பலியானார். 60 எம்.எம். மோட்டார் இயக்குவதில் சிறப்பு தேர்ச்சி பெற்றவர் முகிலா.

"புலிகளின் படையணிகளில் கிழக்கு அணிகள் முக்கிய பாத்திரம் வகிக்கத் தொடங்கியுள்ளன. பிரதான தளப் பிரதேசத்தை பாதுகாப்பது, தமிழ் பேசும் தரப்பின் பலத்தை குறிவைக்கும் இராணுவ நகர்வுக்கு பதிலடி கொடுப்பது ஆகிய பிரதான கடமைகளுக்கு கிழக்கு அணிகளே தோள் கொடுக்கின்றன" என்கின்றனர் புலிகள்.

தமிழர் போராட்டம் வடக்கு மக்களின் போராட்டம் என்ற சித்தரிப்புக்களுக்கு புலிகளின் படையணிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மரண அடி கொடுக்கத் தொடங்கியுள்ளன. "புலிகளின் பலத்தையும், தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தின் பலத்தையும் ஒரு சேர தக்கவைக்கும் தாய்ச்சமரில் கிழக்கு அணிகளின் பங்கு முதுகெலும்பு போன்றது" என்று பிரபாகரனே மனம் திறந்து பாராட்டியதாகக் கூறுகிறார்கள்.

வன்னிக் களத்தில் நடைபெற்ற மிக முக்கியமான தாக்குதல் மற்றும் தற்காப்புச் சமர்களில் கிழக்கு அணிகள் குறிப்பாக பெண்கள் படையணிகளே பிரதான பாத் திரம் வகித்தன.

கடந்த வருடம் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் சண்டையில் ஆயுதக் களஞ்சியத்தை முதலில் கைப்பற்றியதே கிழக்கின் மகளிர் படையணியினர்தான்.

முக்கியமாக வன்னிக்களச் சண்டையில் மகளிர் படையணியின் பாத்திரம்தான் பல சண்டைகளின் வெற்றி தோல்விகளைத் தீர்மானித்திருக்கிறது.

வன்னியில் இருந்தும், கிழக்கில் இருந்தும் புதிய பெண் உறுப்பினர்களும் பெருமளவில் சேர்ந்து வருகின்றனர்.

யாழ் குடாநாட்டில் இருந்தும் மாணவிகள் பலர் புதிதாக சேர்ந்துள்ளனர். சமீபத்தில் நெடுந்தீவில் இருந்து ஐந்து மாணவிகள் புலிகளுக்கு போய்விட்டதாக படையினருக்கு தகவல் எட்டியுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலைக்கு சென்று ஆசிரியர்களிடம், "நீங்கள் படிப்பித்த பிள்ளைகள்தானே புலிகளுக்கு போயிருக்கிறார்கள்." என்று கூற, ஆசிரியர்கள் அரண்டு போனார்களாம்.

ஒரு வருடமும் இரண்டு மாதங்களும் கடந்துவிட்ட 'ஜயசிக்குறுய்' சமர் புலிகளின் பெண்கள் அணிகளை அனுபவம்மிக்க சண்டை அணிகளாக மாற்றியுள்ளன.

மகளிர் படையணி தளபதிகளில் ஒருவரான விதுஷா ஒரு பேட்டியில் பின்வருமாறு கூறியிருக்கிறார்: "எமது படையணிகள் பாரியளவிலான வலிந்த தாக்குதலை சந்தித்தது யாழ்ப்பாணம் சூரியக்கதிர் சண்டையிலாகும்.

அந்தச் சண்டையின்போது எமது அணிகளின் ஒவ்வொரு காவல் அரணையும், ஒவ்வொரு பதுங்கு குழியையும் அமைப்பதற்கு நேரடியாக நின்று நாம் வழிகாட்ட வேண்டியிருந்தது.

ஆனால் ஒரு வருடகாலமாக நடைபெறும் 'ஜயசிக்குறுய்' சமரில் இந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது.

சண்டை எந்தப் பக்கம் நடக்கிறதோ அந்தப் பக்கம், அதற்கேற்ற வகையில் பதுங்கு குழிகள், காப்பரண்கள் அமைக்க வேண்டிய இடத்தை அவர்களே தீர்மானிக்கிறார்கள்.

வழமையாக கடுமையான பயிற்சி கொடுக்கப்படுவதன் மூலமே ஒரு இராணுவம் பலமாக வளர்க்கப்படும்.

ஆனால் எமது போராளிகள் களத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் குறைந்தளவு பயிற்சியுடன், பலமாக, உறுதியாகச் செயற்படுகிறார்கள். இங்கே அவர்களை அவர்களின் மன உறுதிதான் வளர்த்திருக்கிறது!" என்று கூறியிருக்கிறார் விதுஷா.

'புலிகளின் பலத்தை அழிப்பதே எமது நோக்கம்' என்று படைத் தரப்பினர் கூறியுள்ளனர். முன்னர் தரைப்பாதை திறப்பதே முக்கிய நோக்கம் என்று கூறப்பட்டது.

மாதங்கள் உருளும் வேகத்தில் கூட வன்னிக்களத்தில் 'ஜயசிக் குறுய்' நகர்வுகள் இல்லை என்பது இரகசியமல்ல. 'மெதுவாக ஆனால் உறுதியாக' என்று இதனை வியாக்கியானம் செய்கிறது படைத்தரப்பு.


பதுங்கு குழி வெட்டப்படுகிறது

மெதுவாக ஆனால் உறுதியாக பொறிக்குள் கால் வைத்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வும் இருக்கத்தான் செய்யும்.

நோக்கங்கள் அடிக்கடி மாற்றிக் கூறப்படுகின்றன. காலவரையறைகள் அடிக்கடி மாறிக் கூறப்பட்டுள்ளன. அதிகாரிகள் பலர் மாற்றப்பட்டுள்ளனர். படைக்கல வசதிகளும் ரகங்களும் மாற்றப்பட்டன.

வெளிநாட்டு பயிற்சி பெற்ற விசேஷ கொமாண்டோக்களும் பல்வேறு தேர்ச்சி கொண்ட அணிகளும் களமுனையில் நிற்கின்றன. இவை எல்லாம் பகிரங்கமாக தெரிந்த உண்மைகள். இவற்றைவிட தெரியாதவை, தெரிந்தும் சொல்லத் தடை உள்ள வசதிகள், வளங்கள் படையினரிடம் உள்ளன.

நாட்டின் மிக உயர்ந்த மருத்துவ சேவைகளில் படையினருக்கு முன்னுரிமை. கொழும்பு பொது மருத்துவமனை உட்பட முக்கிய மருத்துவமனைகள், படையினருக்கு சிகிச்சை தர 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளன.

மறுபுறத்தில் புலிகளுக்கு இத்தனை வசதிகள், வளங்கள் இல்லை. காயப்பட்ட தம் உறுப்பினர்களை அவர்கள் பராமரிப்பதும், சிகிச்சை அளிப்பதும், களத்தில் இருந்து காயப்பட்ட உறுப்பினர்களை விரைவாக அகற்ற முடிவதும் புலிகளின் சக்திக்கு மீறிய காரியங்களாகவே உள்ளன.

தமது சக்திக்கு மீறிய காரியங்களை அவர்கள் செய்து முடிக்க உளவியல் ரீதியான பலமே காரணமாக இருக்கிறது.

மேலும் நீண்டகாலச் சமர் ஒன்றுக்கு தம்மை தயார்படுத்துவதிலேயே புலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

காட்டுப்பகுதிகள் மற்றும் உட் பாதைகளில் மிக நீண்ட பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் உதவியும் பெறப்படுகிறது.

சண்டையில் கிடைக்கும் ஓய்வை பயன்படுத்தி பதுங்குகுழிகளை செப்பனிடுவதிலும், மேலும் தற்காப்புக்கும், தாக்குதலுக்கும் ஏற்ற அரண்களை உருவாக்குவதிலுமே புலிகள் ஈடுபடுகின்றனர்.

வன்னிக் களத்தில் கிழக்கின் அணிகள் முக்கிய பாத்திரம் வகிப்பதை படைத் தரப்பினர் அறியாமல் இருக்க மாட்டார்கள்.

கிழக்கில் போர்முனை ஒன்றை படையினர் திறந்துள்ளதற்கும், அந்த அறிதலுக்கும் இடையே தொடர்பு இருக்கிறதா இல்லையா? என்பதை கேள்விக்குறியாகவே விட்டு விடுவோம்.

புலிகள் தற்போதைய காலகட்டத்தில் வன்னிச் சமர் தாய்ச்சமர் என்றும், ஒட்டு மொத்தமான பலத்தை தீர்மானிக்கும் களம் என்றும் முடிவு கட்டியிருப்பதால் தங்கள் அணிகளை கிழக்கில் பாரிய சண்டைகளுக்கு உடன் அனுப்பவில்லை.

வன்னிக்களத்தில் நிற்கும் கிழக்கின் பிரதான அணிகள் உடனடியாக கிழக்கு நோக்கித் திரும்பமாட்டா என்பது தெளிவு.

தளப்பிரதேசம் பெரிதா? கெரில்லா பிரதேசம் பெரிதா?

தளப்பிரதேசம் இருந்தால்தான் யுத்தத்தை அங்கிருந்து வழிநடத்துவது சுலபம். விநியோகமையம், தலைமை, மற்றும் மருத்துவமனைகள் போன்ற அனைத்தையும் கொண்ட தளப்பிரதேசம் இதயம் போன்றது. எனவே இதயத்தை காப்பதில் தான் புலிகள் முதல் கவனம் செலுத்துகின்றனர்.

கிழக்கில் புலிகளின் அணிகளுக்கும் ஷெல் வீச்சுக்களால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சமீபத்தில், புலுக்குணாவையில் ஷெல் தாக்குதலில் 11 புலிகள் பலியாகியுள்ளனர். கூட்டமாக நடமாடினால்தான் ஷெல் தாக்குதலில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் பலியாக நேரும்.

முன்னர் செங்கலடி புளொட் முகாம் தாக்குதலின் பின்னரும் ஷெல்வீச்சால் புலிகள் பலியாகினர். கூட்டமாக ட்ரக்டர் பெட்டியிலும், அதன் அருகிலும் சென்ற போதே அவர்கள் மத்தியில் விழுந்த ஷெல் பாரிய அழிவை உண்டாக்கியிருந்தது.

தாக்குதலின் பின்னர் விழிப்பு இல்லாமல் தளம் நோக்கி திரும்பிய போதே செங்கலடி, புலுக்குணாவ இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

**நாரதர்**

படையினர் கிழக்கில் புதிதாக நிலை கொண்டுள்ள பகுதிகளில் திடீர் தாக்குதல்களில் புலிகளின் அணிகள் ஈடுபடக் கூடும்.

நிலைகொள்ள முன்னர் தாக்குவது ஒரு முறை, நிலைகொண்ட பின்னர் தகவல் அறிந்து, தடம் அறிந்து தாக்குவது இன்னொரு முறை.

இரண்டாவது முறையை கிழக்கில் புலிகள் கையாளப்போகின்றனர். ●

## சொந்த மைதானம் கையிலே வெற்றி

விளையாட்டு அலசலை நிறுத்த வேண்டாம் என்று ஏகப்பட்ட கடிதங்கள். அதனால் அலசல் தொடர்கிறது.

ஃபிரான்ஸ் அணி கால்பந்து உலகக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

வெற்றி நிச்சயம் என்று களம் இறங்கியது பிரேஸில் அணி. பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் எல்லாம் பிரேஸில் அணி பிளந்து கட்டும் என்று கூறின. கூறின, கூறிக் கொண்டே இருந்தன. கள நிலவரத்துக்கு முற்றிலும் மாறான தகவல்களே கூறப்பட்டன.

தாக்குதல் ஆட்டத்திலும் தற்காப்பு ஆட்டத்திலும் வல்லவர்கள் என்று பிரேஸில் அணியைப் பற்றி பாராட்டினர்.

ஆனால் இறுதியில் என்ன ஆனது?

பிரேஸில் அணி முன்னேற முற்பட்ட இடத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டது. சொந்த மைதானம். மக்களின் நெருக்கமான ஆதரவு காரணமாக ஃபிரான்ஸ் அணிக்கு தனிப்பலம் வந்துவிட்டது. அதிரடி ஆட்டம் ஆடியது.

பல முனைகளால் முன்னேறி ஃபிரான்சின் தற்காப்பு அரண்களை உடைக்க பிரேஸில் முயன்றபோதும், கோல் போஸ்ட்டுக்களை மட்டும் நெருங்க முடியவில்லை. ●

## அதிரடி அய்யாத்துரை



***யாழ் குடாநாட்டில்*** தமிழ்க் கட்சி ஒன்று இன்னொரு கட்சியைத் தாக்குவதற்காக பிஸ்டல், வாள் போன்ற ஆயுதங்களைக் கொண்டு சென்று வடமராட்சிப் பகுதியில் மறைத்து வைத்திருந்ததாம். பொது மக்கள் கண்டு தகவல் கொடுத்ததால் மாட்டுப்பட்டுப் போச்சுதாம்.

**வடக்கு-கிழக்கு** மாகாண கல்வி தொடர்பானவரை அதிலிருந்து புரட்டுவதற்கு முக்கிய தடையாக இருந்தவர் கூட்டான கட்சியின் நீலத்தார்தானாம். நேரில் சென்று சந்திக்கும் ஆசிரியைகள் சிலருக்கு உடனே கேட்கும் உதவிகளை செய்து கொடுப்பாராம். புட்டிகள்மீதும் தனிப்பிரியம் கொண்டவராம். துட்டும் அள்ளக்கூடியவர் என்று ஏகப்பட்ட புகார்கள் இருக்கின்றனவாம். ரெண்டு எழுத்தாருக்கும் தோதாகவும் நடித்தபடி கடிக்க வேண்டியதை கடித்து பசியாறுகிறார் என்றும் கூறப்படுகிறது. அத்தனை தகுதி இருப்பதால்தான் நீலமானவர் அவருக்கு சிபாரிசு செய்தாராக்கும்!

***யாழ்ப்பாணத்திலும்*** தொலைபேசி சேவைகள் வந்தவுடன் வெளிநாட்டில் உள்ள எங்கள் ஆட்களுக்குத்தான் கவலை. இங்கிருந்து எடுத்து நம்பரைக் கொடுத்து எடுக்கச் சொல்லிப்போட்டு வைச்சுப் போடுவினம். அங்கிருந்து எடுத்தால் இங்கிருந்து மணிக்கணக்காக அறுவைக் கச்சேரி. அங்கே மீட்டர் ஏறும். கனடா நண்பர் ஒருவர் சொன்னார்: "நாங்கள் இங்கு அழிவதே ஃபோனால்தான்." இங்கு டெலிகொம் மாதிரி அங்கு பெல் கனடா. அந்த நண்பர் மேலும் சொன்னார்: "பெல் கனடாவின் ஒரு பக்க பெரும் சுவர் கட்டினதே எங்கள் ஆட்களின் பணத்தில்தான்!"

**பச்சை அணிக்குள்** எப்படியாவது பிளவை உண்டு பண்ணத்தான் நீல அணியினர் ஒற்றைக்காலில் நிற்கினம். அதிகாரதரப்பு பிரசார சாதனங்கள் மும்முரமாக செய்திகள் வெளியிடுகினம். எதிர் அணியைப் பிளக்க இப்படி ஆவலாக இருந்துகொண்டு 'பொது இணக்கம் காண வாரீர் வாரீர்!' என்றால் எவர் வருவாரோ? 'விடிய விடிய ராமர் கதை விடிந்த பிறகு சீதை ராமருக்கு என்ன முறை?' என்ற கதையாக, தமிழ்க் கட்சிகள் போய் இரு தரப்பிடமும் ஒற்றுமைப் படலம் பேசுவினம்!

**இலண்டனில்** உள்ள ரெண்டு எழுத்தாரின் அலுவலகப் பெயர் 'ஈழம் ஹவுஸ்.' இலங்கைத் தூதரகத்தைவிட கச்சிதமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறதாம். சகல தகவல்களும் விரல் நுனியில்! ஆவணங்களுடன் ஆதாரபூர்வமாக தகவல்கள் வைத்துள்ளனராம்!

**'அன்னபூரணி' புகழ்** ஈ.கே.ராஜகோபால் இலண்டனில் இருந்து ஈழகேசரி கொண்டுவந்தவர். இடையில் நின்று போனது. மீண்டும் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ளாராம். வெளிநாடுகளில் நம்மவர்களால் பத்திரிகை முயற்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் பற்பல தோன்றுவது நன்று. ஆயிரம் பூக்கள் மலரட்டும்!

***யாழ்ப்பாணத்தில்*** சந்திக்குச் சந்தி இராணுவத்தினர் நிற்பதை சகிக்க முடியாத மாதிரி போட்டார் பாருங்கோ ஒரு போடு. இராணுவத்தினர் சந்திக்கு சந்தி நின்றபடியால்தானே இவை துணிந்து உள்ளேயே போனவை. படை எப்போ பிடிக்கும், நாங்கள் எப்போ கடை விரிக்கலாம்? என்று காத்திருந்து விட்டு இப்படிக் கூறலாமோ? சரி போகட்டும்: யாழில் தங்கள் அலுவலகத்திற்குள்ளுமல்லோ இராணுவத்தினரை கூப்பிட்டு வைச்சிருக்கினம். பிடிக்கவில்லை என்றால் ஏன் கூப்பிட்டு வைச்சிருக்கினம். நகரபிதாவே நா தவறலாமோ?

**கரும்புலித் தினத்தன்று** குறி வைக்காமல் சில நாட்கள் சென்று குறிவைக்க முற்படலாம் என்று கருதப்பட்டதோ தெரியவில்லை. அம்மையார் ஒரு வாரகாலம் வெளியே தங்கியதற்கு அதுவும் ஒரு காரணமோ? முக்கிய அமைச்சர்களுக்குக்கூட வானொலிச் செய்தி கேட்டுத்தான் வெளிநாட்டு பயண விவகாரம் தெரிய வந்ததாம்! அமைச்சர் ஒருத்தர் மிக்க ஆதங்கப்பட்டாராம்.

***ஜனநாயகக் கட்சித்*** தலைவரை பார்வையிடச் சென்ற இருவர் சந்தேகத்தில் உளவுப் பிரிவினரால் துருவப்பட்டனராம். "82ம் ஆண்டில் இருந்து அவரைத் தெரியும். திருமலையில் சந்தித்தோம்!" என்றனராம். 82ல் அவர் இருந்தது வெலிக்கடைச் சிறையில். கட்சியினர் சந்தேகப்பட்டு உளவுப் பிரிவினருக்குக் கூற, அவர்கள் கைது செய்து விசாரிக்கக் கூட்டிப் போனார்களாம். அந்த இருவரும் சிங்கள இளைஞர்கள்.

***யாழில் தீவுப்பகுதியில்*** சில பகுதிகளை நீல உடையினர் வசம் ஒப்படைத்து பச்சை உடையினர் சென்றனர். அப்படிச் செல்லும் போது பெருந்தொகையான தளபாடங்கள் பெறுமதியான உபகரணங்கள் என்பவற்றை அரச அதிபரிடம் ஒப்படைத்தனராம். அத்தனையும் பொதுமக்களின் உடமைகள். ரீ.வி., ஃபிரிட்ஜ், டெக் என்று பலரகப்பட்டவை.

***திருவான மலையில்*** மாணவர்களை சீருடையினர் தாக்கினார்கள் அல்லவோ? பொதுஜனம் என்ன கூறியதாம் தெரியுமோ? "அடித்து அடித்து ரெண்டு எழுத்தாரிடம் துரத்துகினம். உவைதான் ஆள் சேர்த்துக் கொடுக்கினம்!" சரியான அபிப்பிராயம்தான்.

***சிறைகளுக்குள்*** பாதுகாப்பு வழங்க தனிப்பிரிவு அமைக்கப்பட உள்ளதாம். சிறைக்கு பாதுகாப்பு வழங்குவதோ பிரச்சனை? சிறைக்குள் இருக்கிறவைக்கு பாதுகாப்பு வழங்குவதுதானே இயலாத காரியமாக இருந்திருக்கிறது.

**இவ்வாரப் பொன்மொழி:**

**"படுக்கச் செல்வதற்கு முன்பாக கவலைகள் அனைத்தையும் செருப்போடு கழற்றி வைக்கவேண்டும்!"** ■




## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

# பத்மநாபா படுகொலை உள்ளிருந்து போன தகவல்கள்

எழுதுவது அற்புதன்

ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட எவரும் தமிழகத்துக்கு வரக்கூடாது என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார்.

"அவர்கள் இங்கு வந்தால் தங்களுக்குள் மோதிக் கொள்வார்கள். போராளிக் குழுக்களுக்கு இடையே மோதலைத் தவிர்க்கவே அவ்வாறு கூறுகிறேன்" என்றார் கலைஞர்.

உண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். மீது இருந்த கசப்பினாலும், புலிகள்மீது அவருக்கு ஏற்பட்டிருந்த அபிமானத்தாலுமே அவ்வாறு கூறியிருந்தார்.

ஆனால் தனது கூற்று தீர்க்கதரிசனமான கூற்றாக மாறப்போகிறது என்பதை அவரே அப்போது அறிந்திருக்கவில்லை.

இந்தியப் படை விமானத்தில் ஒரிசா சென்ற பத்மநாபா அங்கு தங்கிவிட்டு புறப்பட்டார்.

அவரது புறப்பாடு பற்றி இந்திய மத்திய அரசுக்கோ, அல்லது தமிழக அரசுக்கோ தெரிந்திருக்கவில்லை.

திடீர் திடீர் என்று ஏதாவது முடிவெடுப்பது என்பது பத்மநாபாவின் அணுகுமுறைகளில் ஒன்று. முக்கியமான சக தோழர்களது கருத்தையும் மீறி சில சமயங்களில் முடிவெடுக்கும் பழக்கம் இருந்தது.

சொந்த பாதுகாப்பு விடயத்திலும் இயக்க பாதுகாப்பை மீறி தனியாக மோட்டார் சைக்கிளில்கூடச் செல்வதுண்டு.

இதனை பிரபாகரனே ஒரு தடவை சுட்டிக்காட்டி 'தனியாகத் திரிய வேண்டாம்' என்று கூறியிருந்தார். அப்போது புலிகளுடன் ஐக்கியமாக இருந்த காலம்.

இந்தியப் படையுடன் இணைந்து புலிகளுடன் சவாலுக்கு நின்று, புலிகளால் குறிவைக்கப்பட்டது தெரிந்த பின்னரும் பத்மநாபா தனது பாதுகாப்பில் முன்னைய அலட்சியத்தை காட்டியதுதான் புலிகளின் குறிக்கு வாய்ப்பாக அமைந்தது.

அது மட்டுமன்றி இரகசியம் காப்பதில் கவனம் இல்லாத இயக்க நடவடிக்கைகளும் பத்மநாபா கொலைக்கு காரணமாக அமைந்தன.

### பின்னணி

பத்மநாபா கொலையின் பின்னணித் தகவல்களை இப்போது பார்க்கலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். இயக்கத்தின் காரியாலயம் சென்னை ஜக்காரியா காலனியில் இருந்தது.

அதன் அருகே இருந்த தொடர்மாடிக் கட்டடம் 'பவர் அப்பார்ட்மெண்ட்' என்று அழைக்கப்படும். அதன் அருகே இருந்த மற்றொரு அப்பார்ட்மெண்ட்டின் பெயர் கமலா அப்பார்ட்மெண்ட்.

பவர் அப்பார்ட்மெண்ட்டில் நாலு மாடிகள். நாலாவது மாடியில் இருந்த வீடொன்றை ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். பரந்தாமன் (ஞானம்) வாடகைக்கு அமர்த்தி தன் குடும்பத்தினருடன் தங்கியிருந்தார்.

பத்மநாபாவின் தனிப்பட்ட செயலாளராகவும் பரந்தாமன் பணியாற்றியதால் அவ்வீடும் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். இயக்க குட்டி அலுவலகம்போல மாறியது.

பத்மநாபா முதல் இயக்க முக்கியமான தோழர்கள் பவர் அங்கு சென்று வருவர். ஒரு தடவை ' ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப்., ஈரோஸ், ரெலோ ஆகிய மூன்று இயக்கங்களின் முதல் ஐக்கிய முயற்சிக் கூட்டமும் அந்த வீட்டில்தான் நடந்தது.

எனவே 1984 முதல் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். வீடு என்று மிகப் பிரபலமான வீடு அது.

இத்தனைக்கும் அந்த வீடு பாதுகாப்பு ரீதியில் ஆபத்தானது. முன்புற கதவைத் தவிர வேறு எந்த வழியும் வெளியேறிச் செல்வதற்கு கிடையாது.

குறிப்பிட்ட வீட்டை இயக்க நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டாம்.' என்று 1985ல் நடைபெற்ற இந்திய பிராந்தியக் கமிட்டிக் கூட்டத்தில் டேவிற்சன், மித்திரன், ரமேஷ் ஆகியோர் பத்மநாபாவிடம் நேரிலேயே விமர்சனம் தெரிவித்தனர். அக்கூட்டத்தில் வரதராஜப் பெருமாளும் அதே கருத்தையே கூறியிருந்தார்.

விமர்சனத்தை ஏற்றுக்கொண்டபோதும், அதனை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை.

இந்தியப்படை காலத்தில் பரந்தாமனும் குடும்பத்தினரும் கனடா சென்றுவிட, அவ்வீடு ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். பொறுப்பில் இருந்தது.

ஒரிசா சென்ற பத்மநாபா, வரதராஜப் பெருமாள் ஆகியோர் எப்படியாவது சென்னை வருவர். அப்படி வரும்போது தீர்த்துக் கட்டவேண்டும் என்று புலிகள் முடிவு செய்தனர்.

சென்னையில் இவர்களைத் தீர்த்துக் கட்டும் நடவடிக்கைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொறுப்பு சிவராசனிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் உடுப்பிட்டி பொறுப்பாளராக இருந்தவர் சிவராசன். சந்திரசேகரம்பிள்ளை மாஸ்டரின் மகன். சண்டை ஒன்றில் ஒரு கண் பாதிக்கப்பட்டதால் ஒற்றைக்கண் சிவராசன் என்று அழைக்கப்பட்டார்.

### கண்காணிப்பு

சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். அமைப்புக்கு என்று இரகசிய தங்குமிடங்கள் வேறு கிடையாது. இரகசியமாக இருந்தாலும் தமது நடவடிக்கை மூலம் ஒரு வாரத்திற்குள் பரகசியமாக்கிவிடுவர்.

பத்மநாபா, வரதராஜப்பெருமாள் ஆகியோர் சென்னை வந்தால் எங்கெங்கு செல்லக்கூடும் என்பதை அறிந்து அந்த பகுதிகளை சிவராசன் நேரில் சென்று கண்காணித்தார்.

பத்மநாபாவின் மனைவி ஆனந்தி. இந்தியப்படை காலத்திலேயே இவர்கள் திருமணம் நடந்தது. காதல் கல்யாணம்.

ஆனந்தி இந்தியாவில் கேரளத்தைச் சேர்ந்த பெண். அவரது வீடு சூளைமேடு வகாப் தெருவில் இருக்கிறது. அந்த வீட்டுக்கு சற்றுத் தள்ளித்தான் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். அமைப்பின் முதலாவது சென்னைக் காரியாலயம் இருந்தது. அப்போது (1980 களில்)தான் காதல் மலர்ந்தது.



சிவராசன்

பத்மநாபா சென்னை வந்தால் ஆனந்தி வீட்டில் தங்கவேண்டும், அல்லது பவர் அப்பார்ட்மெண்ட்டுக்கு வந்து தங்க வேண்டும்.

பவர் அப்பார்ட்மெண்ட்டுக்கு முன்பாக உள்ள வீடொன்றில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ராஜசுலோசனா என்னும் பெண்மணி தங்கியிருந்தார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை போலாகிவிட்டது சிவராசனுக்கு.

அப்பெண்மணியை முன்பே தெரியும் என்பதால், அங்கு வந்துபோகும் சாக்கில் பவர் அப்பார்ட்மெண்ட் பகுதியையும், அங்கு மாடியில் உள்ள வீட்டையும் நோட்டமிட வாய்ப்பாகிவிட்டது.

அப்படி வந்து போன சிவராசனுக்கு இன்னொரு எதிர்பாராத சந்திப்புக் கிடைத்தது.

பவர் அப்பார்ட்மெண்டுக்கு அருகில் உள்ள கமலா அப்பார்ட்மெண்ட்டில் உடுப்பிட்டி இளைஞர் ஒருவர் தங்கியிருந்தார். சுதந்திர ராஜா என்பது அந்த இளைஞனின் பெயர். அவரைத்தான் ஏதேச்சையாக சந்தித்தார் சிவராசன்.

அந்த சுதந்திரராஜாதான் பின்னர் சின்ன சாந்தன் என்றழைக்கப்பட்டார்.

உடுப்பிட்டியில் இருந்தபோது புலிகள் இயக்க தீவிர அனுதாபியாக சிவராசனின் சகோதரருடன் சேர்ந்து திரிந்தவர் சின்ன சாந்தன்.

தொழில்நுட்ப கல்வி கற்பதற்காக சென்னை சென்று கமலா அப்பார்ட்மெண்டில் தங்கியிருந்தார்.

### உளவாளி

சின்ன சாந்தனைக் கண்டதும் அவருடன் சில சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொண்ட சிவராசன்: "அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் தெரியுமா?" என்று ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். வீட்டை காண்பிக்க, சின்ன சாந்தனுக்கும் தெரிந்திருந்தது.

அந்த வீட்டை கண்காணிப்பது, பத்மநாபா, பெருமாள் ஆகியோர் வருகிறார்களா என்ற தகவலை அறிய ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். உறுப்பினர்களுடன் சேர்ந்து பழகுவது, தகவல்களை அவ்வப்போது தனக்கு தெரியப்படுத்துவது ஆகிய பொறுப்புக்களை சின்ன சாந்தனிடம் ஒப்படைத்தார் சிவராசன்.

தாராளமாகச் செலவு செய்வதற்கு வேண்டிய பணமும் சின்ன சாந்தனிடம் சிவராசனால் தரப்பட்டது.

ஜக்காரியா காலனி ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். அலுவலகம், பவர் அப்பார்ட்மெண்ட் வீடு, கமலா அப்பார்ட்மெண்ட் ஆகியவை ஒரே பகுதிக்குள் அருகருகே இருந்தமையால் சின்ன சாந்தனுக்கு வேலை சுலபமானது.

ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். கட்டைதாஸ் என்று அழைக்கப்படும் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். ஆதரவாளர் ஒருவர் இருந்தார். நாபா அவரை தன் விசுவாசி என்று நினைப்பார். ஆனால் அவரோ கதைக்கத் தொடங்கினால் முழுப் பொட்டுக் கேட்டையும் போட்டு உடைக்கக் கூடியவர்.

கட்டைதாஸ் உட்பட பலரும் சின்ன சாந்தனுக்கு நண்பர்களாகினர். 'தான் படிக்க வந்ததாகவும், பத்மநாபாவை ஒருதடவை பார்க்க ஆசை' என்றும் சின்ன சாந்தன் கூற, அவரைப் பார்க்க தாம் ஏற்பாடு செய்வதாக கட்டைதாஸ் போன்றோர் கூறினர்.



இந்தியப்படைத் தளபதியுடன் பத்மநாபா மறுபுறம் பெருமாள்

இதற்கிடையே சினிமா, மெரீனா பீச், ஹோட்டல்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். உறுப்பினர்கள் பலரை அழைத்துச் சென்று தாராளமாக செலவு செய்தார் சின்ன சாந்தன். தோழர்கள் குளிர்ந்து போனார்கள்.

அந்தக் குளிர்ச்சியிலேயே ஒருநாள் கூறிவிட்டார்கள்: "எஸ்.ஜி. விரைவில் இங்கு வருகிறார். நீங்கள் சந்திக்கலாம்."

செயலாளர் நாயகம் என்பதன் ஆங்கில அர்த்தத்தை சுருக்கி 'தோழர் எஸ்.ஜி' என்று சுருக்கமாகத்தான் பத்மநாபாவை அழைப்பதுண்டு.

ஆனந்தியின் தந்தையின் சஷ்டிய பூர்த்தி நிகழ்ச்சிக்காக பத்மநாபாவும் திருப்பதி செல்கிறார். அங்கிருந்து இங்குதான் வருவார்கள் என்ற தகவலும் கதையோடு கதையாக கூறப்பட்டுவிட்டது.

சின்ன சாந்தன்மீது அந்தளவு நம்பிக்கை, நெருக்கம்.

தகவல் சிவராசனுக்கு போனது. யாழுக்கு பொட்டு அம்மானுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

கறுப்பு டேவிட் தலைமையில் நான்குபேர் கொண்ட தாக்குதல் அணியை தமிழகத்துக்கு அனுப்பினார் பொட்டம்மான்.

கறுப்பு டேவிட், டானியல், ரவிச்சந்திரன், திலீபன் ஆகிய நான்குபேரே அந்த அணியில் சென்றனர். இவர்களை வழிநடத்தும் பொறுப்பு சிவராசனுக்கு.

அப்போது தமிழ்நாடு முழுக்க புலிகள் இயக்க பொறுப்பாளராக இருந்தவர் குண்டுச் சாந்தன். அவர் திருச்சியில் இருந்தார்.

பணி முடிந்ததும் தாக்குதல் அணியை பத்திரமாக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும் பொறுப்பு குண்டுச் சாந்தனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

தாக்குதல் அணியினர் நால்வருக்கும் தாக்குதல் நடத்தப்படவேண்டிய இலக்கின் சமீபமாகவுள்ள சூளைமேடு கங்கை அம்மன் கோவில் வீதியில் உள்ள வீடொன்றை சிவராசன் ஏற்பாடு செய்திருந்தார். சினிமா விநியோகஸ்தர் ஜெயபாலசிங்கம் என்பவருக்கு சொந்தமான வீடு அது.



குண்டுச் சாந்தன்

இத்தனை தயாரிப்புக்களுடன் தாக்குதல் அணி தனக்காக காத்திருக்க, பத்மநாபா திருப்பதியில் தன் மாமனாரின் சஷ்டிய பூர்த்தி பிரார்த்தனையை முடித்துக்கொண்டு மனைவி சகிதம் சென்னை வந்து சேர்ந்தார்.

### அடையாளம்

1990 ஜூலை 19ம் திகதி மத்தியான நேரத்தில் பவர் அப்பார்ட்மெண்டில் உள்ள வீட்டுக்கு வந்து சேர்ந்தார் பத்மநாபா.

வரும்போது மனைவியை வகாப் தெரு வீட்டில் இறக்கிவிட்டே வந்தார்.

பத்மநாபா வந்துவிட்டார். மாலையில் வேறு எங்கோ செல்கிறார் என்ற தகவலும் சின்ன சாந்தனுக்கு கிடைத்தது.

உடனே சிவராசனுக்கு தகவல் பறந்தது.

அம்பாசிடர் காரில் தாக்குதல் அணியினர் நால்வரும் புறப்பட்டனர். காரை டானியல் செலுத்தினார்.

இதற்கிடையே பத்மநாபாவை காண ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். முக்கியஸ்தர்கள் பலர் அந்த வீட்டுக்குச் சென்றனர். பலரை கும்பலாக சந்திப்பதில் உள்ள ஆர்வம் அப்படியே பழகிப் பழகி பாதுகாப்பு அக்கறையை பறக்கச் செய்திருந்தது.

இத்தனைக்கும் அந்த வீட்டில் பத்மநாபாவுக்கு பாதுகாப்பாக ஒரே ஒரு பிஸ்டலுடன் மட்டுமே மெய்க்காப்பாளர் லிங்கம் தங்கியிருந்தார். வேறு ஆயுதங்கள் கிடையாது.

சுரேஸ் பிரேமச்சந்திரனும் வேறு சிலரும் அங்கு இருந்துவிட்டு வெளியே போன சில நிமிடங்களுக்குள் அம்பாசிடர் கார் பவர் அப்பார்ட்மெண்ட் வளாகத்திற்குள் புகுந்தது.

பத்மநாபா இருந்த வீட்டை சுலபமாக அடையாளம் காணக்கூடியதாகவும் இருந்தது. அலங்காரத்திற்காக கதவருகே குஞ்சம் கட்டப்பட்டிருந்தது.

'குஞ்சம் கட்டிய வீடு' என்று தாக்குதல் அணிக்கு அடையாளம் கூறி மேலே அனுப்புவதற்கு வசதியாகிவிட்டது.

### தாக்குதல்

காரில் இருந்து குதித்த நால்வரில் இரண்டுபேர் ஜக்காரியா காலனியில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். அலுவலகம் நோக்கி சுடத் தொடங்கினார்கள். அங்கிருந்து பார்த்தால் அப்பார்ட்மெண்ட் தெரியும்.

உதவிக்கு யாரும் வரக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை கருதியே அலுவலகம் நோக்கி சுடப்பட்டது.

அதே நேரம் கறுப்பு டேவிட்டும் இன்னொருவரும் படிகளில் வேகமாக ஏறி நாலாவது மாடிக்கு சென்றுவிட்டனர்.

வெளியே சத்தம் கேட்டு கதவை மூட முன்பாக உள்ளே புகுந்தனர்.

எதிர்ப்பட்டவர்கள்மீது சரமாரியாக சுட்டுத் தீர்த்தனர்.

பையில் இருந்த பிஸ்டலை எடுக்க முற்பட்ட பத்மநாபாவின் மெய்க்காப்பாளர் சுடப்பட்டார். பிஸ்டலிலும் ஏ.கே.ரவைகள் பட்டிருந்தன.

பத்மநாபா பின்புற அறைப் பக்கம் சென்றுவிட்டார். ஆனால் அங்கிருந்து பின்புறமாக தப்பிக்க பாதை எதுவும் கிடையாது.

உள்ளே புகுந்தவர்கள் பத்மநாபாவை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.



சின்ன சாந்தன்

அதேவேகத்தில் திரும்பி கீழே சென்று காரில் ஏறித் தப்பிச் சென்றனர்.

செல்லும்போது காரின் இருபுறமும் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே சென்றதால் காலனி வாசிகள் பலர் காயமடைந்தனர். பொதுமக்கள் சிலர் பலியாகினர்.

வீட்டுக்குள் பத்மநாபா உட்பட பதின்மூன்றுபேர் பலியாகினர்.

வடக்கு-கிழக்கு மாகாண நிதி அமைச்சர் கிருபாகரன், யாழ் மாவட்ட எம்.பி. யோகசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். நீண்டகால உறுப்பினர் ரவி உட்பட பதின்மூன்று பேரே பலியாகினர். இரு பெண்களும் பலியாகினர்.

யோகச்சங்கரியும், கிருபாகரனும் 18.06.90 அன்றுதான் கொழும்பில் இருந்து விமானத்தில் சென்னை சென்றிருந்தனர்.

தாக்குதல் அணியினர் எப்படி தப்பினர்?

தமிழக அரசுக்கும் இக் கொலைக்கும் இடையே தொடர்பு இருந்ததா?

அவற்றை வரும் வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் புதைக்கப்பட்ட உடல்கள் எலும்புக்கூடுகளாகவும், மண்டை ஓடுகளாகவும் பொதுஜன முன்னணி ஆட்சியில் வெளிக்கொண்டுவரப்பட்டன.

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பொதுஜன முன்னணியினர் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக புதைகுழிகளைத் தோண்டியிருந்தனர்.

அவற்றில் பிரதானமானது சூரியகந்தைப் புதைக்குழிகளாகும். படையினரையும், ஐ.தே.கட்சி ஆட்சியாளரையும் அன்றைய பிரதமரும் இன்றைய ஜனாதிபதியுமான சந்திரிக்கா ஆவேசமாக சாடி உரைகள் பல ஆற்றியிருந்தார்.

சூரியக்கந்தை புதைகுழிகளைத்

## செம்மணி புதைகுழிகள்

தோண்டுமாறு பெரியளவில் கோரிக்கைகள் எதுவும் அப்போது விடுக்கப்படவில்லை.

அவ்வாறு இருந்தும் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் தாமாக முன்வந்தே அக் குழிகளை தோண்டியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொதுஜன முன்னணியினரால் வெளியிடப்பட்ட பிரமாண்டமான பத்திரிகை விளம்பரங்களில் ரோகன விஜயவீரவின் புகைப்படமும் இடம் பெற்றிருந்தது.

ஐ.தே.கட்சி ஆட்சியாளர்களால் கொல்லப்பட்ட தலைவர்கள் என்று மகுடமிடப்பட்டு விஜயகுமாரதுங்க, அத்துலத் முதலி, ஆகியோர் வரிசையில் ரோகனாவின் படமும் இடம்பெற்றிருந்தது.

இவையெல்லாம் ஐ.தே.கட்சியை ஓரம்கட்டி மாபெரும் வெற்றி பெறுவதற்கான அரசியல் சாகசங்களே என்பதை அப்போது பலர் உணர்ந்தார்களில்லை.

'ஜனநாயக யுகம்' மலர்ந்துவிட்டது என்றும், 'கொலையுகம் ஒழிந்தது' என்றும் பல விமர்சகர்கள்கூட புளகாங்கிதமடைந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற பின்னர் ஐ.தே.கட்சி ஆட்சிக்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய விசாரணைக் கமிஷன்கள் பல நியமிக்கப்பட்டன.

முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவை சம்பந்தப்படுத்தும் பட்டலந்த விசாரணைக் கமிஷனும் நியமிக்கப்பட்டது.

மனித உரிமைகள் பற்றிய பொதுஜன முன்னணியினரின் அக்கறையும், ஆர்வமும், புதைகுழி ஆராய்ச்சிகளும் தென்னிலங்கை சார்ந்த ஒன்றாகவும், தமக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையிலான அரசியல் மோதல் சார்ந்த ஒன்றாகவுமே அமைந்திருந்தன.

சொந்த இன அபிமானம், சொந்த அரசியல் இலாபம் ஆகிய இரண்டு அடிப்படைகள் சார்ந்ததாகவே தென்னிலங்கை சிங்கள அரசியல் கட்சிகளது மனித உரிமை முழக்கங்களும், அக்கறைகளும் வெளிப்பட்டு வந்திருக்கின்றன.

பொதுஜன முன்னணியினரும் அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை அவர்கள் ஆட்சிபீடமேறிய பின்னர் முன்னெடுத்த நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் எடுத்துக்காட்டி வருகின்றன.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்கிலும் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொலையுண்டனர்.

சூரியக்கந்தை, பட்டலந்தை விவகாரங்களில் காட்டிய அக்கறையில் ஒரு பகுதியைக்கூட வடக்கு-கிழக்கில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், மனித வேட்டைகள் தொடர்பாக பொதுஜன முன்னணியினர் காண்பிக்கத் தவறியிருந்தனர்.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல தென்னிலங்கையில் காணாமல் போனோர் விவகாரத்தில் புகார் கூறப்பட்ட அதிகாரிகளிடமே யாழ் குடாநாட்டில் சூரியக்கதிர் நடவடிக்கையை வழிநடத்தும் பொறுப்புக்களும் இன்றைய ஆட்சியாளரால் வழங்கப்பட்டிருந்தன.

அதன் காரணமாகவே சூரியக்கதிரின் பின்னர் யாழ் குடாநாட்டிலும் சூரியகந்தைகள் தோன்றின.

யாழ் குடாநாட்டில் காணாமல் போன அறுநூறுக்கு மேற்பட்டோர்



பலியாகிவிட்டனர் என்பதை சர்வதேச மன்னிப்புச் சபை உறுதியாகக் கூறியிருந்தது.

இவ்விவகாரத்தில் உண்மைகளை வெளிக்கொண்டுவருவதற்கு பதிலாக, காலம் கடத்துவதிலும், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவற்றை திருப்திப்படுத்தும் விதமான கண்துடைப்பு நடவடிக்கைகளிலுமே ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

## சாய்ந்த செங்கோல்

தென்னிலங்கை மனித உரிமை மீறல்களை ஆராய பல பெயர்களில் பல்வேறு விசாரணைக் கமிஷன்களை நியமித்த ஆட்சியாளர்கள், யாழ் குடாநாட்டில் காணாமல் போனோருக்காக தனியாக ஓர் விசாரணைக் கமிஷன் அமைக்கக்கூட முன்வரவில்லை.

இந்நிலையில்தான் கிருஷாந்தி கொலை, பாலியல் வல்லுறவு வழக்கில் எதிரிகள் அதிர்ச்சி தரும் தகவல்கள் சிலவற்றை வெளியிட்டிருந்தனர்.

செம்மணியில் மேலும் பல புதைகுழிகள் இருப்பதாகவும், அடையாளம் காண்பிக்கத் தயாராக உள்ளதாகவும் அவர்கள் நீதிமன்றத்திலே கூறியிருந்தனர்.

இவ்விவகாரத்தில் ஆட்சியாளர் காட்டிய அலட்சியம், யாழில் காணாமல் போனோர் பலியானோர் விவகாரத்தில் ஆட்சியாளரின் மாற்றாந்தாய் மனப்போக்கை தெளிவாக பிரதிபலித்துள்ளது.

தென்னிலங்கையில் இப்படியான புதைகுழி இருப்பதாக கூறப்பட்டிருக்குமானால், மறு நிமிடமே அப்பகுதி முற்றுகையிடப்பட்டு அரசாங்கத்தினால் தோண்டப்பட்டிருக்கும்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தை சாடவும், இன அபிமானத்தை காண்பிக்கவும் கிடைத்த சந்தர்ப்பமாக கருதி ஆட்சியாளர்கள் களம் இறங்கியிருப்பர். முக்கிய அமைச்சர்களே நேரில் சென்று தோண்டும் பணிகளை மேற்பார்வை செய்திருப்பர்.

நானூறு புதைகுழிகள் செம்மணியில் இருப்பதாக கூறப்பட்ட தகவல் வெளியானதுமே அப்பகுதியைச் சுற்றி உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பல அதிகாரிகளுக்கும் புதைகுழி

## ஆட்சியாளரின் மௌனம்

விவகாரத்தில் சம்பந்தம் இருப்பதாக கூறப்பட்டதால், காலம் தாழ்த்தப்படுவது தடயங்களை இல்லாமல் செய்வதற்கு வழங்கப்படும் சந்தர்ப்பமாகவே அமையும்.

ஆனால் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட விவகாரம் கூறப்பட்டு பல வாரங்களாகியும்கூட ஆட்சியாளர்கள் எவ்வித கரிசனையும் காண்பிக்கத் தவறியிருந்தனர். செம்மணியில் தடயங்கள் இருக்குமானால் அவற்றை அழிக்காமல் தடுக்கக்கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள்கூட செய்யப்பட்டிருக்கவில்லை.

தமிழ்க் கட்சிகள் வழக்கம்போல அறிக்கைகள் விட்டிருந்தன.

செம்மணியில் புதைகுழிகளைத் தோண்டுமாறு ஈ.பி.டி.பி. எம்.பி. சிவதாசன், புளொட் எம்.பி. சண்முகநாதன் ஆகியோர் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அக் கோரிக்கைகள் குறித்து ஒரு சம்பிரதாயத்துக்குக்கூட பதில் சொல்லப்படாதது மட்டுமன்றி, செம்மணி விவகாரம் தொடர்பாக ஆளும் தரப்பினர் பாராளுமன்றத்தில் எதனையும் பிரஸ்தாபிக்கவும் இல்லை.

பாராளுமன்ற உரைகள் எத்தனை பயனற்றவை என்பதையும், பாராளுமன்றத்தின் இயலாமையையுமே மேற்படி விவகாரமும் வெளிப்படுத்தியுள்ளது.

நானூறு புதைகுழிகள் இருப்பதாக கூறப்பட்டதும், அந்த விடயம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதும்கூட ஆளும் தரப்பினரால் வெகு அலட்சியமாகவும், ஏதோ சிறு விவகாரம் போன்றுமே நோக்கப்பட்டுள்ளது.

மனித உயிர்களுக்கு குறிப்பாக தமிழ் உயிர்களுக்கு எந்த ஆட்சியிலும் பாதுகாப்போ, மரியாதையோ இருப்பதில்லை.

சுதந்திர புர குண்டுவீச்சு பற்றியும், 25ற்கு மேற்பட்டோர் பலியானது தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட போதும் ஆளும் தரப்போ, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரோ எவ்வித பதிலையும் வழங்கத் தவறியிருந்தனர்.

அவ்வாறு பதில் வழங்கப்படாதது குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் உரையில் குறுக்கிட்டு கேள்வி எழுப்ப ஜோசப் எம்.பி. உட்பட தமிழ் பா.உக்கள் துணிச்சலின்றியே அமர்ந்திருந்தனர்.

அதேபோன்று செம்மணி விவகாரம் தொடர்பான கோரிக்கைக்கு பதில் அளிக்கப்படாததை சுட்டிக்காட்டி பிரச்சனை கிளப்ப தமிழ் பா.உக்கள் முன்வரவில்லை.

பாராளுமன்றத்தில் தமிழ் பா.உக்கள் ஆற்றும் உரைகளை நமட்டுச் சிரிப்புடன் ஆளும் தரப்பு செவிமடுக்கிறது. குறுக்கிடுவதும் கிடையாது.

'அவர்கள் எங்களுடன்தான் இருக்கிறார்கள். அரசியலுக்காக ஆவேசமாகப் பேசுகிறார்கள். பேசிவிட்டுப் போகட்டும்' என்ற மனோநிலையில்தான் ஆளும் தரப்பினர் தமிழ் பா.உக்களின் உரைகளை நோக்குகின்றனர். அதன் காரணமாகவே அவர்கள் கிளப்பும் பிரச்சனைகளுக்கோ, கோரிக்கைகளுக்கோ பதில் சொல்லாமல் இருக்கின்றனர்.

இதேவேளை எதிர்க்கட்சியினரான ஐ.தே.கட்சியினரும் செம்மணி விவகாரத்தை அலட்சியப்படுத்தி உள்ளனர்.

எதிர்காலத் தேர்தல்கள் கருதி ஐ.தே.கட்சியில் உள்ள சில பா.உக்கள் தமிழ் மக்கள்மேல் அக்கறை உள்ளவர்கள் போன்று பேசத் தலைப்படுகின்றனர்.

ஆனால் ஐ.தே.கட்சியில் இன்னொரு பிரிவினர் இனவாதத்தோடு கைகுலுக்கி வருகின்றனர்.

சமீபத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்கா யுத்தத்தை வெற்றிகரமாக நடத்த ஆலோசனை கூறியுமிருந்தார்.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதாகவும், அவற்றை எதிர்கொள்ளக்கூடிய கருவிகளுடன் விமானங்களை சண்டைக்கு அனுப்புமாறும் அவர் கர்ஜித்திருந்தார்.

விமானக் குண்டுவீச்சால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதையிட்டு வாய்மூடி மௌனிகளாக இருக்கும் ஐ.தே.கட்சியினர், விமானங்களை பாதுகாப்பதில் மட்டும் கரிசனம் காட்டியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள்மீது பரிவு கொண்ட கட்சியாகவும் அதேசமயம் போரில் ஈடுபடும் படையினரில் பற்றுக்கொண்டவர்களாகவும் இரு முகம் காட்டி வருகிறது ஐ.தே.கட்சி.

பொதுஜன முன்னணியினராக இருந்தாலும், ஐ.தே.கட்சியினராக இருந்தாலும் தென்னிலங்கையில் சிங்கள மக்களை பாதிக்கும் ஆயுதப்படை நடவடிக்கைகளை எவ்வித தயக்கமும் இல்லாமல் கண்டிக்கவே செய்கின்றனர்.

வடக்கு-கிழக்கில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், உயிரழிவுகள், குண்டுவீச்சுக்கள், ஷெல்லடிகள் தொடர்பாக தென்னிலங்கையின் பிதான சிங்களக் கட்சிகள் கண்டிக்க முன்வருவதில்லை.

அவ்வாறு கண்டிப்பது இனப்பற்று, தேசப்பற்று போன்றவைக்கு மாறானது என்று சிங்கள மக்கள் கருதிக் கொள்ளக்கூடும் என்று இக் கட்சிகள் அஞ்சுவதே அதற்கான காரணமாகும்.

சமீபத்தில் கொழும்புக் கைதுகள் தொடர்பாக ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் கண்டனம் தெரிவித்திருந்தனர். எனினும் யுத்தம் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்களையிட்டு நழுவல் போக்கையே கைக்கொள்கின்றனர்.

கைதுகள் தொடர்பான கண்டனங்கள்கூட கொழும்பு, மலையகம் போன்ற பகுதிகளில் உள்ள தமிழ் வாக்குவங்கிகள் மீதான கரிசனையின் அடிப்படையிலேயே வெளியாகின்றன.

கிருஷாந்தி கொலை வழக்கில் நீதி தவறாமல் நேர் நின்று வழங்கப்பட்ட தீர்ப்பை பாராட்டியேயாக வேண்டும்.

அதேசமயம் இவ் வழக்கின் தீர்ப்பை தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு பரிகாரம் கிடைத்து வருவதின் வெளிப்பாடாகவும் கருதிவிடக்கூடாது.

'அற்புதங்களும் எப்போதாவது நிகழ்வது உண்டு' என்ற கோணத்தில்தான் நோக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், கிருஷாந்தி பாலியல் வல்லுறவு, படுகொலை விவகாரம் ஆட்சியாளர்களால் வெளிக்கொண்டுவரப்பட்டதல்ல. மனித உரிமை அமைப்புக்களும், கிருஷாந்தியின் குடும்பத்தினரும் உறவினர்களும் சளைக்காமல் நீதிகேட்டு நடத்திய போராட்டமும், செம்மணியில் புதைகுழியை பொதுமக்கள் கண்டுபிடித்துக் கூறிய தகவலுமே தவிர்க்க முடியாமல் நடவடிக்கை எடுத்தாகவேண்டிய நிலைக்கு ஆட்சியாளரை தள்ளியிருந்தன.

ஆனால் தற்போது கிருஷாந்தி கொலை வழக்கின் தீர்ப்பை இலங்கைத் தீவில் இனச் சார்பற்ற முறையில் நீதி வழங்கப்படுவதன் அடையாளமாக காண்பிக்க ஆட்சியாளர் முனைந்து வருகின்றனர்.

ஆனால் இதே ஆட்சியில்தான், தமிழர்களை கொலை செய்து ஆற்றில் வீசியதற்காக கைதான படையினர் நீதி விசாரணை எதுவும் இன்றி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது எங்கிருக்கிறார்கள் என்பதும் மர்மாகவே உள்ளது.

அதேபோலவே கிருஷாந்தி வழக்கின் எதிரிகள் கூறிய புதைகுழித் தகவலையும் உடன் கவனத்தில் எடுக்கத் தவறியதும் ஆட்சியாளர்களின் செங்கோல் ஒருபுறம் சாய்ந்திருப்பதன் அடையாளமேயாகும்.

பக்கச் சார்பற்ற மனித உரிமை அமைப்புக்கள் என்று கூறிக்கொண்டு மருதானையில் தற்செயலாக நடைபெற்ற குண்டுவெடிப்பை திட்டமிட்ட குண்டுவெடிப்பாக சித்தரித்தனர். அதே அமைப்புக்கள் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் கிட்டத்தட்ட ஒருவாரம்வரை கருத்து எதனையும் கூறாததும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

'முரசு' கொழும்பில் வெளியாவது வியாழக்கிழமை. ஆனால் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் புதன்கிழமையே இராஜதந்திரி பக்கம் அச்சாகிவிடுகிறது.

இது எப்படி சாத்தியம்? அப்படி ஒன்றும் அதிசயமில்லை. 'முரசு'தான் அனுப்பி உதவுகிறது.

முரசில் வெளியாகும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' அல்லது 'இராஜதந்திரி' இரண்டில் ஒன்றை மறுபிரசுரம் செய்ய வசதியாக முன்கூட்டியே அப்பக்கங்களில் ஒன்றை அனுப்பி வைக்குமாறு பாரிஸ் ஈழநாடு பிரதம ஆசிரியர் கேட்டிருந்தார்.

பாரிஸ் நகருக்கு மட்டுமன்றி, ஈழநாடு விற்பனையாகும் சகல நாடுகளுக்கும் முரசும் செல்கிறது.

வியாபார நலன் என்ற கோணத்தில் பார்த்தால் பாரிஸ் ஈழநாட்டுக்கு முன்கூட்டியே ஒரு பக்கத்தை அனுப்புவது உசிதமல்ல. எந்தவொரு பத்திரிகையும் அவ்வாறு செய்யவும் முன்வராது. தமது விற்பனை பாதிக்குமே என்று தயங்கும்.

ஆனால், 'முரசு' ஆசிரியர் பீடம் எவ்வித பிரதியுபகாரமும் கருதாமல் 'இராஜதந்திரி' பகுதியை பிரதி செவ்வாய் தோறும் அனுப்பி வைத்தது. பாரிஸ் ஈழநாட்டில் மறுபிரசுரமானது.

'முரசு'க்கு வியாபாரமும் முக்கியம்தான். இலாபம் இல்லாவிட்டால் இழுத்து மூடவேண்டியதுதான். அதனால் சினிமா, கதைகள் போன்ற பல ஜனரஞ்சக சமாச்சாரங்கள் முரசில் இடம் பெறுகின்றன.

ஆனால் அரசியல் அலசல்கள், கருத்துக்கள் என்பவற்றை பொறுத்தவரை வியாபாரார்தியான சமரசத்திற்கு இடமின்றியே வெளிவருகின்றன. அதிகமான மக்களிடம் அவை சென்றடைய வேண்டும் என்பதே முரசின் ஆர்வம். அதுதான் பாரிஸ் ஈழநாட்டுக்கு இராஜதந்திரிப் பக்கத்தை கொடுத்தோம்.

இதைக் குறிப்பிட என்ன காரணம்?

பாரிஸ் ஈழநாடு கனடாவிலும் மறுபதிப்பாகிறது. அந்த மறுபதிப்பில் 'முரசு'மீது சேறு பூசப்பட்டுள்ளது. 'முரசு' வியாபார நலனுள்ள பத்திரிகையாம்.

அடடே... எத்தனை அருமையான கண்டுபிடிப்பு.

'முரசு'டன் போட்டிபோட முடியாமல் அதன் ஒரு பக்கத்தை மறுபிரசுரம் செய்தனர். அப்படியும் விற்பனை சூடுபிடிக்கவில்லை. திட்டித் தீர்த்துள்ளனர். வாழ்க, நன்றி உணர்ச்சி.

▫▫

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா இனி மீளப்போவதில்லை என்ற கட்டுக் கதையை நம்பி, வெளிநாட்டு வானொலியும், கனடா ஈழநாடும் சில தகவல்களை வெளியிட்டிருந்தன.

ஈ.பி.டி.பி. உட்சதி காரணமாக தேவானந்தா தாக்கப்பட்டிருக்கலாம் என்று கூறியிருந்தனர்.

விஷயம் என்ன தெரியுமோ?

### வழக்கு நிதி 50 இலட்சம்

தேவானந்தா களுத்துறை சிறைக்குப் போக முடிவு செய்ததே கட்சிக்குள் எவருக்கும் தெரியாது.

அன்று காலையில் நடந்த எம்.பி.கள் கூட்டத்தில்கூட சிறைக்கு செல்வது என்று முடிவு செய்யப்படவில்லை. உத்தரவாதங்கள் கொடுப்பதும் இயலாத விஷயம். தலையிடாமல் இருப்போம் என்றுதான் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் திடீரென்று முடிவு செய்து ஒரே ஒரு மெய்க்காப்பாளருடன் புறப்பட்டு சென்றாராம் தேவானந்தா. அதனால்தான் ஒரு எம்.பி.கூட அவருடன் செல்ல முடியவில்லை.

தற்போது தேவானந்தாவே பூரண நலன் பெற்றுக் கொண்டிருப்பதால், உட்சதி பற்றிய கதைகள் கட்டுக்கதைகளாகிவிட்டன.

தேவானந்தாவின் மூளையில் கோளாறு ஏற்பட்டுவிட்டதாகவும், வெளிநாட்டு வானொலி சேவை ஒன்றில் கூறினார்களாம். அதேநாள் மருத்துவமனையில் பத்திரிகையாளர்கள் சிலரை சந்தித்து உரையாடினார் தேவானந்தா.

மறுவாரமே பொய்யாகக்கூடிய தகவல்களை வெளியிட்டுக் கொண்டு 'முரசு'மீது வயிற்றெரிச்சல்பட்டு என்ன புண்ணியம்?

–0–

**ரா**ஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டவர்களை காப்பாற்றுவதற்கு உலகத் தமிழர்களிடம் நிதி திரட்டப்பட்டு வருகிறது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள், தமிழகத்தில் உள்ள புலிகள் இயக்க அனுதாபிகள் உட்பட 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இத் தீர்வை எதிர்த்து மேன்முறையீடு செய்ய இந்திய பணமதிப்பில் 50 இலட்சம் ரூபாய்கள் தேவையாம்.

திரு. துரைசாமி என்பவர் உலக நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள வானொலிகள் மூலம் நிதி தருமாறு வேண்டுகோள் விடுத்து வருகிறார்.

எதிர்பாராத அளவுக்கு பெருந்தொகையான நிதி சேர்ந்துள்ளது. தாமாகவே முன்வந்து பலரும் நிதி வழங்கியுள்ளனராம். வழக்கு நிதிக் குழுத் தலைவராக பழநெடுமாறன் இருக்கிறார்.

வழக்கு நிதிக்காக நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. 'ராஜீவ் படுகொலை மறைக்கப்பட்ட உண்மைகள்' என்ற பெயரில் க. இராசேந்திரம் என்பவர் அந்த நூலை எழுதியுள்ளார்.

ராஜீவ் கொலையில் புலிகளுக்கு தொடர்பு இல்லை என்று நிரூபிக்க முனைகிறார் இராசேந்திரம்.

–★–

**பி.பி.சி.** வானொலிக்கு அளித்த பேட்டியில் வவுனியாவில் நாம்தான் பொலிஸ், நாம்தான் கோட், ஜெயிலும் நமதே என்ற பாணியில் பேட்டி கொடுத்திருந்தார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உபதலைவர் மாணிக்கம்தாசன்.

வவுனியாவில் தம்மால் சிலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதையும், தம்மால் தண்டனை வழங்கப்படுவதையும் புளொட் பகிரங்கமாக ஒப்புக் கொண்டது இதுதான் முதற் தடவை.

ஆனால் ரூபவாஹினியில் பேட்டி ஒன்றில் 'வவுனியாவில் தடுப்பு முகாம் வைத்திருப்பதாக கூறப்படுவது தவறான தகவல்' என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. அவருக்கும் தெரியாமல் நடக்கிறதோ?!



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 18

# இடி அமீன்

தருவது ரசிகன்

**கடந்தவாரம்**

**அசோலி, லாங்கி இனங்களைச் சேர்ந்த சிப்பாய்களை கொன்று குவிக்க கட்டளையிட்ட இடி அமீன் இஸ்ரேல், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் செல்கிறான் முந்நூறுக்கு மேற்பட்டோர் கொன்று குவிக்கப்பட்ட பின்னர் நாடு திரும்பி, தன் எதிரிகளின் சதிவேலை என்கிறான்.**

**இனி....**

இடி அமீனின் அமைச்சரவையை மோசமானது என்று எவரும் கூறமாட்டார்கள். தகுதி படைத்தவர்களாக கண்டுபிடித்துத்தான் நியமித்தான்.

தனது இனத்தைச் சேர்ந்த லெஃப்டினன்ட் கேணல் ஒபிட்றிகாமா என்பவரை உள்துறை அமைச்சராக போட்டிருந்தான்.

உகண்டாவின் பிரபலமான பொறியியலாளராக விளங்கிய நியோனிஸிக்கு கோகாவுக்கு பொதுப்பணி அலுவல்கள் அமைச்சை ஒதுக்கினான்.

மக்கரேரே பல்கலைக்கழகத்தில் உயிரியல்துறை பேராசிரியராக இருந்தவர் வில்லியம் பனகே. அவர் ஒருநாள் அழைக்கப்பட்டார்.

இடி அமீன் அழைப்பதாக அறிந்ததுமே அவருக்கு உடம்பிலுள்ள சகல அங்கங்களும் ஆட்டம் கண்டுவிட்டன.

**"பல்கலைக்கழகத்தில் என்ன செய்கிறீர்கள்?"** என்றான் அமீன். முதல் கேள்வியே இடக்கு முடக்காக இருந்தது.

"கற்பிக்கிறேன்!" என்றார் மெதுவான குரலில்.

**"எதைக் கற்பிக்கிறீர்கள்?"** என்ற அடுத்த கேள்விக்கு பேராசிரியர் ஆடிப் போனார்.

"உயிரியல்" என்றார் தட்டுத்தடுமாறி. அமீனுக்கு புரியவில்லை,

"அப்படியென்றால்?" என்றான் வேண்டுமென்றே. 'கிண்டல் பண்ணுகிறானோ' என்று பயந்தார் பேராசிரியர்.

அமீனுக்கு படிப்பு வாசனை தெரியாது. அமீன் தொடர்ந்து கேட்டதால் பேராசிரியர் விளக்கினார்.

சற்றும் யோசிக்காமல் அமீனிடம் இருந்து வந்தது அறிவிப்பு: **"மிருக வள அமைச்சர் அவர்களே என் முன்னால் உள்ள ஆசனத்தில் நீங்கள் இப்போது அமரலாம்"** என்றான்.

பேராசிரியருக்கு மயக்கம் வராதது தான் குறை. தன்னைப் பற்றி யாரோ தவறுதலாக கூறிவிட்டார்கள். அதனை நம்பி தன்னைக் கொல்லுவதற்கு முன்னர் கிண்டலடிக்கிறான் என்றுதான் பேராசிரியர் அஞ்சினார்.

அவரது முகத்தில் இருந்து உள் ஓடிய எண்ணத்தை புரிந்தவனாக **"என்ன நம்பமுடியாமல் இருக்கிறதா?"** என்றான்.

தன் செயலாளரை அழைத்து, மிருக வள அமைச்சர் பதவியை அவருக்கு வழங்குவதற்கான நியமன கடிதத்தை தயார்படுத்த உத்தரவிட்டான்.

அதன் பின்னர்தான் பேராசிரியருக்கு சிறிது நம்பிக்கை வந்தது.

**"நீங்கள் மட்டுமல்ல, என் அமைச்சரவையில் உள்ள பலருக்கு இப்படித்தான் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தேன்!"** என்று அமீன் சிரித்த சிரிப்புக்கு பேராசிரியர் மிரண்டு போனார்.

அமீன் நடத்திய முதலாவது அமைச்சரவைக் கூட்டம் களை கட்டியது.

**"யாரும் பயப்படத் தேவையில்லை. உங்கள் கருத்துக்களைத் தைரியமாகக் கூறலாம். முதுகுக்குப் பின்னால் நின்று பேசினால்தான் எனக்குப் பிடிக்காது. கதையை முடித்துவிடுவேன். முகத்துக்கு எதிரே பேசினால் பிடிக்கும். பேசுங்கள்"** என்றான். பேசினார்கள்.

ஆச்சரியமாக மௌனமாக இருந்து அனைவரது கருத்துக்களையும் செவிமடுத்தான்.

தனது இனத்தாரையே நம்பிய போதும், சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக அமைச்சர் பதவிகள் கொடுத்திருந்தான். அது மட்டுமன்றி முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கவும் வழி செய்தான்.

அமைச்சரவை கூட்டத்தின் முடிவில் அமீன்: **"நான் ஒரு அரசியல்வாதியல்ல. நீண்டகாலம் இராணுவ ஆட்சி நடத்துவது எனது நோக்கமும் அல்ல. உங்கள் ஆற்றல்கள் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை ஆற்றுங்கள். விரைவில் இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டுவேன்"** என்றான்.

அமீனின் பேச்சைக் கேட்டவர்களுக்கு தம் காதுகளையே நம்பமுடியவில்லை. உள்ளூர பெரும் மகிழ்ச்சி கொண்டனர்.

அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. மறுநாள் வானொலியில் இடி அமீனின் உரை இடியாக இறங்கியது.

"எனது இராணுவ ஆட்சி **ஐந்து** வருடங்கள் தொடர்ந்து இருக்கும். **உகண்டாவை** சொர்க்கபுரியாக **மாற்றிவிட்டு** இராணுவ ஆட்சிக்கு **விடை** கொடுப்பேன். மக்களாட்சி **என்ற** பெயரில் **உகண்டாவை** கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டார்கள். உங்களுக்கு சொர்க்கபுரி வேண்டுமா? ஒரு சிலர் சம்பாதித்துக்கொண்டு, **உகண்டாவை** நாசமாக்கும் ஆட்சி வேண்டுமா? சொர்க்கபுரிதானே வேண்டும். **ஐந்து** வருடம், ஆம், **ஐந்தே** வருடம் பொறுமையாக இருங்கள்!" என்றான்.

அதனைக் கேட்ட அமைச்சர்கள அதிர்ச்சியடைந்தனர். அந்த அதிர்ச்சியை வெளிக்காட்டவில்லை. காட்டினால் என்னாகும் என்பது அவர்களுக்கு தெரிந்திருந்தது.

**"வாவ்! இன்னமும் ஐந்து வருடத்திற்கு நீங்கள்தான் ஜனாதிபதி"** என்றாள். என்றவள் மிக இளமையாக இருந்தாள். தன் மூக்கால் அமீனின் முரட்டு மூக்கை உரசினாள்.

அவள் பின்புறம் இடுட்புக்கு கீழே கிள்ளியபடி, **"ஐந்து வருடம் மட்டுமல்ல, ஆயுள் உள்ளவரை நான்தான் ஜனாதிபதி!"** என்று கண்ணடித்தான்.

"அப்படியானால் வானொலியில் உரை



யாற்றியது?" என்றவளின் முகத்தை வளைத்து, தன் மடியில் சாய்த்தபடி **"ஐந்து வருடத்திற்கு மக்களை ஏமாற்ற கொடுத்த வாக்குறுதி. அதைவிடு. உன் வேலையைப் பார்!"** என்றான்.

அவள் உயர் கல்லூரி மாணவி. விளையாட்டு வீராங்கனை. பாராட்ட அழைத்தவன், தன் காதலிகளில் ஒருத்தியாக சீராட்டத் தொடங்கிவிட்டான்.

"படிக்காமலேயே உன்னை பாஸ் **பண்ண வைக்கிறேன். நீ என்னிடம் படித்துக்**



1971ல் இஸ்ரேலிய விஜயத்தின்போது அமீன். ஒற்றைக் கண் மறைக்கப்பட்டு இருப்பவர் அப்போதைய இஸ்ரேல் பாதுகாப்பமைச்சர் மோசே தயான்.

கொள்." என்றான். "ச்சீ..." என்றாள். **"ச்சீ... என்றாலே அதற்கு எதிர்க் கருத்துத்தான் உண்மையான அர்த்தம்"** என்றவன், கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான்.

முடிந்ததும் சொன்னான்: **"நான் தொட்டதிலேயே மிக இளமையானவள் நீதான்!"** அவளோ அமீனின் ராட்சத பலம் முன்னால் கசங்கிப் போயிருந்தாள். மிகக் களைத்துப் போயிருந்தாள்.

**"பி**ரிட்டனுக்கு சென்றீர்களே, உங்கள் விஜயத்தின் நோக்கம் என்ன?" என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது, குறுநகை ஒன்றுடன் கூறிய பதில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

**"எலிசபெத் ராணியின் மகளை எனக்கு மனைவியாக்க முடியுமா என்று விசாரிப்பதற்காகத்தான் போயிருந்தேன்."** என்று கூறிய அமீன், **"வெள்ளைக் குதிரைகளை அடக்கும் வித்தை தெரிந்தவன் கறுப்பன்தான்"** என்றும் கூறி பெரிதாக நகைத்தான்.

**"மகாராணியின் மகள் என்னை ஒரு ஐந்து நிமிடம் தனியாக சந்தித்திருந்தால், முட்டை முடிச்சுகளுடன் கிளம்பி என் பின்னால் வந்திருப்பாள்."** என்று அவன் கூறியதை நாகரிகம் கருதி சில பத்திரிகைகள் வெளியிடவில்லை.

பிரிட்டன் மக்கள் அமீனின் கருத்துக்களால் உஷ்ணமானார்கள். அமீனைப் பற்றி தாறுமாறாக கிழித்தன பிரிட்டன் பத்திரிகைகள்.

அமீன் அதற்காக கொஞ்சமும் வருந்தவில்லை. 'வெள்ளைக்காரப் பெண்களிடம் கறுப்பர்கள் பற்றி கருத்துக் கணிப்பு நடத்தச் சொல்லுங்கள். வெள்ளையனைவிட திடமானவனும், திறமையானவனும் கறுப்பன்தான் என்று அடித்து சொல்லுவார்கள்" என்று தன் பாணியில் திருப்பி அடித்தான் அமீன்.

அவ்வாறு கூறிய மறுவாரமே வெள்ளைக்காரப் பெண் ஒருத்தியுடன் பொது நிகழ்ச்சிகள் சிலவற்றில் தோன்றினான்.

அவளும் எடுப்பாக இருந்தாள். அமீனின் தோள் உயரம்வரை இருந்தாள். அமீனுடன் நடக்கும்போது குலுங்கினாள்.

"என் ரசிகை" என்று அவளை அறிமுகம் செய்தான். அமீனுக்கு ஆங்கில மொழியோடு அவ்வளவாகப் பரிச்சயம் இல்லை என்பதால், எந்த மொழியில் அவளோடு சமாளிக்கிறான் என்பது சிலருக்கு ஆச்சரியமாக இருந்தது.

அமீனுக்கும் அவளுக்கும் இடையிலான உறவுக்கு மொழி ஒரு பிரச்சனையில்லை என்று ஒரு சிலர் தமக்குள் கிசுகிசுத்தது அமீனுக்கு மட்டும் எட்டியிருந்தால், வெட்டிப் போட்டிருப்பான்.

அமீனின் இந்த அதிரடியான போக்குகள் வெள்ளையர்களைக் கொண்ட நாடுகளுக்கு தலையிடியாக அமைந்தன.

உகண்டா மக்களுக்கு வெள்ளையர்களை வம்புக்கு இழுப்பதும், கறுப்பனே உயர்ந்தவன் என்று அமீன் பேசுவதும் பிடித்தமாக இருந்தது.

வானொலி, தொலைக்காட்சி செய்தி தயாரிப்பாளர்கள் தினமும் காலையில் அமீன் எங்கிருந்தாலும் அங்கு இராணுவ வாகனத்தில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுவிடுவர்.

செய்திகளை எப்படி அமைக்க வேண்டும், எதைக் கூறவேண்டும் என்றெல்லாம் அரைமணி நேரம் விளக்கமளிப்பான்.

உகண்டா வானொலி, தொலைக்காட்சி செய்திகள் அனைத்தையும் தவறவிடாமல் கேட்பான் இடி அமீன்.

தொலைக் காட்சியில் செய்தி வாசிக்கும் பெண் ஒருவர்மீது கண் வைத்தான்.

நேரில் அழைக்கப்பட்டாள்.

**"நன்றாக வாசிக்கிறாய்!"** என்றான். அவள் பயந்து போயிருந்தாள்.

**"வாசிக்கும்போது உன் உதடுகள் அசையும் அழகே தனி. அந்த அசைவுகளுககு இந்த அமீன் அடிமை தெரியுமா?"**

அவளுக்கு புரிந்துவிட்டது. அமீனின் இரும்புக்கரம் அவள் தோளில் விழுந்தது. இன்னொரு கரம் அவள் முகத்தை நிமிர்த்தியது.


**"வாசிக்கும் இந்த உதடுகளை நான் வாசிக்கட்டுமா?"** என்றான். பதிலுக்கு காத்திருக்காமல் அவளின் உதடுகளை நோக்கி குனிந்தான்.

எதிர்ப்புக்கு பலன் இல்லாமல் பணிந்தாள்.

மறுநாள் உகண்டா தொலைக்காட்சி நிலையத்தின் முக்கிய பதவி ஒன்றுக்கு அவள் உயர்த்தப்பட்டாள்.

**(இடி தொடரும்)**

# நேரில் வந்த தேவதைகள்



உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் ரசிகர்களை செமத்தியாக ஏமாற்றிவிட்டது பிரேஸில் அணி.

கால்பந்து உலகின் சூப்பர் ஸ்டார்களான ரொனால்டோ, கார்லோஸ் இருவரும் இருந்தும்கூட இறுதிப் போட்டியில் சொதப்பி விட்டனர். படுதோல்வி.

நான்குமுறை உலக சாம்பியன் பட்டம் வென்ற கௌரவத்தை காப்பாற்றும் விதமாகக்கூட பிரேஸில் ஆடவில்லை. மூன்று கோல்களை தள்ளி தன் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தது ஃபிரான்ஸ் அணி.

உலகம் எங்கும் நடந்த கருத்துக் கணிப்புக்களில் இம்முறை சூப்பர் ஸ்டாராக ஏகமனதாக கருதப்பட்டவர் ரொனால்டோ.

அடிக்கடி காதலிகளை மாற்றிக் கொள்ளும் ரொனால்டோவின் லேட்டஸ்ட் காதலியான மொடல் அழகி சூஸன் ஃபிரான்ஸ்சுக்கு நேரில் விஜயம் செய்தார்.

பிரேஸில் பங்குபற்றும் போட்டிகள் நடைபெற்ற மைதானங்களில் பார்வையாளர் பகுதியில் முதல் வரிசையில் அமர்ந்திருந்தார்.

இவர் விஜயம் செய்ததை அறிந்த ரொனால்டோவின் முன்னாள் காதலிகளில் இருவர் ஃபிரான்சுக்கு படையெடுத்தனர்.

அரைகுறை கவர்ச்சி ஆடைகளுடன் பார்வையாளர் பகுதியில் நின்று ரொனால்டோவுக்கு உற்சாகமூட்ட படாதபாடு பட்டனர்.

ஆனால் ரொனால்டோ காதலிகள் நின்ற பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. மொடல் அழகி இருந்த பக்கம்தான் இடைக்கிடையே பார்த்துக் கொண்டார்.

பிரேஸில் அணி இம்முறை கிண்ணத்தை கைப்பற்றினால் ரொனால்டோவை பிரேஸில் அழகிகள் என்ன பாடுபடுத்தியிருப்பார்களோ? அந்தளவு வெறியுடன் மைதானத்தில் நின்று ஆடிப் பாடிக் கொண்டிருந்தனர்.

இறுதியில் பிரேஸில் அணி மட்டுமல்ல, ரொனால்டோவும் ரசிக, ரசிகைகளை ஏமாற்றிவிட்டார்.

# அப்பாவின் காதலி

இளவரசர் சாள்ஸின் காதலியான கமீலா பார்க்கரை இளவரசர் வில்லியம் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு எதிர்பாராத விதமாக நடந்துள்ளது. டயானா உயிரோடு இருந்தபோது தன் பிள்ளைகள் கமீலாவுடன் பேசவோ, பழகவோ அனுமதித்தது கிடையாது.

சமீபத்தில் ஜேம்ஸ் அரண்மனையில் சாள்ஸை பார்க்க சென்றிருந்தார் கமீலா. அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது வெளியே சென்ற வில்லியம் திரும்பி வந்தார்.

கமீலாவுக்கு இளவரசர் வில்லியம்மை கண்டதும் ஒரு மாதிரி ஆகிவிட்டது. தன் தாயாரின் நிம்மதி குலையக் காரணமானவர் என்று கோபப்படுவாரோ என்று நினைத்திருப்பார் கமீலா.

ஆனால் வில்லியம் எவ்வித கசப்பும் இல்லாததுபோல கமீலாவுடன் பேசினார். விரைவில் வில்லியமின் தம்பி ஹரியும் தமது தந்தையின் காதலியை சந்திப்பாராம்.

இத் தகவல்களை இலண்டன் 'சன்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.



"மக்களின் ஆர்வம் கருதி இச் செய்தியை வெளியிட்டுள்ளோம். சாள்ஸ், கமீலா, வில்லியம் ஆகியோர் இணைந்து விட்டனர் என்பதை எங்கள் வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரே குடும்பமாகிவிட்ட அவர்களின் உறவு வளரவேண்டும்" என்று 'சன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இப்படியும் காரணங்கள்

நியாயமான காரணங்களுக்காக விவாகரத்து என்பது தவறல்ல. ஆனால் வேடிக்கையான விவாகரத்துக்களும் இருக்கின்றன.



உதாரணத்திற்கு சிலவற்றைப் பாருங்கள்; தன் மனைவிக்கு ஒழுங்காகச் சாப்பிடத் தெரியவில்லை என்பதற்காக ஒரு கணவர் விவாகரத்து செய்துவிட்டார். இது நடந்தது அமெரிக்காவில்.

"எங்கள் இருவருக்கும் இடையே குழந்தையை படுக்க வைக்க மறுக்கிறார்" என்று தன் கணவரை விவாகரத்து செய்யும் காரணத்தை கூறியுள்ளார் ஒரு பெண்.

"என் கணவர் எப்போதும் விசிலடித்தபடி இருக்கிறார். எனக்கு விவாகரத்து தேவை" என்று இந்திய நீதிபதியின் மனைவி ஒருவர் வழக்குத் தொடுத்துள்ளார்.

அமெரிக்காவில் ஒரு பெண் தொடுத்துள்ள வழக்கு என்ன தெரியுமா? "என் கணவர் படுக்கையில் படுக்காமல் தினமும் மரத்தில் ஏறிப் படுத்துக் கொள்கிறார்" என்கிறார்.

# மீறிய நடிகை



ஐசலி தலான் 44 வயது நடிகை. ஆனால் மிக இளமையாக தெரிவார். மலேசிய நடிகையான இவருக்கு ஏராளமான ரசிகர்கள்.

தற்போது இவர் கைதாகி பிணையில் விடப்பட்டுள்ளார். இந்தோனிசிய பெரும் புள்ளியான வாலிபர் ஒருவருடன் ஹொட்டல் அறை ஒன்றில் தங்கியிருந்தார்.

இஸ்லாமிய விதிப்படி இது தப்பான நடத்தை என்பதால் கைதானார் நடிகை. ஆனாலும் உடனே பிணையில் வெளியே வந்துவிட்டார்.

இவரை ஷரியத் நீதிமன்றமும் விசாரிக்க இருக்கிறது. அந்நிய வாலிபருடன் தனியாக தங்கியது நிரூபிக்கப்பட்டால், இரண்டு மாதச் சிறையும், அபராதமும் விதிக்கப்படும்.

# அடித்தவருக்கு இடி



தன் மனைவியை கைநீட்டி அடித்தவருக்கு தன் தீர்ப்பு மூலம் இடி கொடுத்திருக்கிறது நீதிமன்றம்.

அந்தத் தண்டனை என்ன தெரியுமா?

ஆறு மாதச் சிறைத் தண்டனை. மூன்று வருடம் வெளியே பொலிஸ் கண்காணிப்பில் இருக்க வேண்டும். 200 மணி நேரம் பொதுப் பணியில் சம்பளம் இன்றி வேலை செய்ய வேண்டும். அத்துடன் பெண்கள் உரிமைச் சங்கத்துக்கு இரண்டு இலட்ச ரூபாய் செலுத்த வேண்டும்.

இத்தனை தண்டனைகளுக்கு உள்ளானவர் யார் தெரியுமா? பிரபல ஹொலிவூட் கவர்ச்சிக் குண்டு பமீலாவின் முன்னாள் கணவர். பமீலாவை அடித்ததுக்காகத்தான் இத்தனை இடிகள்.



படிப்பகம்

www.padippakam.com

## இளமை மனதில்



சாகசம் செய்வது என்றால் சும்மாவா. உயிரைத் துச்சமாகக் கருதும் துணிச்சல் முக்கியம். சிட்னியில் மிக உயரமான சிட்னி டவரின் முன்பாக கம்பம் ஒன்றில் நின்று வித்தைகள் பல செய்து பிரமிப்பூட்டுகிறார் ஒரு சாகச மன்னர். கம்பத்தின் உயரம் 35 மீட்டர். சாகச மன்னரின் வயது என்ன "தெரியுமா? அதுதான் முக்கியம்: 65. பெயர் கிளைவ் ஹாரிசன்.

திறமை, துணிச்சல், துடிப்பு இருந்தால் என்றும் இளமைதான். புகுந்து விளையாடலாம்.

## கற்றுக்கொள்கிறது



கடலில் வாழும் உயிரினங்களில் டொல்பின் மீன்களை சர்க்கஸ் வித்தைகளுக்கு பயிற்றுவிப்பர். அவையும் வித்தைகளை கற்றுக்கொண்டு வியப்பூட்டும்.

தற்போது கடலில் வாழும் பாலூட்டிகளான சீல் மீன்களையும் சர்க்கசுக்கு பயிற்றுவிக்க ஆரம்பித்துள்ளனர். படத்தில் சீல் மீனை கட்டியணைத்திருக்கும் சர்க்கஸ் அழகி இரினா. ரசியாவில் நடந்த சர்க்கஸில் இக் காட்சி பதிவு செய்யப்பட்டது.

## உள்ளே ஓடும்

சீனாவின் தலைநகர் பீஜிங். எப்போதுமே பிஸியான நகரம். இங்கே மிகப்பெரிய, மிக நீளமான பல்பொருள் அங்காடி இருக்கிறது. சகல பொருட்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம். ஒரு கூரையின்கீழ் தேவையானதெல்லாம் கிடைக்கும். ஆனால் அங்காடி முழுக்க நடந்தால் கால் தேய்ந்துவிடும். நேரமும் ஓடிவிடும். அதனால் அங்காடிக்குள்ளேயே மின்சார ரயில் விட்டுள்ளனர். இந்த ரயிலில் பயணம் செய்தபடி தேவையான பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும். வசதி எப்படி?





## தகவல் பெட்டி

## குதறும் கொட்ஸில்லா

கடந்த மே 20ம் திகதியன்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள மொத்தம் 7363 திரையரங்குகளில் 'கொட்ஸில்லா' என்றொரு திரைப்படம் திரையிடப்பட்டது.

ஏற்கனவே மிகப் பெரும் வசூலைப் பெற்றுத் தந்த 'ஜுராசிக் பாக்', 'த லொஸ்ற் வேல்ட்' ஆகிய 'ஹொலிவூட் படங்களைவிட, மிக கூடுதலான வசூலை ஈட்டித்தரப் போகிறது' என்ற எதிர்பார்ப்புடன் வெளியிடப்பட்ட இப்படம்- 5 வாரங்களாகியும் மேற்கூறப்பட்ட இரு படங்கள் ஒவ்வொன்றும் நிலை நாட்டிய சாதனையை எட்ட முடியவில்லை.

'கொட்ஸில்லா' திமிங்கிலம் மற்றும் கொரில்லா ஆகியவற்றின் இரு ஜப்பானியப் பெயர்களையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட பெயராகும்.

1954ம் ஆண்டுகளில் ஜப்பானிய திரைப்படத் தயாரிப்பாளர்கள் விசித்திரமான பிராணிகளைக் கற்பனை பண்ணி, 'வற்ஸில்லா' என்றொரு பயங்கரப் பிராணியை உருவாக்கினார்கள். இதே பிராணி ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் பிரதான வர்த்தக நிலையமான 'கின்ஸா' சதுக்கத்துள் புகுந்து பேரழிவுகளை ஏற்படுத்துவதாக கதை அமைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து பல படங்கள் 'வற்ஸில்லா' பாத்திரப் படைப்புடன் வெளிவந்து ஜப்பானிய மக்களை மட்டுமல்ல மேற்குலக நாட்டவர்களையும் திகிலடையச் செய்தன.

இதன் அடிப்படையில் இப்பொழுது 'கொட்ஸில்லா'வை கடந்த இரு வருடங்களாக உருவாக்கி வெளியிட்டுள்ளனர். வான மண்டலத்திலுள்ள பிறிதொரு கிரகத்திலிருந்து பூவுலகுக்கு வந்து சேர்ந்த 'கொட்ஸில்லா', நியூயோர்க் நகரத்தையே தன் பற்களால் குதறி எறிகிறது.

படத்தில் காணப்படுவது 40 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட வற்ஸில்லாவின் தோற்றம்.

தற்போது உருவாக்கப்பட்ட 'கொட்ஸில்லா'வை நவீன தொழில் நுட்பத்துடன் உருவாக்கியிருந்த போதிலும் இந்த 'வற்ஸில்லா' கொடுத்த பேரதிர்ச்சியை கொடுக்க முடியவில்லை என்கின்றனர் விமர்சகர்கள். டைனோசரை வைத்து தயாரான 'ஜுராசிக் பார்க்' வசூலை முறியடிக்கும் நம்பிக்கையில் உருவான 'கொட்ஸில்லா' தோல்வியடைந்ததால் பல நூறு கோடி ரூபாய்கள் நெத்தியடியான நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## இன்று இவர்தான்

உலகில் மிக உயர மனிதனாக வாழ்ந்த முகமது ஆலம் சன்னா சமீபத்தில் மரணமாகிவிட்டார். உயரம் 7 அடி 71/4. அவர் பாகிஸ்தானியர். அவரது மறைவின் பின்னர் இன்றைய உயர்ந்த மனிதர் இவர்தான். பெயர்: நாசர் அஃமெட் சூம்றோ. இவரும் பாகிஸ்தானியர்தான். அன்னாரின் உயரம்: 7 அடி 7 அங்குலம். கையில் வைத்திருப்பது பாகிஸ்தான் தேசியக் கொடி.





## ஆட்டுவித்தது யாது

ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா? இந்தக் கட்டடத்தை ஆட்டுவித்தது, இங்கு வைக்கப்பட்ட குண்டு. அமெரிக்காவில் உள்ள சான்ஃபிரான்சிஸ்கோ நகரிலிருந்த மூன்று மாடிக் கட்டடத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பின் பின்னர் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது. 17 பேர் படுகாயமடைந்தனர். அதிஷ்ட வசமாக உயிரிழப்புக்கள் நேரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 63

# மைனருடன் ரயில் ஏறிய பெண்

## பங்களா கட்டிய நடிகை

ஏழைக் குடும்பத்தில் பிறந்து அன்றாடப் பிழைப்புக்கே அவதிப் பட்டவர் அந்த இளம் பெண்.

சினிமா ஆசையால் சென்னைக்கு வந்து சேர்ந்தார். குடும்பத்தில் வறுமை இருந்தாலும் உடம்பில் வளமை இருந்தது.

கதாநாயகியாக நடிப்பது அல்லது சில்க் சுமிதா போல கவர்ச்சியாக நடிப்பது என்பது தான் அந்தப் பெண்ணின் இலட்சியம்.

சினிமா உலகில் உள்ளவர்கள் அனைவரும் உயர்ந்த மனிதர்கள் என்றும், இரக்க சுபாவம் உடையவர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருந்தார். அந்த நினைப்பு எத்தனை தவறானது என்பதை போகப் போக புரிந்து கொண்டார்.

புரிந்துகொண்டபோது சினிமா உலகில் இருந்து மீள முடியாதளவுக்கு அவர் நிலை மாறிவிட்டது.

வீட்டுக்கு சொல்லிக்கொள்ளாமல் ரயில் ஏறிய அவரை சென்னைக்கு அழைத்து வந்தார் ஒரு மைனர். அவரது அமர்க்காரர். சென்னையில், சினிமா உலகமே தன் பையில்தான் இருக்கிறது என்று அவர் ஆசை காட்டியதை நம்பித்தான் ரயில் ஏறினாள் அந்த அப்பாவி பெண்.

ரயில் பயணத்தின்போதே மைனர் பக்கத்தில் இருந்து உரசத் தொடங்கிவிட்டார். தூக்கத்தில் எதேச்சையாக நடப்பதுபோல் அவர் கைகள் அவள்மீது ஆங்காங்கே பட்டன. தொட்டன.

அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. கூச்சமாகவும் இருந்தது. சினிமாவில் சான்ஸ் வாங்கித்தரப் போறவர் அல்லவா. தாங்கிக்கொண்டாள்.

சென்னையில் கோழிக்கூடு போன்ற அறை ஒன்றில் இருவரும் தங்கினர். அன்றே வாய்ப்புத் தேடும் படலம் ஆரம்பமானது. தனது செலவில் நல்ல புடவைகள் சிலவற்றை அவரே வாங்கிக்கொடுத்தார். தொப்புள் தெரியும் விதமாகப் புடவை கட்டிக்கொள்ளுமாறு கண்டிப்பான உத்தரவும் போட்டிருந்தார்.

### சான்ஸ்கொடு

அவர்கள் முதலில் சந்தித்தது பிரபலமான ஒளிப்பதிவாளர் ஒருவரை. ஒளிப்பதிவாளருக்கு முதல் பார்வையிலேயே மயக்கம் வந்துவிட்டது. ஒரு ஹோட்டலின் பெயரைக் கூறி அன்று மாலையே அழைத்து வரச்சொன்னார். மைனர் இளித்தபடி சம்மதித்தார்.

மாலையில் அந்த ஒளிப்பதிவாளர் போதையில் மிதந்து கொண்டிருந்தார். அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் பிரமாண்டமும், அவர் தங்கியிருந்த கடல்போல பெரிய அறையும், வாசனையும், குளிரும்..... பிரமிப்புக்கள் அடங்க முன்னரே ஒளிப்பதிவாளரின் கைகளுக்குள் சிக்கி கட்டிலில் சரிக்கப்பட்டுவிட்டாள். மைனர் எப்போதோ வெளியே போய்விட்டார்.

மறுத்துப் பார்த்தாள். "சான்ஸ் வாங்கித்தரணும் என்றால் முதலில் நீ எனக்கு சான்ஸ் தரணும் பாப்பா" என்றார் அந்த ஒளிப்பதிவாளர். அவளுக்கு தன் ஊரில் பார்த்த சினிமாக்களில் வரும் வில்லனின் நினைப்புத்தான் வந்தது.

ஒரு ஹீரோவின் பெயரைக்கூறி "அவருடன் உன்னை ஜோடியாக நடிக்கவைக்கிறேன். அப்புறம் நீ எங்கேயோ போயிடுவாய்" என்றார்.

அந்த ஹீரோவுடன் ஜோடி சேரும் நினைப்பே அவளை வானில் மிதக்கவைத்தது. அந்த ஒளிப்பதிவாளரை அந்த ஹீரோவாக நினைத்துக் கொண்டாள். அதன்பின்னர் மறுப்பே தெரிவிக்கவில்லை.

### மதிப்பு போனது

அன்றைய சம்பவத்தின் பின்னர் பலருக்கு விருந்தானாள். வாக்குறுதி கொடுத்தவர்கள் காரியமானதும் மறந்து போயினர். தத்துவம் பேசும் முன்னணி ஹீரோ ஒருத்தரும் அவளை விருந்தாக்கிக் கொண்டார். அவர் நடந்து கொண்டமுறை அவர் மீது அவள் வைத்திருந்த மதிப்பை காணாமல் போகச் செய்தது.

பலரையும் சந்தித்த அனுபவத்தால் அவளும் நெளிவு சுழிவுகளைக் கற்றுக்கொண்டாள். அந்த நெளிவு சுழிவுகளைப் பயன்படுத்தி சினிமாவுக்கு பைனான்ஸ் செய்யும் புள்ளி ஒருத்தரை தன் காலடியில் கிடக்கவைத்தாள். அவர் மூலமாகத்தான் முதல் படம் கிடைத்தது.

இடுப்பு அழகி என்று ரசிகர்கள் ஜொள்ளு விட்டனர். இடையை காண்பித்தே ரசிகர்களைக் கவர்ந்து, கவர்ச்சி நடிகையாக மாறியதுடன், பெயரையும் மாற்றிக் கொண்டார். மைனருக்கு ஒரு தொகையைக் கொடுத்து கத்தரித்தாள்.

இடையில் மடிப்பு உள்ள நடிகை என்றும், விசித்ரமான கவர்ச்சி என்றும் பத்திரிகைகள் எழுதின.

சில்க் சுமிதா உயிருடன் இருந்தபோதே அவருக்குப் போட்டியாக மாறுமளவுக்கு உயர்ந்தார் அந்த நடிகை கவர்ச்சியில் விசித்ரம்தான்.



விசித்ரா

### டி. ஆர். ராஜகுமாரி

தியாகராஜ பாகவதர் முதற்கொண்டு எம்.ஜி.ஆர். வரை பல கதாநாயகர்களுடன் நடித்தவர் டி.ஆர்.ராஜகுமாரி.

அன்றைய தலைமுறையின் கனவுக் கன்னி. ஆனால் நேரில் கண்டால் யாரும் அவரை ஒரு நடிகை என்று சொல்லமாட்டார்கள். அவரது இயற்கைத் தோற்றமான கறுப்பு நிறமே காரணம்.

இரண்டு மூன்று படங்களில் நடித்தவுடனேயே பெரும் பங்களா கட்டியவர் ராஜகுமாரிதான். கன்னிகா பவனம் என்று பெயரும் சூட்டியிருந்தார். தியாகராஜ பாகவதருக்கும் அவருக்கும் இடையே நெருக்கம் என்று அப்போதே கிசுகிசு உலாவியது.

ராஜகுமாரியிடம் நவீனன் என்னும் சினிமா நிருபர் கேட்ட கேள்விகளும், அவரது பதில்களும்:

கே: பாகவதர் எப்படிப்பட்டவர்?

ப: நல்ல நடிகர். நன்றாகப் பாடுவார்.

கே: இன்னும் கொஞ்சம் விரிவாகக் கூறுங்களேன்?

ப: சொன்னேனே, நல்லவர் என்று. மேக்கப் போட்டுக் கொண்டு வந்தால் நடித்து விட்டுப் போவாரே தவிர, எந்த நடிகையிடமும் பேசிக்கொண்டு இருக்க மாட்டார். அதற்குப் பெயர்தான் நல்லவர்.

கே: பொதுவாக பாகவதர் காதல் மன்னன் என்று பேசிக் கொள்கிறார்களே. அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: (சிறிது தயங்கி) அதெல்லாம் எனக்குத் தெரியாது. இனிய குரலில் பாடுவார். அதில் ஆண், பெண் மயங்கி உள்ளனர்.




## ஜீன்ஸ் தோல்வி

ஷங்கர் இயக்கி அசோக் அமிர்தராஜ் பணத்தைக் கொட்டி எடுத்த ஜீன்ஸ் போட்ட முதலுக்கு ஏற்ற இலாபம் காட்டவில்லை. அப்படியிருந்தும் ஐஸ்வர்யா ராய்க்கு உள்ள மவுசு குறையவில்லை. ஜொள்ளர்களின் கனவில் தொல்லை கொடுத்தபடிதான் இருக்கிறார் உலக அழகி. இந்தியில் 'ஜீன்ஸ்' டப்பிங் படுதோல்வி.

ஏ.ஆர். ரகுமான் இசையமைத்த 'ஜீன்ஸ்', 'கெல் கிலாடி கா', 'மிஸ்டர் ரோமியோ', 'கபி நாகபி' ஆகிய படங்களும் இந்தியில் சரியாகப் போகவில்லையாம்.


கரிஷ்மா கபூர்


பாண்டியராஜன்-ரசிகா
படம்: கபடி கபடி

## சட்டத்தரணி நடிகை

சுவலட்சுமியை தேடி இந்தியில் படவாய்ப்புக்கள் குவிகின்றன. 'மாட்டேன்' என்று கறாராகச் சொல்லிவிட்டாராம்.

காரணத்தையும் அவரே கூறுகிறார்: "இந்தியில் என்னை கவர்ச்சிப் பொம்மையாக காண்பிக்கவே விரும்புகின்றனர்.

ஷில்பா ஷெட்டிகள், கரிஷ்மா கபூர்கள், மாதுரி தீட்சித்துக்கள் ஆகியோருக்குத்தான் அங்கு காலம்.

வங்காள சினிமாகூட இப்போது சரியாக இல்லை. பழைய ஸ்டைலில் படம் எடுத்து தோல்வியைத் தழுவுகிறார்கள்.

தமிழ் சினிமா இப்போது பரவாயில்லை. சட்டத்தரணிக்கு படித்து முடித்ததும் நீதிமன்றம் சென்று வழக்காடுவேன். நடிப்பையும் தொடர்வேன்" என்கிறார்.

## லவ்ஸ்டோரி 99

'காதலா காதலா' படத்தில் திக்குவாய்க்காரராக நடித்த பிரபு தேவா அடுத்து நடிக்கும் படம் 'லவ் ஸ்டோரி 1999'. இது தமிழ்ப் படமல்ல. தெலுங்குப் படம்.

பிரபுதேவா நடிக்கும் முதலாவது தெலுங்குப் படமும் இதுதான். இயக்கம் ராகவேந்திரராவ். ரம்யா கிருஷ்ணன், நவீன் ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

தமிழில் பல படங்கள் வந்ததாம். ஒரே மாதிரியான பாத்திரங்கள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டாராம்.

## பொய்யிலும் பொய்

நடிகை வினோதினி பிரபலமான தொழிலதிபர் ஒருவரை லவ்வியதாகவும், திருமணம் நடக்கப்போவதாகவும் கூறப்பட்டது.

திடீரென்று யாரோ குறுக்கே புகுந்து காரியத்தைக் கெடுத்துவிட்டனர். வினோதினியுடன் நெருக்கமாக இருந்த நடிகர்களில் சிலர்தான் மூக்கை நுழைத்து கெடுத்துவிட்டதாகத் தகவல்.

ஆனால் வினோதினி அனைத்தையும் மறுக்கிறார். "பொறாமை பிடித்த சிலர் பரப்பிய வதந்திதான் அது. அப்படியொரு எண்ணமே எனக்கு இருந்ததில்லை" என்கிறார்.

தற்போது சின்னத்திரை நாடகங்கள் மற்றும் விளம்பரப்படங்களில் வினோதினி தலைகாட்டுகிறார்.

www.padippakam.com

## ...ரானின் வாரிசு

...க்மாவின் சகோதரிகள் ...புலகில் புகுந்ததுபோல ...னின் சகோதரியும் வரு... . அவரது பெயர்: ...ல். சினிமாவுக்காக ... மாற்றப் படக் கூடும். ...டுத்த எடுப்பிலேயே ...குமார் ஜோடியாக ...க்களம்' படத்தில் நடிக்க ... இயக்குநர் கரண் ...பண்ணினாராம். அகத் ...ம் சான்ஸ் கொடுக்க ...ந்தாராம். யார் படத் ...தலில் நடிப் ...என்று ...விடம் ...சனை ...றார் ...ல்.

## நக்மா பயம்

சென்னையில் இருந்து பாது காப்பு கருதி மும்பாய் சென்ற நக்மா ஒரு விருது வழங்கும் விழா வுக்காக சென்னை சென்றார்.

சென்னையில் சொந்த வீடு இருந் தும்கூட பாதுகாப்புக்காக நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார்.

'யாருக்கும் பயந்து மும்பாய் போகவில்லை' என்று பேட்டி கொடுத் தாலும் பயம் இருக்கத்தான் செய்தது.

அந்த ஹீரோவுக்கு அரசியல் பலமும் இருக்கிறது. 'கல்யாணம் பண்ண மறுத்தால் இரண்டில் ஒன்று பார்ப்பேன்' என்று ஹீரோ மிரட்டியி ருக்கிறாராம்.

## அழைப்பு மறுப்பும்

நடிகை கஸ்தூரியை ஒப் பந்தம் செய்யச் சென்றார் ஒரு தயாரிப்பாளர். பெரிய சம்பளமும் பேசினார். கஸ் தூரிக்கு ஏகப்பட்ட சந் தோசம்.

யார் கதாநாயகன், யார் இயக்கம்? என்று கஸ்தூரி விசாரித்தார். பெயரைச் சொன்னார் தயாரிப்பாளர். கஸ்தூரி அதிர்ந்து போனார். விவகாரமான படம் எடுக் கத்தான் அழைத்தாராம். கோபப்பட்டு திருப்பி அனுப் பிய கஸ்தூரி பின்னர் கொஞ்சம் யோசித்தாராம்.

## அதிரடி பதில்கள்

நடிகை சிம்ரானின் அதிரடி பதில்கள்

கே: கோவிலுக்குப் போவீங்களா?
ப: நேரம் கிடைத்தால்.
கே: சுப்ரபாதம் தெரியுமா?
ப: கேட்கத் தெரியும்.
கே: சமீபத்தில் கேட்ட பாடல்?
ப: ஞானப்பழத்தை பிழிந்து.
கே: முத்தமிட விரும்பும் நபர்?
ப: பில் கிளின்டன், ரஜினி.
கே: கல்யாணம் எப்போது?
ப: மாப்பிள்ளை அழைப்புக்கு மறுநாள்.

## விசாரணை

'சந்திப்போமா' படத்தில் நடிக்க முற்பணம் வாங்கியிருந் தார் சிம்ரான். பின்னர் சிம்ரானை தூக்கிவிட்டு ப்ரீதா விஜயகுமாரை ஒப்பந்தம் செய்தனர்.

முற்பணத்தை திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டார் சிம் ரான். தயாரிப்பாளர் பொலிசில் புகார் செய்தார். பொலிசார் சிம்ரானை அரைமணி நேரம் துளைத்தெடுத்து விட்டனர்.



**முகப்பில்**

மன்சூர் அலிகான்–
மனோபாலா
படம்: நட்புக்காக

சுவலட்சுமி

## மன்சூர் அலிகான் வில்லனா?

'நடிகர் மன்சூர் அலிகான் திரையில் மட்டுமல்ல உண்மையாகவே வில்லன்தான். இப்படித்தான் பொலிசில் புகார் கொடுத்தார் ஒரு அழகி.

தன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு மன்சூர் அலிகான்தான் அப்பா என்றும் அடித்துச் சொன்னார்.

மன்சூர் அலிகானுக்கு செயலாளராக இருந்த அழகிதான் புகார் கொடுத்தவர். இவ்விவகாரம் பெரிதாகப் பேசப்பட்டது. மன்சூர் சற்றும் அசராமல், 'எல்லாமே கட்டுக்கதை. நான்தான் அவள் குழந்தைக்கு தந்தை என்பதை நிரூபிக்கட்டும் பார்க்கலாம்" என்றார்.

விஞ்ஞானரீதியாக பரிசோதிக்க பொலிசார் முடிவு செய்தனர். இக்கட்டத்தில் அந்த அழகியும், அவள் குடும்பத்தாரும் பின்வாங்கினர். "நாங்கள் மன்சூர் அலிகானுடன் சமரசமாகிவிட்டோம்" என்று கூறினர்.

"வேறொரு வாலிபருடன் உறவு கொண்டதால் அந்தப் பெண் கர்ப்பமானார். அந்த வாலிபர் வெளிநாடு சென்றுவிட்டார். அவர் குடும்பத்தினர் என்மீது பழிபோடச் சொல்லி பணம் கறக்கத் திட்டமிட்டனர்" என்கிறார் மன்சூர் அலிகான்.

"பணத்தை கொடுத்து அப் பெண்ணை சமாளித்துவிட்டார் மன்சூர். அதுதான் அப்பெண் விசாரணைக்கு வருகிறாள் இல்லை" என்கின்றனர் பொலிசார்.

மன்சூர் அலிகான்மீது அடிக்கடி புகார்கள் எழுவது வழக்கமாகிவிட்டது. முன்னர் அடிதடி விவகாரங்களில் புகார்கள் கிளம்பியது. இப்போது அழகி விவகாரத்தால் புகார் கிளம்பியுள்ளது.

## நாய்ப்பிரியை மகேஸ்வரி

மகேஸ்வரி நாய்ப்பிரியை. வீட்டில் ஐந்து நாய்களை வளர்க்கிறார். படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் நாய்களுடன்தான் இவரது பொழுதுபோக்கு. ஐந்து நாய்களுக்கும் தினமும் காலையில் மகேஸ்வரியின் முத்தம் தவறாது கிடைக்கும்.

அடிக்கடி காதலர்களை மாற்றிக்கொள்ளும் மகேஸ்வரி தற்போது நாகார்ஜுனாமீது கண் வைத்திருப்பதாகத் தகவல்.

## முரளியின் விகடன்

விஜய்க்கு அடுத்த நிலையில் மார்க்கெட் உத்தரவாதமான நடிகராகத் திகழ்பவர் முரளி.

ரோஜா கம்பைன்ஸ் பட நிறுவனம் தனது இரண்டு புதிய படங்களிலும் முரளியையே கதாநாயகனாகப் போட்டுள்ளது.

ஒரு படத்தை ராஜ்கபூர் இயக்குகிறார். இன்னொரு படத்தை மு. களஞ்சியம் இயக்க வுள்ளார். இப்படத்திற்கு 'விகடன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இரு படங்களுக்கும் இளையராஜாவே இசையமைக்கிறார்.

## மறைக்கத் தெரியாது

இந்தியில் கவர்ச்சி கன்னி யாக கலக்கும் நாயகி கரிஷ்மா கபூர். கோடீஸ்வரன் படத்தி லும் நடிக்க ஒப்பந்தமானார். படிப்பிடிப்பு தள்ளிக்கொண் டிருப்பதால் தமிழ்ச் சினிமா உலகம் படு சோம்பேறிகள் நிறைந்த இடம் என்று அபிப் பிராயப்படுகிறாராம்.

'கரிஷ்மா மிக வெளிப்படை யானவர். கதைப்பதில் மட்டு மல்ல, சதை அழகை காண்பிப்ப திலும்தான்' என்று இந்தித் திரை யில் அபிப்பிராயம் இருக்கிறது.



வினீத்-ப்ரீதா விஜயகுமார்
படம்: காதல் சங்கமம்

## மினிசினி

...இயக்கத்தில் சூர்யாவுக்கு ...ாக 'பூவெல்லாம் கேட்டுப்பார்' ... நடித்து வருகிறார் நக்மாவின் ... தங்கை ஜோதிகா. இப்படம் வெளிவரும் ...ர ஜோதிகா 'சொல்லிவிடு' என்ற படத்தில் ...ஒப்பந்தமாகியுள்ளார்.

...ர இயக்கும் 'தேசிய கீதம்' படத்தில் கோபக்கார ...ராக முரளி நடித்துவருகிறார். நாசர் முதலமைச்ச... விஜயகுமார் சுதந்திரப்போராட்டத் தியாகியாகவும் ... இப்படத்தில் சேரனும் முக்கிய வேடமொன்றில் ...ார்.

...த்திரிந்த காலம்' படத்தில் ஒரேயொரு பாடலுக்கு ...டிய சுவாதி, விக்ரமனின் 'உன்னிடத்தில் என்னைக் ...தேன்' படத்தில் ஒரேயொரு பாடலுக்கு நடனமாட... விட்டார். இப்போது அந்தப் பாடல் காட்சியில் ... நடனமாடுகிறார்.

...' படத்தில் அஜித்குமார் காது கேட்காத, வாய் ...டியாத பாத்திரத்தில் நடித்து வருகிறார். இதே ...காது கேட்காத, வாய் பேச முடியாத பரிதாபத்திற்குரிய ...ல் 'சேது' படத்தில் 'கருத்தம்மா' ராஜஸ்ரீ நடித்து ...ார்.

...ட்டியை வைத்து 'மறுமலர்ச்சி' படத்தை இயக்கிய பாரதி ...து விஜயகாந்த் நடிக்கும் 'கள்ளழகர்' என்ற படத்தை ...றார். இதை அடுத்து பாரதி இயக்கும் படத்தில் முரளி ...யகனாக நடிக்கவுள்ளார்.

...திக்குடன் 'உதவிக்கு வரலாமா' படத்தில் நடித்த தேவயாணி, ...து கார்த்திக்கிற்கு ஜோடியாக 3 படங்களில் நடிக்கவுள்ளார். ...களை அகத்தியன், மு.களஞ்சியம், கஸ்தூரிராஜா ஆகியோர் ...கின்றனர்.

...திபன்-ப்ரீதா விஜயகுமார் ஜோடியாக நடிக்கும் 'காக்கைச் ...லே' படத்தை இயக்கிவரும் பி.வாசு, இப்படத்தில் இரண் ... கதாநாயகியாக தனுஜா என்ற புதுமுகத்தை அறிமுகம் ...ார்.

...யாறு வி. ரவி இயக்கிய 'அரிச்சந்திரா' படத்தைத் தயாரித்த ...ாதி ஃபிலிம்ஸ் நிறுவனம் அடுத்து விஜய் நடிக்கும் ...ன்றைத் தயாரிக்கவுள்ளது. இப்படத்தையும் செய்யாறு வி. ...ன் இயக்கவுள்ளார்.

...த்குமார்-புதுமுகம் மானு நடித்த 'காதல் மன்னன்' படம் ...கில் மொழி மாற்றப்பட்டு வெளியாகியுள்ளது. தெலுங்கில் ...ந்திற்கு வைத்த பெயர் என்ன தெரியுமா? 'பெல்வி குதிரண்டி'.

...ல மலையாள குணச்சித்திர நடிகரான ராஜன் பி.தேவ் முதன் ...ாக இயக்குநர் அவதாரம் எடுக்கிறார். இவர் இயக்கும் மலையாளப் ...கு 'அச்சம குட்டியோட அச்சன்' என்று பெயரிட்டுள்ளார்.

## ...ணிந்தால் துணியில்லை

...ட்சா' படத்தில் ரஜினியின் தங்கைகளில் ஒருவராக அட்டகாசமாக ...வர் செண்பகா. அடக்கம் வாய்ப்புத் தராது என்று உணர்ந்து ...டதும் துணிகளை இழக்கத் துணிந்தார்.

...மைல் ப்ளீஸ்' படத்தில் செண்பகா இயக்குநர் கூறுவதற்கு ஏற்ப ...ரியில் ஊறுகிறார். கட்டழகைக் காண்பித்தால்தான் சந்தையில் ... போகும்.



முரளி-கௌசல்யா
படம்: பூந்தோட்டம்

## காதோடு சொல்லுகிறோம்

சுந்தர இயக்குநர் திருமணத்தை தள்ளிப் போட்டுக் கொண்டு இருப்பது 'பூ' நடிகைக்கு வருத்தத்தைக் கொடுத்துள்ளதாம். விரைவில் திருமணம் நடக்க வேண்டும் என்று அவர் வேண்டாத கோயில் குளம் கிடையாதாம். திருப்பதி ஏழுமலையான் சந்நிதியில் அங்கப் பிரதட்சணம் செய்திருக்கிறார். வேண்டுதல் நிறைவேறட்டும்.

சங்கர இயக்குநர் ஏற்கனவே சூப்பர் நடிகரை இயக்கிவிட்டார். சமீபத்தில் சூப்பர் ஸ்டாரிடம் சென்று கதை கூறினாராம். அந்தக் கதையைக் கேட்ட சூப்பர் தனக்கு பொருத்தமில்லை என்று கூறிவிட்டாராம். அதன் பின்னர் விஜயகாந்திடம் கதைகூறி சம்மதம் வாங்கியுள்ளாராம்.

மூன்றெழுத்து இளம் நடிகர் படுக்கையில் இருந்து எழுந்து விட்டார். படப்பிடிப்புக் காவும் மேலதிக சிகிச்சைக்காகவும் லண்டன் செல்கிறார். அங்குதான் அவரது காதலியும் இருக்கிறார். அந்தக் காதலி வீட்டிலேயே தங்கி சிகிச்சை பெறும் யோசனையும் நடிக ருக்கு இருக்கிறதாம்.

உயரமான நடிகரின் ஜோடியாக நடித்த மந்திர நடிகை திடீரென்று படப்பிடிப்புக் களுக்கு வராமல் தெலுங்குக்கு போய்விட்டார். உயரமான நடிகருக்கு தன்மீது கோபம் வராது என்ற நம்பிக்கையில்தான் இழுத்தடிக்கிறார். அந்தளவுக்கு கைக்குள் போட்டிருக்கிறார்.

மாவீரன் பெயர் கொண்ட உயரமான நடிகர், மனைவி பெயரில் பங்களாக்கள் வாங்கிப் போட்டிருக்கிறார். அவ்விடயம் கிளு கிளு நட்சத்திரத் தம்பதிக்கு தெரிந்து விட்டது. கிளு கிளு தம்பதியின் மூத்த மக ளுடன் மாவீரன் நடிகர் நெருக்கம். அத னால் மகள் பெயரிலும் ஒரு பங்களா வாங்கிப் போடுமாறு கிளு கிளு தம்பதி நச்சரிக்கிறதாம்.

சூப்பர் ஸ்டார் சென்னை நகரில் வசதி யான ஓய்வு விடுதி ஒன்றை நிர்மாணித்து வருகிறார். 50க்கும் மேற்பட்ட சொகுசு அறைகள் அங்கு இருக்கிறதாம். விரைவில் திறப்பு விழா நடக்க இருக்கிறது.

கௌசல்யமான நடிகை மீது பைத்திய மாக இருக்கும் மூன்றெழுத்து 'மு' நடிகர் படு டென்ஷனில் இருக்கிறார். நடிகை தன் காதலை அலட்சியம் செய்வதை மறக்க மதுவை நாடு கிறார். நடிகரின் மனைவியோ கவலையில் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறார்.

இசை அரசர் தனது மகள் பெரிய பாடகி யாகப் போகிறார் என்று நினைத்திருந்தார். ஆனால் சோபிக்க முடியாமல் மகள் திணறு கிறார். தினமும் பயிற்சி நடக்கிறதாம்.

## டைட்டானிக்

அந்த
பிரமாண்டமாக
பொங்கிவரும்
புதுவெள்ளத்தில்
உலகம் ஒருக்கால்
மூழ்கியது
உண்மைதான்!
**
உயிர் பெற்றது
(கெமரூன்) சிற்பி
செதுக்கிய சிலை.
அதனாலோ!
இன்று
ஓடுகின்றது!
**
மிதக்கும்
சொர்க்கத்தில்
கூட
பாகப்பிரிவினை:
வர்க்கப்
போராட்டம்!
**
மூழ்கப்போவது
கப்பலா?
காதலா?
அனுமானிக்க
முன்னரே,
மூழ்கிப் போனது...
கப்பல் அல்ல...!
**
பனிப்பாறையைத்
தொட்ட
பிரமாண்டத்தை
விட,
அந்த முதல்
முத்தம்
நெஞ்சைத்
தொட்டது.
**
ஆங்கிலக்
கனவுகளிலேயே
உதட்டோடு
உதடு
உரசியதைவிட,
உள்ளத்தை
உரசிய உணர்ச்சிச்
சிதறல்கள்....
**
இருவருள்
பிராணவாயுவைத்
தியாகம்
செய்வதில்கூட
போட்டி...!
**
மீண்டும்
ஓர்
க(த)ண்ணீர்க்
காவியம்!

இணுவையூர்
உத்திரன்.

## அழிந்தும் அழியாமல் ...

சத்தியத்தை விழுங்கி
பொய் சிரிக்கும்
பூவுலகில்
அழிந்தும் அழியாமல்
செம்பிற் களிம்பாய்
நீ மட்டும் என்னில்
நிச்சயமாய்- நிஜமாய்
நிரம்பி இருக்கின்றாய்!

சருகை உரமாக்கி
துளிரை வளர்ப்பது போல்,
கடந்த நினைவுகளால்
நிகழ்வையும் நுகர்கிறேன்!

காதலால்
நெஞ்சுருகிக்
கண்ணீர்மல்கிய
காலம் போய்,
நோதலால் நொந்து
வெந்து, அழுது, அழியும்
தூக்கமிலா இரவுகளால்
தொலைந்து போ...!
என்று என்னை
ஆக்கி ஆறினாயோ?

மழை யொழிந்தும்
ஒழியாத் தூவானமாய்
என் மனப் பசுமையில்
மணம் வீசி
மலரும் மலர் நீயே!
இறந்ததென் காலம்:
இறவாதென் காதல்!

பால பேராதரன்.

## மனித வேட்டை

வாடா நண்பா!
போவோம்
மனித வேட்டைக்கு...!
••
இரண்டு
துப்பாக்கிகளும்
பத்து குண்டுகளும்
எடுத்துக்கொள்!
••
ரவை மாலை
அணிந்து கொள்!
••
இதுதான் போர்க்களம்!
அதோபார்
வருகிறார்கள்...
சுட்டுத் தள்ளு!
••
அவர்கள்
நல்லவர்கள் என்றா
சொன்னாய்?
••
யாராயிருந்தால்
நமக்கென்ன...?
மனிதராயிருந்தால்
விட்டு வைக்காதே!
••
சுடு சுடு...
சுட்டுப் பொசுக்கு!
நல்லவர் கெட்டவர்
நண்பர் பகைவர்
எல்லாம் என்ன
மனிதர்தானே...!
மடிந்து சாகட்டும்!

எஸ்.எஸ்.

## பௌர்ணமி விடுதலை?!

கசாப்புக்கு காத்துக் நிற்கும்
கால் நடையின் ஒலத்துக்கு
விடுதலை!

சிறையிலே கைதியாய்
நிற்கும்
கொடியோர் சமூகத்துக்கு
விடுதலை!

தெருவிலே தவித்து
நிற்கும்
தெருவாசிகளின் பசிக்கு
விடுதலை!

'பார்'களிலே சூழ்ந்து
நிற்கும்
'குடி' மக்களின் வெறிக்கு
விடுதலை!

சினிமா 'கியூ'வில் நிற்கும்
சிருங்கார ரசிகர்களுக்கு
விடுதலை!

அகதியாய்க் கலங்கி நிற்கும்
அடிமைத் தமிழருக்கு-
எப்போது
விடுதலை?

டி. ஜோர்ஜ்- லபுகலை.

## தேன் கிண்ணம்

## அவள் வருவாளா?

நிழலைக் கூட
நிஜங்களாக
நினைத்ததுண்டு-
அவைதான்
உன்
நிழற்படங்கள்!

கனவுகள்கூட
பெரும்
சரித்திரங்கள்போல்
என்னைப்
பிரமிக்க வைத்தது!

தபாலகம்
தாஜ்மகாலாகவும்
தபாற்காரன்
தேவ தூதனாகவும்
இருந்தான்-
உன்
கடிதம் வரும்வரை

காகிதப் பூக்கள் கூட
என்னைப் பார்த்து
கண்சிமிட்டியதுண்டு-
ஏன்
காகங்களைக்கூட
ரசித்ததுண்டு!

நீ
எனக்கில்லை
என்றபோது,
நிலவு
சூரியனாகக்
கொட்டியதும்,
தென்றல் புயலாக
திருகியதும்,
என்னைத் தவிர
யாருக்கும்
தெரியாது...
ஏன்
உனக்கும் கூடத்தான்!



மாரிமுத்து யோகராஜன்-
மட்டக்களப்பு.

## அந்தநாள் ஞாபகம்





விசாலி



முதல் மனைவியுடன

கவியரசுவின் அரசியல் பிரவேசத்துக்கு அடியெடுத்துக் கொடுத்தவர் கலைஞர் கருணாநிதி. இருவரும் ஒரு காலத்தில் இணைபிரியாத நண்பர்கள். பின்னர் பிரிந்து மோதியதும் உண்டு. கலாரசிகரான கலைஞருடன் கவியரசு.

• •

கவியரசு கண்ணதாசனுக்கு மூன்று துணைவிகள். இறுதியாக நேசித்துக் கைப்பிடித்த துணைவி வள்ளியம்மை. அவரது மகள்தான் நடிகை விசாலி கண்ணதாசன். கவிஞர் கொஞ்சும் குழந்தை விசாலிதான்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(19.07.1998 தொடக்கம் 25.07.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன், புதன்.
சிம்மம் - இராகு.
கும்பம் - கேது.
மீனம் - வியாழன்.
மேடம் - சனி.
மிதுனம் - வெள்ளி, செவ்வாய்.

சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சித் தடை, மனக்கவலை. | மு.ப. | 10 மணி |
| திங்கள்- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- செலவு மிகுதி, கடன்சுமை. | மு.ப. | 10 மணி |
| சனி- தொழில் அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்வு. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- வெளியீட வாழ்க்கைஇனசன நன்மை. | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பகல் | 12 மணி |
| வியாழன்- பெரியோர் சகவாசம், காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பிரயாண மிகுதி. | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 மணி |
| வியாழன்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | பகல் | 11 மணி |
| வெள்ளி- பெரியோர் சகவாசம்உயர்ந்த எண்ணம். | மு.ப. | 10 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, மனக்கவலை. | மு.ப. | 10 மணி |
| புதன்- வீண் முயற்சி, பணக்கஷ்டம். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- பெரியோர் சகவாசம், காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பொருள் பேறு. | பகல் | 11 மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| புதன்- பலவிதபேறு, கௌரவம். | பகல் | 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பணவரவு. | பகல் | 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 12 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பலவிதபேறு. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணச்செலவு. | பகல் | 11 மணி |
| வெள்ளி- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| சனி- சுபகாரிய மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வீண் மனஸ்தாபம், பெரியோர் பகை. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 மணி |
| புதன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, கடன்சுமை. | பி.ப. | 2 மணி |
| சனி- வெளியிடவாசம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியத் தடை. | பி.ப. | 1 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| சனி- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு : சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, பலவித வேறு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| புதன்- கடன்சுமை, கௌரவக்கேடு. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பொருள் வரவு. | பி.ப. | 1 மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பலவித பேறு. | பகல் | 11 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் சிக்கல். | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, அந்நியர் உதவி. | மு.ப. | 9 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், வீண் விரோதம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், பெரியோர் நட்பு. | பகல் | 12 மணி |
| சனி- புதிய முயற்சி, பலவித பேறு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், மனக்கவலை. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | மு.ப. | 10 மணி |
| சனி- பொருள் இழப்பு, காரியத் தடை. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

# பெற்றோர்களே!

## திட்டாதீர்கள்!




சிறுவர்களுக்கு அடிப்பதிலும் பார்க்கத் திட்டுவதனால் பெரும்பாதிப்பு ஏற்படுகிறது என்பதை பெற்றார் மனதில் அழுத்தமாகப் பதித்துக்கொள்ள வேண்டும். அவர்களோடு ஒத்த பிள்ளைகளை உதாரணம் காட்டி, "அவனைப்பார்! அவன் முதலாம் பிள்ளையாக வருகிறான். நீ கழுதை! உனக்கு என்ன குறை வைத்தோம்? எப்போதும் கடைசியாக வருகிறாயே... கழுதை!" என்று திட்டினால் அப்பையன் உண்மையில் கழுதைக் குணமுடையவனாகவே வளருவான்.

பிள்ளையைக் 'கழுதை' என்று திட்டினால் பெற்றாரும் கழுதை என்பதுதானே பொருள்? ஆகவே பிள்ளைகளைத் திருத்துவதற்காக நாம் அவர்களைக் கண்டிப்பதற்குப் பயன்படுத்தும் வார்த்தைகள் மிகக் கண்ணியமானவையாக இருக்க வேண்டும் என்பதை மறந்து விடலாகாது.

பிள்ளைகளின் தேகாரோக்கியத்தில் அக்கறை கொள்ளும் பெற்றார் அவர்களின் மன ஆரோக்கியத்தில்தான் பல மடங்கு அக்கறை செலுத்த வேண்டும்.

எமது பிள்ளைகள் வருங்காலத்தில் சிறந்த பிரஜைகளாவதற்கு பெற்றார்களாகிய நாம்தான் நல்ல அத்திவாரத்தை அமைக்க வேண்டும்.

வளரும் பிள்ளைகள் முன்னிலையில் பெற்றார் சண்டையிடக்கூடாது. கெட்டவார்த்தைகள் எதனையும் பேசக்கூடாது. அயலவர்களைப் பற்றிய குறிப்புக்களைக் கூறலாகாது. முக்கியமாகப் பொய் சொல்லக்கூடாது.

ஏனைய பிள்ளைகளை உயர்த்திப் பேசி எமது பிள்ளைகளைத் தாழ்த்திப் பேசலாகாது.

முக்கியமாக பிள்ளைகள் அடிக்கடி சோர்வடைந்தால், குடும்பத்தவர்களுடன் ஒட்டிப் பழகாமல் ஒதுங்கியிருக்கத் தலைப்பட்டால், கேட்கும் கேள்விகளுக்கு தக்க பதிலளிக்காவிட்டால், எதையோ பறிகொடுத்து விட்டது போல் சதா யோசித்துக் கொண்டிருந்தால், விரல் நகங்களைக் கடித்துக் கொண்டிருந்தால், எதற்கெடுத்தாலும் பொய் கூறினால் நிச்சயமாக அப்பிள்ளைக்கு மனதில் அழுத்தம் தரத்தக்க தாக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவு.

இக்காரணங்களுக்காக அப்பிள்ளையைத் திட்டி- பேசித் தண்டனை கொடுக்க முனைந்தால் அப்பிள்ளை நாளடைவில் மனநோயாளியாகிவிடும் நிலையே உருவாகும்.

இத்தகைய பாதிப்புக்குள்ளான பிள்ளையிடம் அக்கறையும் அனுதாபமும் காட்டி, மனம் விட்டுப் பேசினால் அக்குறை நிச்சயம் நீங்கும்.

அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் சிறுவர் பராமரிப்பு ஆய்வகத்தைச் சேர்ந்த டாக்டர் மேத்தா தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு இதுவாகும்.

## வறண்ட சருமமா?

வறண்ட சருமத்தை உடையவர்களுக்கே அதிகமாகக் காலில் வெடிப்பு ஏற்படும். தண்ணீரில் நின்று அதிக நேரம் வேலை பார்த்தால், வெடிப்பு ஏற்படும் என்பது சரியல்ல.

தண்ணீரில் அதிக நேரம் நின்றிருந்தால் ஒருவித பூச்சிக்கடி ஏற்படும்.

காலில் வெடிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் செருப்பு போடாமல் நடப்பதே. கால் வெடிப்பு உள்ளவர்கள் வீட்டின் உள் பகுதியில்கூட செருப்பணிந்தே நடக்க வேண்டும். பாதத்தின் தோல் பகுதி கரடுமுரடான தரையில் உராயும்போது தோல் பகுதி தடிக்கும். அதிக பட்சமான தடிப்பால் கால் வெடிப்பு உருவாகும்.

பித்த வெடிப்பு ஏற்பட்டாலும் இரண்டு மாதம் தொடர்ந்து எல்லா நேரமும் செருப் பணிந்து நடந்தால் வெடிப்பின் பாதிப்பு கட்டுப்படும்.

## நடையும் குணமும்



ஒருவர் நடக்கும் தன்மையை வைத்தே, அவரது குணத்தையும் திறனையும் அறிந்துவிட முடியும்.

- ❑ காற்சட்டை பொக்கட்டிற்குள் கை விரல்களைச் செருகிக் கொண்டு சிலர் நிதானமாக நடப்பார்கள். அவர்கள் ஆழ்ந்த சிந்தனை உடையவர்கள். எதையும் பக்குவமாக அணுகுவார்கள்.
- ❑ நடக்கும்போது முன் பக்கமாகக் கையைக் கட்டிக் கொண்டு நடப்பவர்கள் புத்திசாலி களாக இருப்பர்.
- ❑ கைகளைப் பின்பக்கமாகக் கோர்த்துக் கொண்டு நடக்கிறவர்கள் எச்சரிக்கையானவர்களாக இருப்பார்கள். ஆழம் பார்த்தே காலை விடுவார்கள். சிந்தனை சக்தி அதிகம் உள்ளவர்கள்.
- ❑ சிலர் நடக்கும்போது அடிக் கடி தலையைச் சொறிவார்கள். முகத்தை அடிக்கடி துடைப்பார்கள். நடையிலும் பெரும் வேகத்தைக் காட்டுவார்கள். அவ்வாறானவர்கள் எல்லா விஷயத்திலும் அவசரம் காட்டுவார்கள். பயமும் பதற்றமும் அவர்களிடம் நிறைந்து காணப்படும்.
- ❑ நடக்கும்போது அரைகுறையாகப் பாட்டை உச்சரித்து முணுமுணுக்கிறவர்கள் மன அமைதி குறைந்தவர்கள். மனதில் சஞ்சலம் நிறைந்திருக்கும்.
- ❑ நடக்கும்போது அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே செல்கிறவர்களும் மனச் சஞ்சலம் நிறைந்தவர்களாக இருக்கக் கூடும்.
- ❑ தலையைத் தாழ்த்திக் கொண்டு, மெதுவாக நடக்கிறவர்கள் நோயாளிகள் வகையைச் சேர்ந்தவர்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EB

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-07-1998**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




# கண்ணீரில் கரைந்த இரவுகள்

புவனா



பிரிட்டிஷ் மக்களுக்கு சாள்ஸ்மீது மரியாதையை ஏற்படுத்தி, டயானாவை ஓரம்கட்ட சாள்ஸின் நண்பர்கள் வட்டாரம் திட்டமிட்டது.

டயானாவின் கதையை அன்ட்ரு மோட்டன் எழுதியதுபோல, இளவரசர் சாள்ஸின் கதையையும் புத்தகமாக வெளியிட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

பிரிட்டனில் பிரபலமான ஒலிபரப்பாளர் ஜோனதன் டிம்பிள்பி. சாள்ஸை மரியாதைக்குரியவராக சித்தரிக்கும் வாழ்க்கை வரலாற்றை எழுத ஜோனதன் டிம்பிள்பியை தேர்வு செய்தனர்.

இளவரசர் சாள்ஸ் தன் பிள்ளைகளுடன் ஓய்வு நேரத்தைச் செலவிடுவது போன்றும், மகிழ்ச்சியாக இருப்பது போலவும் சித்தரிக்கும் விதமாக புகைப் படங்கள் எடுத்து வெளியிட்டனர்.

புகைப்படங்கள் எடுப்பதற்கான இந்த ஒத்திகைக்கு சாள்ஸும் நன்கு ஒத்துழைத்தார்.

பிள்ளைகளை அழைத்துக் கொண்டு பல இடங்களுக்குச் சென்று வந்தார்.

பிரிட்டனில் இருந்து வெளியாகும் சில பத்திரிகைகளில் இளவரசர் சாள்ஸ் தன் பிள்ளைகளுடன் குதூகலமாக இருப்பது போன்ற புகைப் படங்கள் பிரசுரமாகின.

அவற்றைப் பார்த்த டயானாவுக்கு எரிச்சலாக இருந்தது. 'பாசம்கூட இப்படி வேஷமாகிவிட்டதே!' என்றும், 'இப்படிப்பட்ட கீழ்த்தரமான குடும்பத்தில் வந்து மாட்டிக்கொண்டேனே' என்றும் மனம் புழுங்கினார்.

### பேச்சுவார்த்தை

சாள்ஸின் நண்பர்கள் என்னதான் முயற்சி செய்தாலும் அரச குடும்பத்தின் கௌரவம் காற்றில் பறப்பதைத் தடுக்க முடியவில்லை.

ஒவ்வொரு நாளும் அரச குடும்ப வண்டவாளங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தபடியே இருந்தன.

இக்காலகட்டத்தில் இளவரசர் சாள்ஸ்–டயானா தம்பதியின் எதிர்காலம் பற்றிய விவாதங்கள் அரச குடும்பத்தில் இடம் பெற்றன.

மகாராணி எலிசபெத், எடின் பரோ கோமகன் ஆகியோருடன் வேறு பல அரச குடும்ப ஆலோசகர்கள் கலந்து கொண்டனர்.

இளவரசர் சாள்ஸும், டயானாவும் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கப்பட்டனர்.

இருவரும் முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் போலவே நடந்து கொண்டனர்.

அவர்கள் தங்கள் முன்பாக நடந்து கொண்ட முறையிலிருந்தே, இனியும் அவர்கள் இணைந்து வாழ்வது முடியாத காரியம் என்பது அரச குடும்ப ஆலோசகர்களுக்குப் புரிந்துவிட்டது.



அதன் காரணமாக இருவரையும் இணைத்து வைப்பது பற்றிய ஆலோசனைகளில் ஈடுபடுவதோ, இருவருக்கும் இடையே சமரசம் செய்து வைக்க முற்படுவதோ பயனற்றது எனக் கருதினர்.

புதிய யோசனை ஒன்றை அரச குடும்ப ஆலோசகர்கள் மகாராணியிடம் தெரிவித்தனர்.

மகாராணியின் மனமறிந்து சொல்லப்பட்ட யோசனை என்றும் அதனைக் கூறலாம்.

சாள்ஸும், டயானாவும் சட்டப்படி விவாகரத்துச் செய்யவேண்டியதில்லை. ஆனால் பிரிந்து வாழலாம். அரச குடும்பம் என்ற இணைப்புக்குள் இருந்து கொள்ளலாம். அரச கடமைகளில் இருவரும் ஒன்றாகவே கலந்து கொள்ளலாம்.

இந்த யோசனையை டயானா உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. யோசனையின் பின்னணியில் ஏதாவது சதி முயற்சி இருக்கக் கூடுமோ என்று பயந்தார்.

தன் பிள்ளைகள் இருவரையும் தன்னிடம் இருந்து பிரிக்கும் சதித்திட்டமும் இருக்கக்கூடும், என்பதே டயானா பயம் கொள்ள முக்கிய காரணமாக இருந்தது.

### பிரதமரிடம்

பிரிட்டிஷ் பிரதமராக அப்போது இருந்தவர் ஜோன் மேஜர். டயானாவின் சட்ட நிபுணர்கள், தனிப்பட்ட செயலாளர் ஆகியோர் ஜோன் மேஜருடனும் ஆலோசனை நடத்தினர்.

"எனக்கு எதுவும் பெரிதாகத் தேவையில்லை. என் குழந்தைகளை என்னிடமிருந்து பிரிக்காமல்விட்டால். அதுவே போதும்!" என்று தன் ஆலோசகர்களிடம் கூறினார் டயானா.

"பிள்ளைகளை மட்டுமல்ல, உங்களுக்கு சட்டப்படி சேரவேண்டிய உரிமைகளையும், உடமைகளையும்கூட விட்டுக் கொடுக்கக்கூடாது. உங்களை ஏமாளியாக்க நாங்கள் இடம்கொடுக்கமாட்டோம்!" என்று டயானாவின் சட்ட ஆலோசகர்கள் திட்டவட்டமாகக் கூறி விட்டனர்.

## தொலைபேசி உரையாடல்

டயானாவுக்கும் அவர்கள் கூறியது சரியென்றே தோன்றியது.

டயானாவின் பெற்றோர் விவாகரத்துச் செய்து கொண்டபோது டயானாவும், ஏனைய சகோதரிகளும், சகோதரரும் தந்தையாருடனேயே வாழ்ந்தனர்.

தாயைவிட்டுப் பிரிந்து வாழ்வது எத்தனை சோகமானது என்பதை அனுபவபூர்வமாக அறிந்தவர் டயானா.

தன்னைப்போல தன் பிள்ளைகளும் தாயைப் பிரிந்து துயர் அடையக்கூடாது என்பதே டயானாவின் ஆதங்கம்.

ஒருமுறை விவாதம் நடந்து கொண்டிருந்த போது டயானா அழுது விட்டார்.

"எனக்கு எதுவும் வேண்டாம். என் பிள்ளைகளுடன் அரச குடும்பத்தை விட்டு வெளியேறுகிறேன். அவுஸ்திரேலியாவில் குடியேறப் போகிறேன். எங்களை எங்கள் வழியில் விட்டு விடுங்கள்!" என்றார்.

மகாராணியும், ஏனையோரும் டயானா கூறியதை ஏற்கவில்லை.

"அரச குடும்பத்துக்கான பிரத்தியேகச் சட்டங்கள் அதற்கு இடம் தராது!" என்று கூறினார்.

வந்ததே கோபம் டயானாவுக்கு, "கண்டறியாத உங்கள் சட்டங்களால் மனிதர்களை வதைக்காதீர்கள். நரகத்தில் தள்ளாதீர்கள்!" என்று கிட்டத் தட்ட கத்தியே விட்டார். அனைவரும் வாயடைத்துப் போயினர்.

"அரியணையில் ஏறுவதற்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது வரிசையில் உள்ள இளவரசர்கள், அரச குடும்ப எல்லைக்குள் வாழ்ந்தாக வேண்டும். அப்போதுதான் ஆட்சி பீடத்துக்கான தங்கள் கடமைகளை அவர்கள் உணர்ந்து பழக முடியும்!" என்பதை அரச குடும்ப ஆலோசகர்கள் டயானாவிடம் மிகப் பவ்வியமாக எடுத்துக் கூறினர்.

"என் பிள்ளைகளுக்கு அரியணையும் வேண்டாம். முடியும் வேண்டாம்" என்றார் டயானா. ஆனாலும் அரச குடும்ப முடிவுக்கு எதிராக தனித்துச் செயற்பட அவரால் முடியவில்லை.

### கில்பியுடன் உரையாடல்

விவாகரத்து செய்யாமல் பிரிந்து வாழ்வது பற்றி டயானாவிடம் பேச்சுவார்த்தை நடத்தியபடி, மறுபுறம் டயானாவின் மதிப்பைக் குறைக்கும் காரியங்களிலும் அரச குடும்பத்தினர் தொடர்ந்து ஈடுபட்டனர்.

டயானாவின் நண்பரான ஜேம்ஸ் கில்பி எங்கிருக்கிறார், டயானாவை எங்கு சந்திக்கிறார் என்பதை அறிவதில் அரச குடும்ப உளவாளிகளும், பத்திரிகையாளர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபட்டனர்.

தீவிரமாகத் தேடப்படும் ஒருவராக மாறினார் ஜேம்ஸ் கில்பி.

சங்கடமான கேள்விகளைத் தவிர்ப்பதற்காக கில்பியும் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தார்.

தனது வீட்டில் தங்குவதைத் தவிர்த்து நண்பர்களது வீடுகளிலேயே தங்கியிருந்தார்.

தனக்காக ஜேம்ஸ் கில்பியும் ஓடி ஒளிந்து திரிவதை எண்ணி அனுதாபப்பட்டார் டயானா.

கில்பி தங்கியிருந்த நண்பர் வீட்டுக்கு டயானாவே ஃபோன் செய்து உரையாடினார்.

இந்த உரையாடலும் ஒட்டுக் கேட்கப்பட்டது. 'நன்றாகக் கேட்கட்டும்' என்று நினைத்தபடி, வரட்டுப்பிடிவாதத்துடன் ஃபோனில் பேசினார் டயானா.

இந்த உரையாடல் மறுநாளே பிரபலமான 'சண்' பத்திரிகையில் முன்பக்கத்தில் வெளியானது.

உரையாடலைப் படித்த டயானா கடும் கோபமுற்றார்.

அவரும், கில்பியும் பேசிக் கொள்ளாத ஆபாசமான விஷயங்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டு உரையாடல் வெளியிடப்பட்டிருந்தது.

டயானா விரகதாபத்தில் தவிப்பது போலவும், ஃபோன் வழியாகவே கில்பி அதனை தணிக்கத் துடிப்பது போன்றும்–காமம் ததும்பும் வார்த்தைகள் கையாளப்பட்டிருந்தன.

ஃபோன் மூலமாக செக்ஸ் என்னும் சமாச்சாரம் அப்போதுதான் மேலை நாடுகளில் தோன்றியிருந்தது.

ஃபோன் வழியாக செக்ஸியான விஷயங்களைப் பேசுவதில் திருப்தி அடைவது ஆபத்தில்லாத செக்ஸ் என்ற பெயரில் அறிமுகமாகி இருந்தது.

கில்பியும், டயானாவும் பேசிக் கொண்டதையும் அவ்வாறுதான் சித்தரிக்க முயன்றிருந்தனர்.

பதிவு நாடா ஆதாரமாக இருக்கிறது என்று 'சண்' பத்திரிகை தெரிவித்திருந்தது.

கில்பியை உருக்கமாகவும், நெருக்கமாகவும் டயானா அழைத்ததும் பேசியதும் உண்மைதான். ஆனால் ஆபாசமான வாக்கியங்களைப் பயன்படுத்தியது மட்டும் இடைச் செருகல்.

ஆனால் பாதிபொய் என்று நிரூபிக்க முற்பட்டால் மீதி உண்மை என்று ஒப்புக்கொள்வதாகிவிடும். அதனால் 'சண்'மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

ஜேம்ஸ் கில்பிதான் அந்த உரையாடலை 'சண்' பத்திரிகைக்கு விற்றுவிட்டார் என்று டயானாவிடம் அரச குடும்பத்தினர் சிலர் கோள் மூட்டினார்கள்.

முதலில் டயானாவும் நம்பிவிட்டார். பின்னர் உண்மையைப் புரிந்து கொண்டார்.

அரச குடும்பத்தில் உள்ள சிலர்தான். ஆபாசமான வார்த்தைகளைச் சேர்த்து வெளியிட்டதின் பின்னணியில் இருந்தனர் என்ற உண்மை தெரிய வந்தபோது, "இவர்கள் என்னை இப்படிப் பணிய வைக்கலாம், பயந்து ஓடவைக்கலாம் என்று எண்ணுகிறார்கள். நான் பயந்து ஓடுபவளல்ல; இவர்களது கீழ்த்தரமான முயற்சிகளால் என்னை ஒன்றும் செய்ய இயலாது!" என்று கூறினார்.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**அக்கறைப்பற்று வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி
இவர்தான்
**பவானி தங்கராஜ்,**
**R.K.M. வீதி, அக்கரைப்பற்று-07.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி**

தினமுரசு– அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 10

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

www.padippakam.com





நாடிநின் றிடர் புரிவார் -உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்;
சாடுபல் குண்டுகளால் - ஒளி
சார்மதிக் கூடங்கள் தகர்த்திடுவார்!

-சுப்பிரமணிய பாரதியார்.

# கழுதை நடனம்

## பாப்பா முரசு சிறுகதை



தெருவில் வித்தை காட்டும் ஒருவனிடமிருந்த குரங்கு ஒன்று அவனிடமிருந்து தப்பி ஒரு ஊருக்குள் ஓடியது. குரங்கைக் கண்ட அவ்வூர்க்காரர்கள் அதைச் சுற்றிச் கூடி விட்டார்கள்.

கூட்டத்தைப் பார்த்த குரங்கிற்கு குஷி பிறந்து விட்டது. உடனே அது நடனமாடியது, குட்டிக் கரணம் போட்டது. கூட்டத்தைப் பார்த்து இளித்தது. தன்னிடம் குறும்பு செய்ய வந்த சிறுவர்களை 'உர் உர்' என உறுமி விரட்டியது.

குரங்கின் ஒவ்வொரு அசைவையும் கண்டு அவ்வூர்க்காரர்கள் இரசித்தனர். நேரம் போவதே தெரியாமல் ஆடி மகிழ் வித்த குரங்கு திடீரென கூரை கூரையாகத் தாவி எங்கோ போய்விட்டது.

குரங்கின் செயல்களைப் பற்றித் தமக்குள் பேசிக்கொண்டே சென்றனர் ஊர்க் காரர்கள். இவற்றையெல்லாம் ஒரு மூலையில் நின்ற கழுதை கவனித்துக் கொண்டு நின்றது.

'இந்தக் குரங்கு அப்படி என்ன செய்து விட்டது? எல்லோரும் அதைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் குரங்கை விட என்னால் சிறப்பாக நடனமாட முடியும்.'

இவ்வாறு கழுதை தன்னைப் பற்றிப் பெருமையாக நினைத்துக் கொண்டது. 'இவர்களுக்கு என் திறமையை நாளைக்குக் காட்டுகிறேன்!' என்று வைராக்கியத்துடன் இருந்தது கழுதை.

மறுநாள்-பாடல் பாடுவதாக எண்ணித் தொடர்ந்து பல தடவை கத்தியது.

இதைக் கேட்ட அவ்வூர் மக்கள் என்னவோ ஏதோவென்று பதறி அடித்துக் கொண்டு ஓடிவந்தனர்.

மக்கள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட கழுதை, அவர்களை நடனமாடி மகிழ்விக்க எண்ணிக்கொண்டு ஒரு கூரை மேல் ஏறியது. 'கழுதைக்கு என்ன நடந்தது?' என்று அவ்வூர்க்காரர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

ஊரார் கூடி தன்னுடைய செயல்களை இரசிக்கிறார்கள் என நினைத்த கழுதை உற்சாகமடைந்து நடனமாடியது. கழுதை கூரையின் மீது நின்று நடனமாட கூரை ஓடுகள் உடைய ஆரம்பித்தன.

வீட்டின் கூரை ஓடுகள் உடைவதைக் கண்ட வீட்டுக்காரனுக்குக் கோபம் வந்தது. ஒரு தடி எடுத்து வந்து கழுதைக்கு அடி அடி என அடித்துவிட்டான். வலி தாங்க முடியாத கழுதை காள் காள் எனக் கத்திக் கொண்டு பயந்தோடியது.

**அடுத்தவர்களைப் பார்த்து, அவர்கள் செய்வதைப் போல் நாமும் செய்தால் கழுதைக்கு ஏற்பட்ட கதிதான் எல்லாருக்கும் ஏற்படும்.**

# அதிசயம் - ஆனால் உண்மை!



**கடல் இரத்தினம்:**

'லைக்கோத் யூடிஸ் டியாடெமா' என்னும் ஸ்க்விட் மீனுக்கு அதன் கரு நீலக் கண்களைச் சுற்றி 5 ஒளிரும் புள்ளிகள் உள்ளன. கருஞ்சிவப்பு, நீலம் மற்றும் வெள்ளை நிறங்களில் இவை பளபளக்கின்றன.

**இருமல் நீக்கும் கோயில்:**

இத்தாலியின் ரோம் நகரில் உள்ள இந்தப் பாழடைந்த கோயிலில் ஓரிரவு தங்கினால் தீராத இருமல் குணமாகும் என்று நம்பப்பட்டது.





**லிலி இலைப்புழு:**

இரண்டு லிலி இலைகளைச் சேர்த்துத் தைத்துக்கொண்டு இந்தப்புழு தனக்கு வீடு கட்டிக் கொள்கின்றது.



**தண்ணீர்க்குடத் தவளை:**

அவுஸ்திரேலியாவில் வாழும் இந்தத் தவளை மழைக்காலத்தில் நிறைய நீரைச் சேமித்துக் கொள்ளும். 18 மாதங்கள்வரை வரட்சி இருந்தால் கூட இந்தத் தவளை சமாளித்துவிடும்.

# வாரம் ஒரு நாடு

## மார்ஷல் தீவுகள்

தலைநகர் - தலாப்-உலிகா-டாரிட்.
பரப்பு - 181 சதுர கிலோமீட்டர்.
மக்கள் தொகை - 50 ஆயிரம் பேர்
மொழி - மார்ஷலீஸ், ஆங்கிலம், ஜப்பானீஸ்.
எழுத்தறிவு - 86%.
சமயம் - கிறிஸ்தவம்.
நாணயம் - யு.எஸ்.டொலர்.
தனிநபர் வருமானம் - 1500 டொலர்.

**அமைவிடம்:**

பசுபிக் பெருங்கடலின் மத்தியில் இந்தோச்சீனப் பிரதேசம் என்றழைக்கப்பட்ட வியட்நாம், கம்போடியா, லாவோஸ் நாடுகளின் கிழக்கேயும் மத்திய அமெரிக்காவின் மேற்கேயும் அமைந்த மிக்ரொனேசியத் தீவுக் கூட்டங்களைச் சார்ந்தது மார்ஷல் தீவுகள் என்ற நாடு.



**வரலாறு:**

1986ல் அமெரிக்கா சுதந்திரம் வழங்கியது. நாட்டின் பாதுகாப்புக் கொள்கைகளை வரையறை செய்வது, நிதியுதவி போன்றவற்றை அமெரிக்காவே செய்து வருகிறது. 1991ல் ஐ.நா.சபையில் உறுப்பினரானது.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். தேங்காய், தக்காளி போன்றவை முக்கிய விளைபொருட்கள். ஃபொஸ்பேட் படிவங்கள் அதிகம் உள்ளன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.07.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 254
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 252

**பரிசுக்குரியவர்:**
வெ. கலைராணி,
நு/மெதடிஸ் த தமிழ் மகா வித்தியாலயம், கந்தப்பளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சி.பீற்றர் றெக்சன், பிள்ளையார் கோவில் வீதி, குருமண்காடு, வவுனியா. | என்.எம். பெறோன், சாஹிரா கல்லூரி, கம்பளை. |
| ம.சிவாஜினி, விபுலானந்த மத். கல்., அட்டப்பள்ளம், நிந்தவூர்-10. | பி. அனுஜா காயத்ரி, சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. |
| எம். சதீஷன், கடவளை த.ம.வித்தியாலயம், கினிகத்தன. | எம்.என்.எ.ஃப். சப்னா, அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. |
| எம்.ஐ.எம். இ.ஃப்திகார், மதீனா தேசிய பாடசாலை, மடவள பஸார். | எம். ரஞ்சன், வேளாங்கன்னி வீதி, உப்புவெளி, திருகோணமலை. |
| வைஷ்ணவி மகேஸ்வரன், சாந்த அந்தோனியர் ம. கல்லூரி, கண்டி. | செல்வி நிரோஷினி குசலராஜா, நு/ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரி, அட்டன். |


# அகராதி (டிக்ஷனரீ-DICTIONARY)

கஷ்டமான ஆங்கில வார்த்தைகளுக்கு அர்த்தம் பார்க்க அகராதியை உபயோகப் படுத்தி வருகிறார்கள். இந்த அகராதி முதன் முதலில் எப்போது உருவாக்கப்பட்டது என்று தெரியுமா?

1612ம் ஆண்டுதான் முதன் முதலாக அகராதி உருவாக்கப்பட்டது. முதலில் இத்தாலி மொழியில்தான் அகராதி உருவாக்கப் பட்டது.

தமிழ் அகராதி எப்போது உருவாக்கப்பட்டது என்று தெரியுமா? முதல் தமிழ் அகராதி 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொகுக்கப்பட்டது.

அகர வரிசையில் தமிழ் வார்த்தைகளைத் தொகுத்து 'சதுரகராதி' எனப்படும் இந்தத் தமிழ் அகராதியைத் தொகுத்தவர் ஓர் ஐரோப்பியர். ஐரோப்பாவில் இருந்து இந்தியா சென்று தமிழ் நாட்டில் கல்விப் பணி புரிந்த பாதிரியாரான பெஸ்கி என்பவர்தான் பின்னர் வீரமா முனிவர் என அழைக்கப்பட்டவர்.



முதல் தமிழ்-ஆங்கில அகராதி 1830ம் ஆண்டும், முதல் ஆங்கில-தமிழ் அகராதி 1842ம் ஆண்டும் உருவாக்கப்பட்டன.

# கழுகு

பறவைகளின் அரசன் என அழைக்கப்படும் கழுகு மிகவும் பலசாலி. இவை பெரும் பாலும் மனிதர்களிடமிருந்து விலகித்தான் இருக்கும். பார்ப்பதற்கு துணிச்சல் மிக்கது போன்று இருக்கும் இவை இறந்த பிராணிகளைத்தான் சாப்பிடும்.



மிக உயரத்தில் வானத்தில் பறந்து கொண்டே பூமியில் நடமாடும் சிறிய எலியைக் கூட இவைகளால் சரியாகப் பார்க்க முடியும். அவ்வளவு கூர்மையான கண்களை உடையவை கழுகுகள்.

பறவைகளிலேயே கழுகுகளின் கூடுகள்தான் மிகப்பெரியவை. இவை மிக உயரமான மரங்களிலும் மலை உச்சிகளிலும் கூடுகளைக் கட்டுகின்றன. ஒவ்வொரு வருடமும் கழுகுகள் கூடுகளை மாற்றி மாற்றிக் கட்டும்.

பெண் கழுகுகள் ஒவ்வொரு வருடமும் 2 முட்டைகள் இடும். இரண்டு குஞ்சுகள் பொரித்தாலும் அவை இரண்டும் பிழைப்பது என்பது மிகவும் அபூர்வம். முதலில் பொரிக்கும் குஞ்சு பெரிதாக இருக்கும். அது உணவின் பெரும் பகுதியை எடுத்துக்கொள்ளும். அத்துடன் இரண்டாவது குஞ்சை சாகும் வரை கொத்திக் கொண்டே இருக்கும்.


காடுகளில் வசிக்கும் கழுகுகள் 20 முதல் 30 ஆண்டுகள் வரை உயிர் வாழும். வீடுகளில் அல்லது மிருகக்காட்சிச் சாலைகளில் வளர்க்கப்படும் கழுகுகள் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழும். அண்டார்ட்டிக்காவைத் தவிர உலகின் எல்லாப்பகுதிகளிலும் கழுகுகள் காணப்படுகின்றன.

# சூயிங்கம் (CHEWING GUM)



- **சூயிங்கம் எதிலிருந்து தயாரிக்கப் படுகிறது?**
  'சிக்கிள்' என்னும் மரத்தினுடைய பாலில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இம் மரத்தின் பட்டையைக் கீறி, அதிலிருந்து வடியும் பாலைச் சேகரித்து, கொதிக்க வைத்து, சூயிங்கம் தயாராகிறது.
- **இந்தமரம் எங்குள்ளது?**
  இது மத்திய அமெரிக்காவில் உள்ள காடுகளில் உள்ளது.
- **'சிக்கிள்' என்ற மரத்தில் இருந்து பெறப்படும் பாலின் மூலம் மட்டும் தானா சூயிங்கம் தயாராகிறது?**
  இல்லை. இப்போது செயற்கை முறையிலும் சூயிங்கம் தயாரிக்கப்படுகிறது.

# கோதுமை



சுமார் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டதுதான் கோதுமை. சமவெளி, மலைப்பகுதி, வெப்பப் பகுதி, குளிர்ப்பகுதி என எல்லாச் சூழல்களிலும் வளரக்கூடிய கோதுமை வகைகள் உள்ளன.

கோதுமையில் மூன்று முக்கிய பிரிவுகள் உள்ளன. அவை: எயின் கார்ன் பிரிவு, எம்மர் பிரிவு, பொதுப்பிரிவு என்பவை ஆகும்.

எயின் கார்ன் பிரிவு கால்நடைகளின் உணவுத் தேவைக்காகப் பயிரிடப்படுகின்றது. எம்மர் பிரிவு மற்றும் பொதுப்பிரிவு ஆகியன மனிதர்களது உணவுத் தேவைக்காகவும் பயிரிடப்படுகிறது.

இவற்றிலே சில வகைகள் குளிர்காலத்திலும், இளவேனிற் காலத்திலும் பயிரிடுவதற்கு ஏற்றனவாக இருக்கும். நன்கு வளர்ச்சியடைந்த கோதுமைப் பயிரானது ஒன்று முதல் ஒன்றரை மீட்டர் உயரம் வரை வளரும்.


# அதிகமான முஸ்லிம்கள்

உலகிலேயே அதிகமாக முஸ்லிம்கள் வசிக்கும் நாடு இந்தோனேஷியா. இந்நாட்டின் மக்கள் தொகை சுமார் 20 கோடி. இவர்களில் 88 சதவீதம் பேர் முஸ்லிம்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## அமோக வாரம் 05

# மேற்கே ஒரு குற்றம்

## எழுத்துலக வேந்தன் சுஜாதா

என்ன வினோதமான அனுபவம் இது. தன்னை வண்டிக்குள் தள்ளியவன் முகத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்றான். ஒரு செக்கண்டுதான் பார்த்திருப்பான். மீசை வைத்திருந்தானா என்ன? கட்டுப்பாடுள்ள கும்பல் என்று தெரிகிறது. நாங்கள் வெளிவரக் காத்திருக்கிறார்கள். வண்டி திறந்து அருகில் தனியிடத்தில் காத்திருந்திருக்கிறார்கள். கோழிக்குஞ்சை அமுக்குவது போல் அமுக்...எங்கே எடுத்துச் செல்கிறார்கள்?

இரண்டு மூன்று சட் சட்டென்ற திருப்பங்களுக்குப் பின் வண்டி நின்றது. வெளியே டிரைவர் பக்கத்து கதவு திறந்து மூடும் சப்தம் கேட்டது. அப்புறம் இடது பக்கத்துக் கதவு அப்படியே கேட்டது- மௌனம்.

அப்புறம் பின் பக்கத்து கதவு திறக்கப்படும் சப்தம்.

அப்புறம் சில காலடிகள் கேட்டது மௌனமாக இருந்தது.

"கணேஷ் வெளில வா!" என்ற குரல் கேட்க கணேஷ் கதவைத் தள்ளிப் பார்த்தான். திறந்து கொண்டது. வெளிச்ச விளிம்பில் மணி பார்த்தான். 9.10 "வசந்த் நான் இறங்கறேன் ஜாக்கிரதை. எந்த நிமிஷம் என்னை யாராவது தாக்கினாலும் நீ கொஞ்சம் தயங்கியே வா!"

கணேஷ் வெளியே வந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். ஒருவரும் இல்லை. தனியான இடம். மேலே ஒற்றை பல்பு தொங்க அது ஒரு அகலமான ஹாங்கர் போல இருந்தது! வண்டி உள்ளேயே வந்திருந்தது! எதிரே பெரிய தகரக்கதவு மூடியிருந்தது. மேலே பார்த்தான் அஸ்பெஸ்டாஸ் நூற்றுக்கு நூற்றைம்பது அடி இருக்கும். மூலையில் கள்ளிப் பெட்டிகள். ஒரு கயிறு. இடது பக்கம் ஒரு மரப்படி தெரிந்து மெஸ்ஸனைன் போலிருந்த ஒரு அறைக்குச் சென்றது. அந்த அறை முழுவதும் கண்ணாடி அமைக்கப்பட்டு உள்பக்கம் திரைகள் மறைந்திருந்தன.

"வசந்த் வெளியில வா!"

வசந்த் கணேஷுடன் சேர்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். பெரிய ஷெட்! "ஒருத்தரையும் காணமே!" என்றான்.

"ஹலோ ஒன் டு த்ரி;யூ ஹியர்?" என்றான் கணேஷ்.

"முன்னால வாங்க!" என்றது குரல். டெலிஃபோனில் கேட்ட அதே குரல். சுற்றியும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை.

"என்ன பார்க்கறீங்க..? நான் மேல இருக்கேன்."

மேலே பார்த்தான். அந்தக் கண்ணாடி அறைதான் தெரிந்தது. கனமான திரைகள் உள்ளிருப்பவரை மறைத்தன.

அவர்கள் நடந்தார்கள்.

"அங்கேயே நில்லுங்க பேசலாம். இண்டர்காம் வசதி இருக்குது..." கணேஷ் ஓரத்தில் சுவருடன் பொருத்தியிருந்த இண்டர்காம் சாதனத்தைப் பார்த்தான். ஷார்ப் என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. அதில் ஒரு பட்டன் ஒளிந்து கொண்டிருந்தது.

"நீ சொல்றது எனக்குக் கேக்கும். நான் சொல்றது உனக்குக் கேக்கும். என்னால உன்னைப் பார்க்க முடியும். இது போதும்! சொல்!"

"நீ தான் சொல்லணும்!" என்றான். கணேஷ் மேலே அந்தத் திரை அறையைப் பார்த்து.

"அந்த விளம்பரம் எதுக்குக் கொடுத்தே..?"

"உன்னோட தொடர்பு கொள்றதுக்கு."

"பொலிஸ்கிட்ட சொல்லலையா?"

"இல்லை."

"ஏன்?"

"நான் பொலிஸ் கட்சி இல்லையே! தனி ஆளு!"

"உன்கிட்ட அவ என்ன சொன்னா?"

"எல்லாத்தையும்."

வசந்த் திரும்பி அந்த வண்டியின் நம்பரைப் பார்த்தான்.

"வண்டி நம்பரை நோட் பண்ணிக்கிட்டு பிரயோசனமில்லை. அது 'பொய் நம்பர். அது யார்துன்னு விசாரிச்சா ஒரு பொலிஸ் இலாகாவுடைய வண்டி நம்பராக இருக்கும். என்ன?"

"அந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சு?" குரலில் இப்போது சிரிப்பு.

"பாதையில சரியா நடக்கலை. விபத்துக்கு உள்ளாயிட்டா! கடைசி சமயத்தில பயந்துக்கினு உங்கிட்ட உபதேசம் கேக்க வந்திருக்கா, செத்தா! நீ என்ன உபதேசம் கொடுத்தே?"

"சாயங்காலம் வரச் சொன்னேன். அவ்வளவுதான்."

"ஆமா.. அவ உன்கிட்ட என்ன சொன்னா? சொல்!"

"அதை உன்கிட்ட நான் ஏன் சொல்லணும்?"

"உனக்கு நிஜமாவே தெரியுமான்னு எனக்குத் தெரிய வேண்டாமா? என்ன ஆதாரம்?"

கணேஷ் யோசித்தான்; என்னத்தைச் சொல்வது? ஆதாரம்.. கொஞ்சம் தயங்கினாலும் எனக்கு ஒண்ணும் தெரியாது என்பதை அறிந்து கொண்டு விடுவார்கள்... அவள் என்ன சொன்னாள் என்னிடம்? ஒன்றுமே சொல்லவில்லையே. சும்மா ஒரு காகிதத்திலே வட்டங்களை எழுதிவிட்டு...

வட்டங்கள்! தீர்மானித்தான். "இதபார் என்னை உன்னால பார்க்க முடியுமில்லே! கண்ணாடி வழியாப் பார்க்கிற இல்லே?"

"ஆமாம்!"

"பாரு!"

நடுவே நின்று கொண்டு கை விரலால் காற்றில் அந்த வட்டங்களை வரைந்து காட்டினான். தீபாவின் வட்டங்கள்.

"புரியுதா? புரியுதா? எனக்கு எல்லாம் தெரியும். எல்லாம் சொல்லிட்டா!"

சற்று நேரம் மௌனமாக இருந்தது.

கணேஷ் வசந்தைப் பார்த்தான். அவன் புன்னகைத்தான். 'சிரிக்காதே' என்று சைகை செய்தான்.

அங்கே அந்த வட்டங்கள் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இண்டர்காமை அணைக்காமல் அவர்கள் பேசியது கொஞ்சம் கேட்டது.

ஒரு புதிய குரல், "அய்யா இவன் அபாயமானவன். விஷயம் தெரிஞ்சுடுத்து இவனுக்கு. தீர்த்துக் கட்..." 'பட்!'

இண்டர்காம் அதற்குள் அணைக்கப் பட்டுவிட்டது.

கணேஷ் சன்னமாக, "வசந்த் டேஞ்சர். கொஞ்சம் சுத்தும் முத்தும் பார்த்துக்கிட்டிரு! திடீர்னு பாஞ்சாலும் பாய்வாங்க."

மறுபடி குரல் கேட்டது!

"உனக்கு எவ்வளவு வேணும்?"

"என்ன?"

"நோட்டு...பணம்?"

"அதுக்கு முன்னால ஒண்ணு சொல்லணும்."

"என்ன?"

"எங்களை அந்தப் பொண்ணுமாதிரி ஏதாவது விபத்துக்கு உள்ளாக்கிடலாம்னு மட்டும் நினைக்காதே! எத்தனுக்கு எத்தன் நான். எங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா, நாங்க திரும்ப பத்திரமா போய்ச் சேரலைன்னா- ஒரு ஆள்கிட்ட ஒரு கடுதாசி எழுதி அதை நாளைக்கு பொலிஸ் கிட்ட ஒப்படைக்க ஏற்பாடு பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன்!"

"தேவையில்லை சொல்ல."

"இதபார், நான் எதுக்கு விளம்பரம் கொடுத்தேன் தெரியுமா?"

"எதுக்கு?"

கணேஷ் யோசித்தான். ஏதாவது சொல்ல வேண்டுமே! என்ன? என்ன? சற்று சரடு விட்டுப் பார்க்கலாம்... பலிக்கிறதா பார்க்கலாம்...

"அவ செய்ய இருந்ததை நான் செய்யறேன்." என்றான். லாங் ஷாட். இப்படி ஏதாவது இருக்கலாம் என்று ஒரு தடவை யோசித்தான். ஏதோ குற்றம் செய்ய அவள் முன்வந்து கடைசியில் பயம் வந்து தன்னை அணுகியிருக்கலாம் அவள். அவளும் இந்தக் கூட்டத்தின் காரியங்களில் முன்னே சம்பந்தப்பட்டிருக்கலாம். இல்லையென்றால் அவள் ஏன் நேராக பொலிசுக்குச் செல்லவில்லை? குரல் மறுபடி கேட்டது.

"செய்யிறியா? எவ்வளவுக்கு?"

"அதே தொகை!" மை காட், இட் ஒர்க்ஸ்! இனிமேல் சமாளித்துவிடலாம்.

"முழு விவரமும் தெரியுமா?"

"தெரியும், தெரியாது என்று எப்படிச் சொல்ல முடியும்?"

"இன்னும் பதினைஞ்சு நாள்தானே இருக்கு?"

"நான் பார்த்துக்கறேன். சமாளிச்சுருவேன்!" என்னத்தைச் சமாளிக்க வேண்டும்?

"டிக்கெட் எல்லாம் ரெடி பண்ணிடுவியா?"


"நிச்சயம். அதுக்கென்ன?"- டிக்கெட்டா?

"நல்லது. உன் மாதிரி புத்திசாலிகளை எனக்குப் பிடிக்கும்!"

"எனக்கும் உன் மாதிரி ஆட்களுடன் பிஸினஸ் பண்ணப் பிடிக்கும். அதுக்காகத்தான் விளம்பரம் கொடுத்தேன்."

"முன்பணம் வேணுமா?"

"நாளைக்குச் சொல்றேனே! டெலிஃபோன் பண்ணேன்!"



"சரி."

"அப்ப நான் வந்து உன்னை சந்திக்கலாமா? இனிமே என்ன மறைப்பு?"

"அதுக்கு இன்னும் சமயம் வரலை!"

"டிக்கெட் வாங்கினதும் எனக்கு தகவல் தெரிவி. பணம் கொடுத்துடலாம்!"

"டெலிஃபோன் நம்பர் சொல்லுங்க!"

"வேண்டாம். அதேமாதிரி விளம்பரம் கொடு போதும், எங்க ஆட்கள் ஒருத்தரையும் நீ பார்க்க முடியாது. வேலை முடிஞ்சு உன்மேல் எங்களுக்கு நம்பிக்கை வந்தபிற்பாடு சந்திக்கலாம். பேசாம போய் வேன் கதவைச் சாத்திக்கிட்டு உட்காரு. திருப்பிக் கொண்டு விட்டுடறோம்?"

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

# 'அன்ன பூரணி அம்மா'

## ஈ.கே. ராஜகோபால்

செட்டி நாட்டுக்குச் சொந்தமான அ.கு.அ.கு.சோ.கா. என்ற 'நித்திய கல்யாணி' கப்பலுக்கு ராமாசாமித் தண்டையல், தண்டையலாக இருந்தபோது, செய்த சாதனைகள் சொல்லில் அடங்காது!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தண்டையலாக இருந்த இவர்,

ஆ. சுப்பிரமணியம் தண்டையல்,
செ. தில்லையம்பலம் தண்டையல்,
முத்துக்குமாரு தண்டையல்,
வ. இரத்தினசாமித் தண்டையல்,

இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

சிலரை நான் விட்டிருக்கலாம்.

வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகளுக்கு முன்னோடிகளில் ஒருவராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

முருகுப்பிள்ளை சின்னையா தண்டையல்,

வடிவேல் தண்டையல்,

செல்வமாணிக்கம் தண்டையல்,

இப்படிச் சில சாதனைத் தண்டையல்கள் நெஞ்சத்தில் நிழலாடுகிறார்கள்!

செல்வமாணிக்கம் தண்டையல்-

கடலுக்கே தன்னை அர்ப்பணித்த தியாகச் செம்மல்!

மலபாரிலிருந்து செட்டிநாட்டுக்குச் சொந்தமான கப்பலைச் செல்வமாணிக்கம் தண்டையன் கொழும்புத்துறைமுகம் நோக்கிக் கொண்டு வந்துகொண்டிருந்தார்.

அந்தப் பயங்கரம்-

அப்போதுதான் நடந்தது!

முழுக்க முழுக்க வல்வெட்டித்துறைக் கடலோடிகள்தான் கப்பலில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்!

சூறாவளி-

கப்பல் மூழ்கி விட்டது! அவ்வளவுதான்!

கடலோடி வாழ்ந்தவர்கள், கடலோடு சங்கமமானார்கள்.

கண்கள் நனைகின்றன.

மாணிக்கவாசகம் தண்டையல்,

சிவகுருமூர்த்தித் தண்டையல்,

பொ.யோகமுத்துத் தண்டையல்,

ஆனால் அவர்கள் சாதனை செய்தவர்கள்.

• • •

கடைசியாக வாழ்ந்த சில தண்டையல்களைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததை என்றும் என்னால் மறக்க முடியாது.

சிவசுப்பிரமணியம் தண்டையல், காத்துலிங்கம் தண்டையல், பொன்னுசாமித் தண்டையல் போன்றவர்களின் சந்திப்புக்கள் இதயம் மறக்காத அனுபவங்கள்.

காலமெல்லாம் கடலோடு கலந்து விளையாடிய அந்தக் கப்பலோட்டிய தமிழன் சிவசுப்பிரமணியம் தண்டையலின் வாழ்வே சுவையானது.

அவர் காதுகளில் அணிந்திருந்த அழகிய சிவப்புக் கடுக்கன் கல்லுகள் என் நெஞ்சத்திரையில் இப்போதும் பளிச்சிடுகின்றன.

இராமசாமிப் பிள்ளையும், நடராசா வாத்தியாரும் இணைந்து கட்டிய அந்தக் கப்பலின் பெயர் 'திருநிலைநாயகி.'

1937ம் ஆண்டு கட்டப்பட்ட இக்கப்பலின் தண்டையலாக நியமிக்கப்பட்டார் சிவசுப்பிரமணியம் தண்டையல்!

கமாண்டிங் அப்பியரான்ஸ்! அதுதான் சிவசுப்பிரமணியத் தண்டையலின் பெருமை!

திருநிலைநாயகி கப்பலைக் கட்டுவித்தவர்களில் ஒருவரான நடராசாவாத்தியாரிடம் பல தகவல்களை அறிந்தேன்.

சிவசுப்பிரமணியம் தண்டையல் பதினைந்து ஆண்டுகாலம் திருநிலைநாயகியில் பணியாற்றினார்.

நேர்மை-அவர் உடன் பிறப்பு.

நீண்டகாலம் ஒரு கப்பலில் தண்டையலாக இருந்ததன் இரகசியமும் இதுவே.

1956ம் ஆண்டு-

மகாலட்சுமி என்ற கப்பலில் தண்டையலாகப் பொறுப்பேற்றார்.

அரேபியாவுக்குக் கப்பலோட்டியவர் சிவசுப்பிரமணியம் தண்டையல்!

மலபாருக்குக் கப்பலைக்கொண்டு சென்று, அங்கிருந்து அரேபியத் துறைமுகத்துக்கு இருதடவை கப்பலோட்டிச் சென்றுள்ளார்.

மலபாரிலிருந்து அரேபியாவுக்குப் பதின்மூன்று நாட்களில் சென்றவர்.

மீண்டும்அரேபியாவிலிருந்து வல்வெட்டித்துறை திரும்பிவர அறுபத்திரண்டு நாட்கள் எடுத்துவிட்டது!

பதினைந்து இலட்சம் ரூபாய்க்கு வல்வெட்டித்துறை தங்கவடிவேல் மீன்பிடி 'ரோலர்' ஒன்றை இங்கிலாந்திலிருந்து வாங்கி வல்வெட்டித்துறையில் ஓடவிட்டபோது-

அந்த வெளிநாட்டு ரோலருக்கு சிலகாலம் 'காப்டனாக'ப் பொறுப்பு வகித்து அதனை இயக்கியவர் இந்த சிவசுப்பிரமணியம் தண்டையல்!

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை செய்த் வீரர் நவரத்தினசாமி, நீச்சல் சாதனையை நிகழ்த்தியபோது,அவருக்கு வழிகாட்டியாகக் கப்பலில் 'பயிலட்டாக'ச் சென்றவர் இந்தச் சிவசுப்பிரமணியம் தண்டையல்!

★★


கொழும்புத்துறைமுகத்தில் பத்தாண்டுகளுக்கு முன்னர் கடமையாற்றிய குணசுந்தரம் என்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது!

## பயணம் - 11

'காப்டன்' தரத்தில் கப்பல் நுணுக்கங்களை முற்று முழுதாகக் கற்றுத் தேர்ந்தவர். அந்த சர்டிபிக்கற்றும் இவருக்குக் கிடைத்தன.

துறைமுகத்தில் இருந்து ஒய்வுபெற்ற பின்னர், 1967ம் ஆண்டு வல்வெட்டித்துறையிலுள்ள பிரபல வர்த்தகரான தங்கவடிவேலுவுடன் இவர் சேர்ந்துகொண்டார்.

குணசுந்தரத்தின் திறமையில் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார் தங்கவடிவேல்.



மீன்பிடித்தொழிலை பெரியளவில் செய்ய வேண்டுமென்ற நீண்டகால எண்ணத்தைச் செயல்படுத்த விரும்பிய தங்கவடிவேல் 'ரோலர்' ஒன்றை வாங்குவதற்காக இங்கிலாந்து சென்றார்- குணசுந்தரத்துடன்!

இங்கிலாந்தில் லிவர்ப்பூரில், கப்பல் கம்பனியொன்றிடமிருந்து பதினைந்து இலட்சம் ரூபாய்க்கு ரோலரை வாங்கினார்கள்!

தன்னந்தனியனாக, அரசின் உதவியுமின்றி தங்கவடிவேலு குணசுந்தரத்தின் மீதுள்ள திறமையின் நம்பிக்கையில் இந்த ரோலரை இவ்வளவு விலை கொடுத்து வாங்கினார்.

இலங்கையிலேயே தனிநபர் ஒருவர் இப்படியான ஒரு ரோலரை- இவ்வளவு விலைகொடுத்து வாங்கிய பெருமை தங்கவடிவேலுவையே சாரும்!

அந்தக்கப்பலின் காப்டன் குணசுந்தரம்.

இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ரோலர் ஆழ்கடலில் மீன் பிடித்தது. ஒரு வருடகாலம்- சோதனை நிறைந்த காலமாக இருந்தது அவர்களுக்கு.

தங்கவடிவேலு மனம் தளரவில்லை. உலகத்தின் பல இடங்களுக்கும் சென்று வந்தவர் தங்கவடிவேலு. எத்தனையோ இலட்சம் ரூபாவை முடக்கிவிட்டோமே என்ற கவலைகூட இல்லாமல் சோதனை ஒன்றை நடாத்திய திருப்தியுடன் ரோலரின் கதையையும் முடித்துக்கொண்டார்.

இதன் பின்னர் குணசுந்தரம் கிரேக்கக் கப்பல் ஒன்றில் காப்டனுக்கு அடுத்த ஸ்தானத்தில் சேர்ந்து கொண்டார்.

கனடாவுக்குச் சமீபத்திலுள்ள ஆழ்கடலில் அந்தப் பயங்கரம் அவருக்கு நேர்ந்தது.

எண்ணெய் ஏற்றிக்கொண்டு வந்த அந்தக் கப்பலின் முக்கிய பாகமான 'கிராஸ்' உடைந்து கப்பல் இரண்டாகப் பிளந்தது!

-அபாய அறிவிப்பு அனுப்பப்பட்டது.

ஆனாலும் கப்பலில் குணசுந்தரத்துடன் அனைவருமே கடலுக்குள் மூழ்கி இறந்துவிட்டதாகவே தகவல் வந்தது.

கடலோடு விளையாடிய குணசுந்தரத்தின் கதை கடலோடு முடிந்தது.

அவர் வாழ்வு முடிந்து மூன்றாண்டு கூட ஆகவில்லை.

அவர் பெற்ற புதல்வர்கள் இருவரும் வெளிநாட்டுக் கப்பலில் பணியாற்றச் சென்றுவிட்டார்கள்.

புலிக்குப் பிறந்தவர்கள் பூனையாவார்களா?

(அடுத்த வாரமும்...)


படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு

## நிலவு 04

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார் எழுதியுள்ள விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

'ஒரு முத்தம் கொடேன்' என்று கிருஷ்ணகாந்த் சொன்னதைக் கேட்டு தன் உடம்பின் நரம்பு மண்டலத்தில் சில விநாடிகள் அதிர்ந்து போனாள் நிலா. இதயம் ஒரு மத்தளமாய் உருவெடுத்து தனி ஆவர்த்தனக் கச்சேரி ஒன்றை ஆரம்பிக்க நெற்றியில் முத்து முத்தாய் வியர்வை.

கிருஷ்ணகாந்த் கேட்டான்,

"என்ன பேச்சையே காணோம்...?"

"இது அதிகம்..."

"எது?..?"

"இப்படியெல்லாம் பேசறது.."

"ஸாரி...வெரி ஸாரி...! நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்... ரிஸீவரை வெச்சுட்டு ஒரு டஜன் தோப்புக்கரணம் போடட்டுமா...?"

"அதெல்லாம் வேண்டாம்..."

"என்மேல கோபம் இல்லையே...?"

"இல்லை..."

"நான் கொஞ்சம் வெளிப்படையான ஆசாமி; எதையுமே பட்டவர்த்தனமா பேசுவேன்..."

"நானும் அதே..."

"சரி... இப்போ ஒரு முக்கியமான கேள்வி."

"என்ன...?"

"நிஜமாவே என்னோட ஃபோட்டோவை நீ பார்க்கலையா?"

"பார்க்கலை..."

"பார்த்துடறது பெட்டர்..."

"ஏன்..?"

"உன்னோட குரலைக் கேட்கும் போதே நீ அழகாத்தான் இருப்பேன்னு சர்வ நிச்சயமாத் தெரியுது. ஆனா நான் அப்படியில்லை. ரொம்பவும் சுமார்."

"ரொம்பவும் சுமார்ன்னா...?"

"சாயம்போன குடை மாதிரி என்னோட நிறம்."

"சரி..."

"புஷ்டியில்லாத உடம்பு...! நான் பள்ளிக்கூடத்தில படிக்கிற காலத்தில இருந்தே எனக்கு கொத்தவரங்காய்ன்னு பேர்..."

"சரி...அப்புறம்...?"

"முன் மண்டையில் வேகமா முடி கொட்டுது. இன்னும் ஆறே மாசத்துக் குள்ளே தலை மொசைக் தரையாயிடும்."

நிலா சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே..? நான் பொய் சொல்றேன்னு நினைக்கிறியா..? இப்போ நான் பேசிட்டிருக்கிற ஒவ்வொரு வார்த்தையும் நிஜம்... நிஜமோ நிஜம்...!"

"எனக்கு இப்படி நிஜத்தைப் பேசினாத்தான் பிடிக்கும். நானும் சில உண்மைகளை உங்ககிட்ட சொல்லப் போறேன். என்னோட குரலைக் கேட்டுட்டு நான் அழகா இருக்கிறதா நீங்க நினைச்சுக்கிட்டா அது ஒரு பெரிய வொர்ஸ்ட் தப்பு. காலேஜ் டேய்ஸ்ல என்னோட ஃபிரண்ட்ஸ் எனக்கு வெச்ச பேர் என்ன தெரியுமா?"

"என்ன..?"

"ரெட்டை மண்டை..."

"எதுக்காக அந்தப் பேர்..?"

"எனக்கு தலை கொஞ்சம் ஓவர் சைஸ். ரெண்டு காதுல இடது காது கொஞ்சம் சின்னது..."

"சரி..."

"எதுக்கும் நீங்களும் என்னோட ஃபோட்டோவைப் பார்த்துடறது நல்லது... இல்லேன்னா பின்னாடி இஞ்சியைத் தின்ன எதுவோ மாதிரி ஆயிடுவீங்க..."

"பரவாயில்லை! இஞ்சி எனக்குப் பிடிக்கும். அது ஹெல்த்துக்கு ரொம்பவும் நல்லது."

"அப்படீன்னா நீங்க என்னோட ஃபோட்டோவைப் பாரக்கப் போறதில்லை..?"

"இல்லை..இல்லை... நீ கஷ்டப்பட்டா என்னோட ஃபோட்டோவைப் பார்த்துக் கலாம்..."

"ஸாரி ஜென்டில்மேன்...! கல்யாண நாளன்னிக்கு மணமேடையில்தான் உங்களைப் பார்க்கப்போறேன். இப்போ ஃபோனை கட் பண்ணிக்கலாமா...? ஐ.எஸ்.டி.யில் பேசி பணத்தை இப்படி வேஸ்ட் பண்ணக் கூடாது..."

"சரி..! உத்தரவு. நாளைக்கு இதே நேரத்துக்கு ஃபோன் பண்ணட்டுமா..?"

"தேவையா...?"

"தேவைதான். நான் ஸ்டேட்ஸிலிருந்து மெட்ராஸ் வர்ற வரைக்கும் தினசரி இராத்திரி அந்த நேரத்துக்கு ஃபோன் பண்ணு வேன். நாளைக்கு இராத்திரி உனக்கொரு இன்ட்ரஸ்டிங்கான நியூஸ் சொல்றேன்."

"இப்பவே சொல்லக் கூடாதா?"

"நோ...நோ...நாளைக்கு இராத்திரி வரைக்கும் நீ என்னைப் பத்தியே நினைச் சிட்டிருக்கணும்ன்னா அப்படியொரு சஸ்பென்ஸ் வெச்சாத்தான் முடியும்... என்னோட அத்தைக்கும் மாமாவுக்கும் வணக்கம் சொல்லிடு. உனக்கு மிட்நைட் வித் ஸ்வீட் ட்ரீம்ஸ்..."

"எனக்குக் கனவே வராது."

"இன்னிக்கு வரும் பாரு.. சினிமா காதலர்கள் மாதிரி மரத்தைச் சுற்றி ஓடுவோம். புல்தரையில் உருளுவோம். நீச்சல் குளத்தில்..."

"போதும்...போதும்..."

நிலா ரிஸீவரை வைத்து விட்டு சந்தோஷம் வழிகிற இதயத்தோடு திரும்பினாள். அப்பா சிவராஜனும் அம்மா பாக்யமும் அறைக் கதவருகே நின்றிருந் தார்கள்.

சிவராஜன் கேட்டார்.

"மாப்பிள்ளை என்னம்மா சொல்றார்?"

"தினசரி ராத்திரி இதே நேரத்துக்கு என்கூட அவர் ஃபோன்ல பேசணுமாம்..."

"அந்த ஒரு வரியைச் சொல்றதுக்காகவா மாப்பிள்ளை இவ்வளவு நேரம் எடுத்துக் கிட்டார்...?"

"போங்கப்பா..." நிலா ஒரு வெட்கப் பார்வையோடு தன்னுடைய அறைக்குப் போய்விட பாக்யம் கணவனை ஏறிட்டாள்.

"என்னங்க...?"

"ம்..."

"இது கொஞ்சம் கூட சரியில்லீங்க..."

"எது...?"

"கல்யாணத்துக்கு முந்தியே மாப்பிள்ளை இப்படி டெலிஃபோன்ல மணிக்கணக்கா பேசறது..."

"பேசிட்டு போகட்டுமே.. அதனால என்ன...?"

"வீட்ல பெரியவங்க இருக்காங்கங்கிற மட்டு மரியாதை வேண்டாம்...?"

"ஏய் பாக்யம்... இது இருபத்தேழாவது வருஷம் இல்லை... இதையெல்லாம் நாம காணாத மாதிரி போயிடணும்..."

"எனக்கென்னவோ இதெல்லாம் சரியாப் படலை. பின்னாடி ஏதாவது பிரச்சனை வந்துட்டா கையைப் பிசைஞ்சுட்டு நிக்கப் போறது நாமதான். மாப்பிள்ளை வீட்டுக் காரங்க இல்லை..."

"ஒரு பிரச்சனையும் வராது. மனசைப் போட்டு அலட்டிக்காமப் போய்ப்படு..."

"நான் சொல்றதை சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்..." புலம்பிக் கொண்டே போகும் மனைவியை ஒரு அலட்சியப் பார்வை பார்த்த சிவராஜன் மறுபடியும் டி.விக்கு வந்து பி.பி.சிக்கு உயிர் கொடுத்தார்.

ஜப்பானில் இலஞ்சம் வாங்கிய ஒரு மந்திரியின் சப்பாத்தி மாவு முகத்தை க்ளோஸப்பில் காட்டியது ஒனிடோ திரை.



விடிகாலை ஐந்து மணிக்கு அலாரம் காதுகளை இம்சைப்படுத்தாத டெஸி பலில் அலறி போர்வைக்குள் இருந்த நிலாவை எழுப்ப அவள் அழகாய் சோம்பல் முறித்துக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள். தலையில் குட்டு வாங்கிக்கொண்ட டைம்பீஸ் வாயைச் சாத்திக் கொள்ள நிலா கட்டிலில் இறங்கி ஜன்னலுக்கு வந்தாள்.

கிழக்குத் திசை அந்த வைகறை இருட்டில் லேசாய் திறக்கப்பட்ட குங்குமச் சிமிழ் மாதிரித் தெரிந்தது. வீசிய கடல் காற்றில் ஓசோன் உறைத்தது. தென்னை மரக் கிளைகள் ரகசியம் பேசியன.

அந்தக் காலை நேர சென்னையின் புகை கலக்காத காற்றை நுரையீரல்கள் இனிக்க சுவாசித்துவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

ஸீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் அடுத்த ஹாலில் மெதுவாய் நடைபோட்டு வீட்டின் பின் பக்கம்போக முயன்றவளை டெலிஃபோன் கூப்பிட்டு நிறுத்தியது.

'இந்நேரத்துக்கு யார்...?'

யோசித்தபடியே போய் எடுத்தாள்.

"ஹலோ..."

"குட்மார்னிங் நிலா..." ஆண்குரல்.

"யாரு..?"

"பார்த்தாயா...? மறந்துட்டியே...?"

நிலாவுக்கு உடனே குரல் சட்டென்று பிடிபட்டது.

கிருஷ்ணகாந்த்.

"என்னங்க...இது...ராத்திரிதானே ஃபோன் பண்ணீங்க? மறுபடியும் எதுக்காக ஃபோன்...?"

"இப்போ...மெட்ராஸில் விடியற் காலை அஞ்சேகால் மணிதானே...?"

"ஆமா..."

"இங்கே இப்போ சாயந்தர நேரம். நீ தினமும் அஞ்சு மணிக்கெல்லாம் எழுந்து வீட்டுக்காரியங்களைப் பார்க்க ஆரம்பிச்சுடுவேன்னு என்னோட அம்மா சொன்னாங்க. அதான் ஃபோன் பண்ணிப் பார்த்தேன்."

"இது தேவையா...? ஒரு ஓவர்சீஸ் கால் பேச பணம் எவ்வளவு செலவாகும் தெரியுமா..?"

"லட்ச ரூபாய்தான் செலவாகட்டுமே...! இப்ப என்ன? மனசுக்கு நினைக்கிற சந்தோஷம்தானே முக்கியம்...!"

"நேத்து இராத்திரி பேசினது போதாதா...?"

"என்னவோ தெரியலை நிலா. உங்கிட்ட பேசிட்டே இருக்கணும் போலிருக்கு..."

"இது என்ன புது ஐஸ்..?"

"இது ஐஸ் இல்ல நிலா. ஆத்மார்த்தமா நான் சொல்ற வார்த்தை. நேத்து இராத்திரிதான் முதல் முதலா உன்னோட குரலைக் கேட்டேன். அந்தக் குரல் இன்னமும் சிதார் கம்பிகளில் ஒட்டிக்கிட்டு இருக்கிற நாதம் மாதிரி என்னோட நரம்புகளில் ஒட்டிக்கிட்டு இருக்கு..."

"....."

"நிலா..."

"ம்..."

"என்ன பேச்சையே காணோம்..?"

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

"எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலை. நீங்க ரொம்பவும் எமோஷனலாயிட்டீங்க.."

"நிலா..."

"ம்..."

"நீ எனக்கு வேணும்..."

"அதுதான் கல்யாணம் நிச்சயமாயிருக்கே...! கல்யாணத்துக்கு இன்னும் சரியா...?"

"இல்ல நிலா...! எனக்குப் பயம்மாயிருக்கு!"

"என்ன பயம்...?"

"நீ எனக்குக் கிடைக்க மாட்டேங்கிற பயம்."

"என்ன பேத்தல் இது..?"

"நிலா...! உனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?"

"நிறைய..."

"அப்படீன்னா கடவுளை வேண்டிக்க...! நான் இப்ப சொல்லப் போற விஷயத்தை நீ யார் கிட்டேயும் சொல்லக் கூடாது..."

நிலா ரிஸீவரை குழப்பமாய் பார்த்தாள்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 06

அந்த நேரத்தில் அவன் அவர்களைப் பற்றி அதிகம் ஆராய விரும்பவில்லை.

காரணம் அவனும் உடன் பட்டிடேதான் அந்தக் காரியங்களில் இறங்கினான்.

பணக்கார மைனர்களைப் போன்று, பகலிரவு பாராமல் அவர்கள் ஆடினார்கள்.

'கொந்தளிக்கும் கடல்' 'குமுறும் எரிமலை' என்றெல்லாம் படங்களிலே வசனங்கள் வரும்.

அவை, வேறெவையுமல்ல!

பல பெண்களுடைய இருதயங்களே!

'தமிழ்ப் பண்பாடு! தமிழ்ப் பண்பாடு' என்ற கூக்குரல்கள் மேடையிலே கேட்கும்.

தன்பாடு தீரும்வரைக்கும்தான் அந்தப் பண்பாடெல்லாம்!

இந்த நேரத்தில் அவனுக்குச் சில செய்திகள் தரப்பட்டன.

"நாம் மட்டும் தவறு செய்யவில்லை! முக்கிய தலைவரே அதைத்தான் செய்கிறார்"- என்று அந்தச் செய்திகள் கூறின!

கலாரசிகரும், இன்றைய எம்.எல்.ஏ. ஒருவரும், அந்த நிகழ்ச்சியினை அவனுக்கு விரிவாகவே கூறினார்கள்.

அந்த எம்.எல்.ஏ. முக்கிய தலைவரின் பத்திரிகையிலே வேலை பார்த்தவர்!

ஆதலின், அவர் சொன்னவற்றை அவன் நம்பினான்.

அது இது:

ஓர் இரவு, முக்கிய தலைவர் தூக்கம் பிடிக்காமல் முன்னும் பின்னும் நடக்கிறார்.

வெளியிலே இருவர் போயிருக்கிறார்கள்.

அவர்களை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மணி பத்தடிக்கிறது.

பதினொன்று!

கோயிலில் அர்த்த ஜாம மணி அடிக்கிறது.

**கவியரசு கண்ணதாசன் எழுதிய-அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டி'கள் இவை....**

மணி பனிரெண்டு!

அதற்குள் தலைவர் ஏழெட்டுத் தடவை வெற்றிலை போட்டுத் துப்பிவிட்டார்.

அதோ அவர்கள் வரும் சத்தம் கேட்கிறது.

கதவு திறக்கப்படுகிறது.

மூன்று ஆடவர்கள் உள்ளே நுழைகிறார்கள்.

"ஆடவர்கள்தானா? அழகு மயில் வரவில்லையா?"

ஓர் ஆடவரின் தலைக்கட்டு அவிழ்க்கப் படுகிறது.

ஆண் உடைகள் களையப் பெறுகின்றன.

என்ன ஆச்சரியம்!

அந்த உடைக்குள் ஓர் அழகிய மயிலல்லவா ஒளிந்து கொண்டிருக்கிறது!

அழைத்து வந்தோர் குறிப்பறிந்து வெளியேறுகிறார்கள்.

பகுத்தறிவுத் தலைவரின் அறை பண்டாரச் சன்னிதியின் மடமாகிறது.

பொழுது விடியுமுன்னே பூவை திரும்புகிறாள்.

ஓர் இரவு, இன்ப இரவாகிறது.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி

அறிந்த கட்சிப் பிரமுகர்கள் இதற்குக் கொடுத்த பெயரென்ன தெரியுமா?

'சுந்தரகோஷ்' என்பதாகும்.

'வேலைக்காரி' படத்தில் ஆண்வேடம் தாங்கிய பெண்ணொருத்தி 'சுந்தரகோஷ்' என்று அழைக்கப்படுவதையே அவர்கள் அப்படிக் குறிப்பிட்டார்கள்.

இந்தச் செய்தி உண்மையா, பொய்யா என்பதை அறிந்து கொள்ள அவன் துடித்தான்.

அந்தத் தலைவரிடம் அவன் வைத்திருந்த மரியாதை அவ்வளவு!

கடைசியில், மேலும் சில சாட்சிகள் அதனை உறுதிப்படுத்தினார்கள்.

அவர்களும் அந்தத் தலைவருடைய உப்பையே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் செய்தியைவிட, அவனுக்குக் கவலையைத் தந்தது ஒன்றே ஒன்று.

அதுதான் நன்றி மறந்த ஊழியர்களைப் பற்றியது.

அவரிடம் சாப்பிட்டுக்கொண்டு அவரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்த அவர்கள், அவனுக்கோர் எச்சரிக்கையாக அமைந்தார்கள்.

அடுத்தடுத்து அவன் சில பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டான்.

உள்ளத்தில் உறுதிப்பாடு இல்லாமல், தெரிந்தே ஜனங்களை ஏமாற்றுவதுபோல் அவனுக்கே தோன்றிற்று!

அதுதான் அரசியல் என்று அவனுக்குப் போதிக்கப்பட்டது.

அந்த அரசியலிலேயே அவன் ஊர்ந்து சென்றாலும் சில விஷயங்களில் அவன் எச்சரிக்கையாக இருந்தான்.

கழகத்திற்கென்றே ஒருதனித் தமிழ் நடை உண்டு.

அண்ணாத்துரையின் நடையைப் பின்பற்றி எல்லோருமே ஒரே மாதிரி 'துள்ளு தமிழ்' எழுதுவார்கள்.



எழுதியவரின் பெயரை எடுத்து விட்டுப் பார்த்தால் யார் எழுதியதென்றே தெரியாது.

கதை ஒன்றில் தொடங்கி, பிறகு அதைக் கட்டுரையாக விரிக்கும் அலுத்துப் போன முறையை அனைவருமே கையாண்டார்கள்.

அவற்றில் எதையும் அவன் படிப்பதில்லை.

காரணம், அந்த நோய் தன்னையும் பற்றிக் கொள்ளக்கூடாது என்பதுதான்.

தன்னுடைய எழுத்துக்களை அவன் படிப்பதில்லை என்பதிலே அவனுடைய நண்பர் கருணாநிதிக்கு அசாத்தியக் கோபம் வரும்.

ஒருநாள் அவர், புதிதாக வெளியாகியிருந்த தனது இரண்டு புத்தகங்களை எடுத்து அவன் முன்னால் போட்டு "இதை யெல்லாம் படியய்யா," என்றார்.

ஒரு புத்தகத்தை விரித்தான்.

நல்ல பண்பாடு உள்ள கதை அது!

'வாழ முடியாதவர்கள்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்தது.

கதையென்ன தெரியுமா?

படிக்காதவர்களும் படித்துப் பயனடைய வேண்டிய புண்ணிய கதையல்லவா?

விவரமாகவே சொல்கிறேன்.

மனைவியை இழந்த ஒரு பொலிஸ்காரன்.

வறுமை தவழ்ந்து விளையாடும் சின்னஞ்சிறு வீடு அவன் குடியிருப்பு.

மாண்டுபோன அவன் மனைவி சும்மா போகக்கூடாதென்று ஒரு மகளை விட்டுப் போயிருந்தாள்.

கதையின் ஆரம்பத்திலேயே அந்த மகள், தளதளவென்று வளர்ந்து பளபளவென்று மெருகேறிக் கவர்ச்சிப் பாவையாக விளங்குகிறாள்.

சின்னஞ் சிறிய வீட்டில் தன்னந்தனியாக இருக்குமவள் திருமணத்திற்காகக் காத்துக் கிடக்கிறாள்.

இரவுகள் வந்துபோகின்றன; திருமணம் வரவில்லை.

ஒவ்வோர் இரவிலும், தந்தையும் மகளும் மட்டுமே அந்த வீட்டில் துயில்கின்றனர்.

அவளோ கல்யாணமாகாதவள்; அப்பனோ மனைவியை இழந்தவன்.

தந்தை மகளையே மனைவியாக்கிக் கொள்கிறான்.

கதாசிரியர் கதையை முடிக்கிறார்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வள்ளல்



கௌசல்யா

அவர் அந்த ஊரில் பெரும் தனக்காரர்; தர்மசிந்தனையாளர் என்று பேசிக்கொண்டனர்.

யாருக்கு என்ன விதமான உதவி தேவைப்படினும் அவரிடம் தயங்காமல் போய் நிற்கலாம்.

எத்தனை எத்தனையோ ஏழைகள்... வேலை இல்லாமல் திண்டாடுபவர்கள்... பசி பட்டினியுடன் கிடப்பவர்கள்... அடுப்பில் உலையை ஏற்றி வைத்துக்கொண்டு கணவன் அந்த வள்ளலிடம் பணம் வாங்கிக்கொண்டு வருவார் என்று நம்பும் நம்பிக்கை இதுவரை பொய்த்ததில்லை.

ஐயா, என்ன தொழில் செய்கிறார்... எப்படி பணம் கொட்டுகிறது... இதுபற்றியெல்லாம் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

கோயில் புனருத்தாரணமா, பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்க நிதியா, சீருடை வாங்கிக்கொடுக்க பணமா, ஏழை எளியவர்கள் வீட்டுக் கல்யாணங்களா, காது குத்தலா,மேல் படிப்புப் படிக்க உதவியா..! இன்னும் எத்தனை எத்தனை உதவிகள்...!

ஊர் முழுக்க அன்னாரின் புகழ் பாடக் கேட்டு, ஒருமுறை தயங்கித் தயங்கியே, நான் அவரைப் பார்க்கப் போவதென முடிவு செய்தேன். என் குடும்பச் சூழல் அப்படி.

என் குறைகளைக் கேட்டார்.

உடனே தன் உதவியாளரைக் கூப்பிட்டு எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யச் சொன்னார். புல்லரித்துப் போயிற்று எனக்கு.

அவர் நீடூழி வாழவேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொண்டேன்.

ஊர் திரும்பிக் கொண்டிருக்கையில் வயதான பெண்ணொருத்தி எதிர்ப்பட்டாள்.

பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள். கண்களில் இரத்தக் கண்ணீர் வழிந்தது.

அந்த மூதாட்டி சாப்பிட்டு ஒரு வாரமானது போன்ற தோற்றம்.

ஒட்டி உலர்ந்த உடம்பு... கூன் விழுந்த முதுகு.. அவரிடம் வள்ளல் பற்றி எடுத்துச் சொன்னேன்.

உதவி என்று போனால் முகம் சுளிக்காமல் உதவும் மனப்பாங்குடையவர் என்றும், முடிந்தால் அவரிடம் உதவி பெற்றுக் கொள்ளலாம் என்றும் அந்த மூதாட்டியிடம் சொன்னேன்.

அவர் சிரித்தார். சிரித்துக்கொண்டே இருந்தார்.

"என்னம்மா சிரிக்கிறீங்க?"

"போப்பா. நீ இவ்வளவு தூரம் 'வள்ளல் வள்ளல்'னு பேசினது யாரைப் பத்தித் தெரியுமா? என் மகனைப் பற்றி... ஆமாம்பா, அந்த வள்ளல்தான் என் பிள்ளை!" என்றார் பெருமூச்சுடன். ●

# அப்பாவின் சட்டை



ஜெயசூரியன்

இன்று அப்பாவின் நான்காம் ஆண்டு நினைவு நாள்.

அப்பாவின் நினைவுகளை சேமித்து வைத்திருக்கும் அடையாளமாக, அவரது மூன்று சட்டைகள் இன்னும் சலவையின் மடிப்பு கலையாது பெட்டிக்குள் இருக்கின்றன...

அவரது நினைவு நாளன்றுதான் அவை வெளியில் வரும். அப்பாவின் படத்திற்கு முன்பாக அதனை வைத்துப் படையல் போட்டு, சூடம் சாம்பிராணி காட்டிய பின், அம்மா அந்த சட்டைகளை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு பின்பு பெட்டியில் வைக்கச் சொல்வாள். அநேகமாய் சட்டையில் அம்மாவின் கண்ணீர்த் துளிகள் ஒன்றிரண்டாவது உதிர்ந்துவிடும். அதன் ஈரம் காய்வதற்குள் சட்டைகள் பெட்டிக்குள் சென்றுவிடும்.

நான் வேலைக்குப் போய் வாங்கிய முதல் சம்பளத்தில் அப்பாவிற்காக பிரியப்பட்டு எடுத்த சட்டைகள் அவை. எப்போதுமே அப்பாவிற்கு பருத்தி உடைதான் பிடித்தமானது. நான்தான் பொலியஸ்டர் கலந்த துணியாக எடுத்து அப்பாவைப் போடச் செய்தேன்.

ஒன்று வெள்ளை... மற்ற இரண்டும் மரக்கலர்கள். மூன்று சட்டைகளையும் முழுதாய் மாட்டி கழற்றி தோய்ப்பதற்குள் அப்பாவிற்கு அந்த அறுபது வயதில் திடீரென்று மரணம் நேர்ந்தது.

மாரடைப்பில் உயிர் பிரிந்தது.

கடைசியாய் அவருக்குச் சேர்ந்த மூன்று சட்டைகளும் அப்பா விட்டுச் சென்ற நினைவுகளின் மிச்சமாயிற்று.

வருடம்தோறும் சட்டைகளை வெளியில் எடுக்கும் பொழுதெல்லாம், எனக்குள் ஓர் ஆர்வம் பிறக்கும்- மூன்றில் இரண்டினை நாம் எடுத்துக் கொள்ளலாமென்று.

இப்பொழுது என் உடல்வாகிற்கு நிச்சயம் இந்தச் சட்டைகள் பொருந்தும். முன்னைவிட என் தேகத்தில் கொஞ்சம் சதை பூசி விட்டது.

அப்பாவிற்காக ஒரு சட்டையே போதுமானது. ஏனோ இதனை அம்மாவிடம் சொல்லத்தான் தயக்கம்.

சட்டையை கேட்டுவிட்டால் அம்மா ஓவென்று அழுது அரற்றி விடுவாளோ என்றொரு பயம் எனக்கு.

நான்காண்டுகள் ஆகியும், அப்பாவை இழந்துவிட்ட துக்கத்திலிருந்து அம்மா, இன்னும் முழுமையாக மீண்டு விடவில்லை.

நான் மாதந்தோறும் சம்பளக் கவரை நீட்டும் பொழுதெல்லாம், முந்தானையால் கண்களை துடைத்துக் கொண்டுதான் வாங்குவாள்.

அதன் அர்த்தம் 'இதனை வாங்க அப்பா இல்லையே!' என்கின்ற ஆதங்கம் தான். இப்படி ஒவ்வொன்றிலும் அப்பாவை இணைத்துப் பார்க்கும் ஆற்றாமை அவளுக்குள் நிலைத்துவிட்டது.

எப்பொழுதும் சோகம் படிந்த கண்களில் ஒருவித ஏக்கம் கலந்திருக்கும். தன் துணையை இழந்துவிட்ட பறவையைப் போன்று சோர்ந்தே இருப்பாள்.

வார்த்தைகளில்கூட மென்மையும் துக்கமும் கலந்தே இருக்கும். இப்படிப்பட்ட வளிடத்தில் எப்படிக் கேட்பது? எனக்குள் ஏனோ தைரியமில்லை.

ஆனால், இந்த முறை கேட்டுவிடும் முடிவோடுதான் இருக்கிறேன்.

வெள்ளைநிறச் சட்டையை தவிர்த்து மீதம் இரண்டு சட்டைகளையும் வாங்கிவிட வேண்டும்.

உறுதியாய் தீர்மானித்துக் கொண்டேன்.

அம்மா அதிகாலையில் எழுந்தே குளித்து முடித்துவிடுவாள்.

அப்பாவின் படத்திற்கு முன் விளக்கை ஏற்றி பத்திகளை கொளுத்தி வைத்தாள்.

காலையில் எதுவும் சாப்பிடாமல் விரதம் இருப்பாள்..

முதல் நாள் இரவே பெரிய பூ மாலை வாங்கி வந்து விடுவாள்.

அதனை நான்தான் குளித்து முடித்து வந்து அப்பாவின் படத்தில் சாத்த வேண்டும்.

மாலையைச் சாத்துவதை அம்மா கண் கலங்கப் பார்ப்பது எனக்குப் புரிகிறது.

–●●–

மதியப் பொழுது...

படையல் போடப்பட்டுவிட்டது.

சாம்பிராணி புகையும்..

சூடமும்...

ஆவி பறக்கும் சோறும்...சாப்பாட்டு வகையும்...

அம்மா கண்களை மூடி கைகூப்பி நிற்கிறாள். மூடிய இமைகளின் ஓரத்தில் கண்ணீர் தெரிகிறது.

சட்டைகள் மீதான கவனத்தில் இருக்கும் எனக்குள் ஏனோ பயம் கவ்வுகிறது.

'கேட்பதா வேண்டாமா?' என்ற தர்க்கத்தை நானே நடத்திக் கொள்கிறேன்.

அம்மா இன்னும் கண்களைத் திறக்கவில்லை. இன்னும் மூடிய நிலையில், கூப்பிய கைகளையும் எடுக்காமல் நிற்கிறாள்.

இப்பொழுது கண்ணீர்த் துளிகள் வழிந்து முகத்தில் கோடு கிழிக்கிறது.

ஒரு மௌனம் வெடித்து அழுகை விசும்பலாய் வெளிப்படுகிறது.

நான் திடுக்கிட்டுப் பார்க்கிறேன். பயம் முன்னைவிட வலுக்கிறது.

அவளைத் தேற்ற முடியாது. அவளாகவே அழுது ஓய்ந்துவிடுவாள்.

அழுதவாறே அப்பாவின் சட்டைகளைப் பார்க்கிறாள். அவற்றின் மீதான பார்வை அழுத்தமானதாய் எனக்குப்படுகிறது. 'ஏன் சட்டையைப் பார்க்கிறாள்?' ஒன்றும் விளங்கவில்லை.

இப்பொழுது என்னை நோக்கி அழுகையினூடே சொல்கிறாள்...

"எனக்கு கொள்ளி வைக்கிறப்ப இந்தச் சட்டைகளையும் சேர்த்து எரிச்சிடு!"

இதனைச் சொல்லிவிட்டு அம்மா குலுங்கி குலுங்கி அழுகிறாள்.

நானும் அழுதுவிட்டேன்.

வழக்கமாய் மூன்று சட்டைகளையும் பத்திரமாய் பெட்டிக்குள் நான்தான் கொண்டுபோய் வைத்துப் பூட்டினேன்.

அவை அம்மாவிற்கு இன்னும் வேண்டும்.!

# அன்புள்ள முதல் காதலுக்கு



சுந்தரபுத்திரன்

முதன் முதலாய் பார்த்து, இரசித்து, ருசித்த எதையும் மறக்க முடிவதில்லை.

மழை பெய்து ஓய்ந்த ஓர் ஐப்பசி மாத காலையில் தண்ணீர் சுமந்து வந்த அவளை...

ஆடி அசைந்து வந்த அந்தத் தேவதையை...

அறிமுகப்படுத்தி வைத்து இரவெல்லாம் கனவாக... கனவெல்லாம் இரவாக அல்லல் பட வைத்த உன்னை எப்படி மறக்க முடியும்?

என் தம்பி 'தத்தக்க பித்தக்க' என நடக்க ஆரம்பித்ததை.. அத்தை வீட்டிலிருந்து எடுத்து வந்து, வீட்டின் கொல்லையில் நட்டு... தினம் தினம் தண்ணீர் ஊற்றி எப்போது பூ பூக்கும் என ஆவலோடு எதிர்பார்த்த ஓர் அதிகாலையில் அது பூத்துத் தந்த முதல் பூ.

சைக்கிள் ஓட்ட கற்றுக் கொள்ளும் ஆவலில் முட்டியில் அடிபட்டு முதன் முதலாய் ஏற்பட்ட காயத்தின் வலி..

'சொக்கப் பனை' கொளுத்த ஊர்ச் சிறுவர்களோடு விளையாடியே கழித்த முழு இரவு...

சுடுதேங்காய் சுட்டு அதை உடைத்துப் பகிர்ந்து கொண்டு ருசித்த இனிப்பின் சுவை.

பக்கத்து ஊரில் 'இராமநாடகம்' கூத்து பார்க்கப்போய் ஒரு காட்சியும் பார்க்காமல் தூங்கிப்போன அனுபவம்...

எந்த முதலாவதைத்தான் மறக்க முடிகிறது!

எல்லாவற்றிற்கும் மேலாய் உன்னை...

ஒரு பெண்ணைப் பெண்ணாகவும், ஓர் ஆணை ஆணாகவும் உணர வைத்த முதல் உணர்வு.

தாய்க்குப் பிறகு சாகும் வரை யாராலும் உதறமுடியாதவாறு எல்லோரின் குருதியோடும் கலந்துபோன ஓர் உணர்வு.

அவளை ஊரே கவனித்தது. ஆனால் அவள் என்னை மட்டுமே கவனித்தாள்.

ஒவ்வொரு முறை தண்ணீர் எடுத்துச் செல்லும் போதெல்லாம் குடத்தில் என் மனதை நிரப்பிச் செல்வதாகவே நினைத்துக் கொள்வேன்.

அடிக்கடி பார்வைக் கணைகள் வீசுவாள். எங்கிருந்தாலும் அவளின் விழிகள் என் திசை நோக்கியே பயணம் செய்யும்.

என் மனசு முழுக்க அவளே நிறைந்திருந்தாள். கனவுகள் இரவைத் தத்தெடுத்துக் கொண்டன.

முன்னூறு தடவை வந்து வந்து போன அந்த சுந்தரியின் பார்வைத் தடம்.

என் அசைவுகளெங்கிலும் அந்தத் தேவதையின் முகம் வந்து எட்டி எட்டிப் பார்த்தது.

ஏதோவோர் உணர்வில் அகப்பட்டுக் கொண்டேன். அது காதலா என்பதை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. இன்று அதனை எண்ணிப் பார்த்தாலும் நெஞ்சம் சுடுகிறது.

அவள் என்னைப் பார்க்கிறபோது ஜுவாலையோடு எரியுமே உள்ளுக்குள் ஒரு நெருப்பு, அது மீண்டும் தெரிகிறது.

பார்வைகளில் பேசிக் கொண்டோமே தவிர, ஒரே ஒருமுறை கூட பேசியதேயில்லை. காரணம் ஏனோ தெரியவில்லை. சைகைகளே போதும் என்று நினைத்திருந்தாளோ என்னவோ.

அவளிடம் பேசாமல் இருந்து வந்தது ஓர் இழப்புத்தான் என்பதை, இப்போது நினைத்து என்ன பயன்? கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்.

இன்று எப்படி இருப்பாளோ? யாருக்கு மனைவியாகவோ?

எத்தனை பெண்களோடு பழகி மகிழ்ந்தாலும் பார்த்துச் சிரித்தாலும்... அவளின் பார்வை தந்த சுகம் மட்டும் கிடைப்பதில்லை.

அவள் பார்த்தாலே போதும் பற்றி எரியுமே தேகம்.

இழந்துவிட்டேன். இன்று கண்ணீர் மழையில் நனைந்தென்ன பிரயோஜனம்?

அந்தக் கணங்களில் என்னில் முளைத்து வந்தது நீதானோ?

நான் பெற்றதைவிட இழப்புக்களே என்னைத் துரத்துகின்றன.

அன்றிலிருந்தே நீ பெரும்பாலும் நிறைவேறாத காதலாகவே இருந்து வந்திருக்கிறாய்.

எதை இழந்துவிடுகிறோமோ அதை சாகும்வரை மறந்து விடுவதில்லை. நான் இழந்தது உன்னை!

இருபத்தியெட்டு வயதில் பாரதி எழுதிய சுயசரிதையில் பத்து வயதில் அவன் மனதில் பதிந்த, ஓர் ஒன்பது வயதுச் சிறுமியைப் பற்றி அவன் நினைவுகளில் பதிவான அளவுக்கு அன்பு மனைவி செல்லம்மா பதிவாகவில்லை.

பாரதி மட்டுமல்ல; எல்லோர் வாழ்வின் முதல் காதலும் அப்படித்தானே?

பாரதியின் ஒன்பது வயதுச் சிறுமி போலவே, அவள் என் வாழ்வின் அழியாத பக்கங்களில் பத்திரமாக சிரித்துக் கொண்டிருக்கிறாள்.

தயவு செய்து யாரும் அவளை தொந்தரவு செய்து விடாதீர்கள். அவள் அழுதால் என்னால் தாங்கமுடியாது நண்பர்களே!

நெஞ்சு நிறைய காதலோடு
குணசேகர்.

# பொய்யன்

'ச்சே, நண்பனா இவன்?'

மனசு முனகிக் கொண்டிருந்து. பூரணி என்னை அழைத்திருக்க வேண்டும். என் கவனத்தில் வரவில்லை என்றதும் உலுக்கியிருக்கிறாள்.

"என்ன ஆச்சு உங்களுக்கு? சாயங்காலம் ஆபீஸைவிட்டு வந்ததிலேர்ந்து பேயறைஞ்ச மாதிரி இருக்கீங்க. இப்பகூட சாப்பாட்டுல கவனம் இல்லாமல் போட்டு உளையறீங்க."

"ப்ச்..."

"என்னன்னுதான் சொல்லுங்க."

எனக்கும் வடிகால் வேண்டியிருந்தது. முதலில் அவளிடம் சொல்ல வேண்டாமென்று தீர்மானித்திருந்தேன். முதல் பட்டம்



ரிஷபன்

எனக்குக் கிடைக்கும். 'அசடு...ஏமாளி... இளிச்சவாயன்.' இதில் ஏதாவது ஒன்று. அல்லது எல்லாமும்.

"நம்ம மணி, அதான் என் ஃப்ரண்டு கூசாம சொல்றான். அவனுக்கு நான் தர வேண்டிய ஆயிரம் ரூபாயைத் தரவேயில்லைன்னு..."

பூரணிக்கும் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது.

"என்னங்க இது. நாலஞ்சு மாசத்துக்கு முன்னாலேயே நீங்க திருப்பித் தந்துட்டதா சொன்னீங்களே!"

"எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. ஒரு கவர்ல பத்து நூறு ரூபாயை வச்சு எடுத்துக்கிட்டு போனேன். உன்னைத்தானே பீரோவுல இருந்து எடுத்துத் தரச் சொன்னேன்?" என்றேன்.

"இப்ப என்னதான் சொல்றாரு?"

"நான் திருப்பித் தரலையாம். 'நீ தரவே இல்லைன்னாலும் பரவாயில்லை. ஆனா.. தந்துட்டதா நினைச்சிருக்கே பாரு, அதனாலேதான் சொன்னேன்னு' மறுத்துப் பேசறான். எப்படி பொய்சொல்றான்? நாளைக்கு எப்படி யாவது ஆயிரம் ரூபாயை முஞ்சில விட்டெறியப் போறேன். இனிமேல் அவன் ப்ரெண்ட்ஷிப்பே வேணாம்!"

"உங்களை யார் வேணுமானாலும் ஏமாத்தலாம்" என்றாள் முத்தாய்ப்பாக.

விசாரித்த இரு நண்பர்களிடம் பணமில்லை. கைமிருப்பு, சோதனையாய் முந்நூறு மட்டுமே. 'இன்றைக்குள் எப்படியும் அவன் முகத்தில் ஆயிரம் ரூபாயை விட்டெறிய வேண்டும்!'

மணி இருந்த திசைப் பக்கமே திரும்பவில்லை. அவனைப் பார்க்கவே பிடிக்கவில்லை. பொய்யன். ஏமாற்றுக்காரன்.

என்னவோ படப்படப்பு. கோபம், உடலெங்கும் கொதித்தது. மேஜை அறைகளைத் திறந்து உள்ளிருக்கும் பர்சனல் ஃபைல், டயரி, நோட்டு என்று எடுத்துப் பார்த்தேன். ஏதாவது செய்து மனநிலையை சமனப்படுத்த வேண்டும் என்று.

சம்பள ரசீதுகளைப் பத்திரப்படுத்தி வைத்த கோப்பு தடித்திருந்தது. தன்னிச்சையாய்ப் பிரித்ததில் பிரவுன் கவர் ஒன்று வீசிறப்பட்டு கீழே விழுந்தது.

எடுத்து படபடக்கும் விரல்களுடன் துழாவினேன்.

கவரினுள் பத்து நூறு ரூபாய் நோட்டுக்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்



கரும்பின் சுவை
உண்டு!
அமுதின் சுவை
உண்டு!

எதில் உண்டு?
இவையெல்லாம்
எதில் உண்டு?

இன்பத் தமிழில்
உண்டு!
எங்கள் தமிழில்
உண்டு!

சுந்தரத் தமிழில்
நயமும் உண்டு!
நல்ல சுரமும்
உண்டு!

விண்ணை உரசும்
வளர் மொழியில்
மண்ணில் யாருக்குமில்லாத
பெருமை உண்டு!

கண்ணுக்கு நிகரான
வண்ணத் தமிழ் மொழியில்
மனப் புண்ணுக்கும்
மருந்து உண்டு!

சங்கம் வளர்த்த
தமிழில்
பொங்கும் இன்பம்
உண்டு!

உயிருக்கு நேரான
உயரத் தமிழ் மொழியில்
உலகுக்கு தருவதற்கு
இலக்கிய புதையல் உண்டு!

உண்டு-உண்டு-உண்டு
யாவும் உண்டு!
அமுது உண்டு களிக்கும்
இனிமை உண்டு!

புகழ்ந்தவன் வளவன்
அரசவைப் புலவன்!

"புலவருக்கு
மொழிப் பற்று அதிகம்!"
என்றாள் கனிமொழி.
அரசனின் மகள்!

"உயிர்ப்பற்றை விட
உயர்ந்தது
மொழிப் பற்று!"
என்றான் புலவன்.

"மிகையான கூற்று
போலியான பேச்சு!
உயிர் இருந்தால்தானே
நீர் தமிழை வளர்க்கலாம்!"
என்றாள் கனிமொழி.

"யார் அழிந்தாலும்
பார் உள்ளவரை
வாழும் தமிழ்!"
என்றான் உறுதியாக!

"தமிழ் வாழ
வேண்டுமானால்
தமிழர்கள் வாழ
வேண்டாமா?"
என்றாள் கனிமொழி.

"வாழ வேண்டும்.
வளர வேண்டும்."
என்றான் புலவன்.

"தமிழை நீர்
காதலிக்கிறீரா புலவரே?"

"எந்தேகம் உள்ளவரை
காதலிப்பேன்!
இதிலென்ன சந்தேகம்?"

"தமிழைக் காதலியும்
தமிழால் காதலியும்!"
என்றாள் கனிமொழி.

புலவனுக்கு
பொறி கலங்கிவிட்டது!

மன்னனின் குமாரத்தி
மையல் கொள்கிறாள்.

மன்னன் அறிந்தால்
மரணம் நிச்சயம்!

மெல்ல நழுவ
வழி பார்த்தான்!

அவன் மனதை படித்தவள்
கரத்தை பிடித்தாள்!

தொட்டதும் சிலிர்ப்பு
பெண்ணுக்கு மட்டுமா?
ஆணுக்கும் வரும்!

உடல் சுடுவதும்
உள்ளே தகிப்பதும்
பெண்ணுக்கு மட்டுமா?
ஆணுக்கும் உள்ளது.

இதயம் படபடக்க
மூளை இயங்க மறுக்கும்
மோக நிமிஷங்கள்
ஆணுக்கும், பெண்ணுக்கும்
பொது நிமிஷங்கள்!

கனிமொழி
வெகு துணிச்சல்காரி!

அவனோடு
ஒட்டிக்கொண்டு
உடல் உரச
நின்று கொண்டாள்!

திரண்ட எழில்களில்
அவன் தேகம் பட்டதும்
தீ பரவிக் கொண்டது!
இதயம் தடதடத்தது!

காய்ச்சல் வந்து
படுக்கையில் கிடப்பவன்
தேகம் போல
அவனுக்கு அனலடித்தது!

பணியாத குன்றுகள்
போல் இந்த
கனிகளின் வலிமை!

தணியாத தாகம்
போல் இந்த
வேளையின் கொடுமை!

துணியாத துணிவெல்லாம்
வருகிறது இந்த
நெருக்கத்தின் புதுமை!

புலவன் உள்ளே
என்ன அரங்கேற்றம்!

அவள் மூச்சு
அவன் கன்னம் தொட்டது!

அவள் மூக்கும்
அவன் கன்னம் தொட்டது!

அவள் இதழ்கள்
அவன் கன்னம் தொட்டன!

கிண்ணத்தில் நழுவிய
வெண்ணெய்யாய்
ஆசை எண்ணத்தில்
நழுவிப் போனான் அவன்!

"வாரும் புலவரே!
தமிழைப் பொழியும்
என் இதழைப் பிழியும்!

வாரும் புலவரே
சிந்தும் தேனை
அமுதாய் உண்டு
சங்கத் தமிழை
மழையாய் தாரும்!

தாரும் புலவரே
நூல் பல அறிந்த
உமது கரத்தால்
என் நூல் அறிந்து
விளக்கம் தாரும்!

இலக்கியம் சுவைத்த
உமது உதடுகள்
புது இலக்கியம்
படைக்க அனுமதி தாரும்!

# காதல் நலம்

வாரும் என் நாயகரே
தேக சந்நிதி
சாந்திக்காக காத்திருக்கிறது!"

புலவன் காதருகே
இதழ்கள் உரசி
இரகசியம் பேசின!

அவள் கைகள்
மரத்தை பற்றும்
கொடி போல
புலவனை சுற்றின!

மீளமுடியாத மரம்
காற்று அதனை
வேகமாக அசைத்தது!
அது மோகக் காற்று!

மரம் கொடியை
அங்கீகரித்தது!
கொடியின் புதுமையை
ஆராதித்தது!

கொடிக்குத்தான்
எத்தனை வேகம்!
மரத்தை முறிப்பதுபோல
இறுகிப் படர்ந்தது!

இறுகிப் படர்ந்ததால்
கொடியின் புற எழில்
யாவும்
மரத்தால் உணரப்பட்டது!

வன்மை, மென்மை
வளமை, வறுமை
அனைத்தும் உண்டு!
இவளும் இனியவள்
செந்தமிழ் போல!
கிறங்கினான் புலவன்!

மாநிறத்தாள்
மயங்கிக் கிடந்தாள்!
ஒருடல் போல
பிணங்கிக் கிடந்தாள்!

"ஈட்டிய பொருளை
பகிர்ந்து கொடுத்து
உண்பது பொதுநலம்!
அது போல
தன் எழிலை இவள்
தழுவிப் பகிர்வதுதான்
காதல் நலம்!"
என்று நினைத்தான்
பேருவகை கொண்டான்!

"தம்மில் இருந்து தமது
பாத்து—உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"

அதிகாரம்: 111, குறள்: 1107

## தருவது ரசிகன்

## ஸ்போர்ட்ஸ்

## தேசிய தினப் பரிசு



ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெற்ற 16வது உலகக்கிண்ண உதை பந்தாட்டப் போட்டி. இந்த நூற்றாண்டின் இறுதிப் போட்டி.. வரலாற்று வெற்றியைப் பெற்று கிண்ணத்தை சுவீகரித்த ஃபிரான்ஸ் அணிக்கு, போட்டி நடைபெற்று இரண்டு நாட்களின் பின் வந்த ஃபிரான்ஸ் தேசிய தினத்திற்குக் கிடைத்த பரிசுதான் என்று சொல்ல வேண்டும்.

1938ம் ஆண்டு முதன் முதலாக ஃபிரான்ஸ் உலகக் கிண்ண உதைபந்துப் போட்டியை நடத்தியது. அப்போட்டியில் இத்தாலி சாம்பியன் பட்டத்தை வென்றது. இரண்டாவது முறையாக இம்முறை– 65 கோடி பவுண் (நம்மூர்ப் பெறுமதிப்படி சுமார் 6 ஆயிரத்து 890 கோடி ரூபாய்) செலவு செய்து போட்டியை நடத்திய ஃபிரான்ஸ், வெற்றிக் கிண்ணத்தை யாருக்கும் விட்டுக் கொடுக்கவில்லை.

## அடுத்த போட்டி

அடுத்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன. இது 2002ம் ஆண்டு நடைபெறும்.

இதைத் தொடர்ந்து 2006ல் உலகக் கிண்ணப் போட்டியை நடத்த அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் விண்ணப்பித்துள்ளன.

## 5 ஒருநாள் போட்டிகள்

இந்திய கிரிக்கெட் அணி இவ்வருட இறுதியில் நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. அங்கு நியூஸிலாந்து அணியுடன் 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

***

கொழும்பில் நடைபெற்ற சுதந்திரக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் 2 ஓவர்கள் குறைவாக வீசியது. இதையடுத்து இந்திய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இதற்காக, இறுதிப் போட்டியில் வழங்கப்பட்ட ஊதியத்தில் 10 சதவீதத்தை இந்திய வீரர்கள் இழப்பர்.

## சாதனை அணி

உலகக்கிண்ண உதைபந்துப் போட்டியில் மூன்றாவது இடத்திற்காக நடத்தப்பட்ட போட்டியில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி குரோஷியா அணி வெற்றி பெற்றது.

இதுவும் ஒரு வரலாற்று சாதனைதான். இதுவரை 16 தடவைகள் நடைபெற்ற உலகக்கிண்ண உதை பந்துப் போட்டிகளில் எந்த அணியும் அறிமுகமான முதல் போட்டித் தொடரில் மூன்றாவது இடத்தைத் தொட்டதேயில்லை. குரோஷியா அணிக்கு இது ஒரு பெரிய வெற்றியே.



சுக்கெர்

முன்னர் யூகோஸ்லாவியாவுடன் இணைந்திருந்த குரோஷியா, 1991ல் தான் தனிநாடாகச் சுதந்திரமடைந்தது. இந்நாட்டின் மக்கள் தொகை 40 இலட்சத்து 80 ஆயிரம்.

உலகக் கிண்ணப் போட்டியில் அதிக கோல் போடும் வீரருக்கு தங்க காலணி (GOLDEN BOOT) வழங்கப்படுவது வழக்கம். இம்முறை தங்கக் காலணியைக் கைப்பற்றியவர் குரோஷிய வீரர் டெவோர் சுக்கோர். இவர் இப்போட்டித் தொடரில் 6 கோல்கள் போட்டுள்ளார்.

## டயானா கிரிக்கெட்

மறைந்த வேல்ஸ் இளவரசி டயானா நினைவு கிரிக்கெட் போட்டி எம்.சி.சி. மற்றும் 'ரெஸ்ட் ஒஃப் த வேர்ல்ட்' (ஏனைய உலக அணிகள்) அணிகளுக் கிடையே ஜூலை 18ம் திகதி இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

'ரெஸ்ட் ஒஃப் த வேல்ட்' அணிக்கு இந்தியவீரர் சச்சின் டெண்டுல்கரும் எம்.சி.சி. அணிக்கு இங்கிலாந்தின் மைக் ஆதர்ட்டனும் தலைமை தாங்குகின்றனர்.

இரு அணிகள் பற்றிய விபரம் வருமாறு:

ரெஸ்ட் ஒ.்.ப் த வேர்ல்ட்:

சச்சின் டெண்டுல்கர், சனத் ஜயசூரிய, அரவிந்த டி சில்வா, வாஸிம் அக்ரம், முஷ்டாக் அகமட், சயிட் அன்வர், கிறிஸ் ஹரீஸ், கிறிஸ் கெய்ன்ஸ், கிரஹாம் கிக், டொம் மூடி, இயன் பிஷப், அன்டி .்.பிளவர்.

எம்.சி.சி.லெவன்:

மைக் ஆதர்ட்டன், முகமட் அஸாருதீன், சவ்ரவ் கங்குலி, அனில் கும்ப்ளே, ஜகவல் ஸ்ரீநாத், அலன் டொனால்ட், பிரையன் மெக்மில்லன், இயன் ஹீலி, கிளென் மெக்கிராத், அமீர் சொஹைல், சிவ்நாராயண் சந்தர்போல்.

## சிந்தியா பதில்கள்

* மாகாண சபைத் தேர்தல்களை நடத்த அரசு தயங்குவதேன்?

எம்.கே. அன்ரன், குருநாகல்.

வெற்றியை நிச்சயப்படுத்த முடியாததால்!

✉ ✍

* கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா இருவருக்கும் உள்ள பொதுத் தன்மை ஒன்று கூறும்?

சி. சதீஸ்குமார், கொழும்பு-10.

சொந்த நலன், சுயவிளம்பரம் என்பவற்றில் அளவற்ற பிரியம் கொண்டவர்கள்!

✉ ✍

* ப்ரீதா விஜயகுமார் நம்பர் வன் இடத்தைப் பிடிப்பாரா?

செல்வி க. தேவி, பதுளை.

அவராகப் பிடிக்காவிட்டாலும், அவரைப் பிடித்துக் கொண்டிருக்கும் கதாநாயகர்கள் தூக்கிவைத்துவிடுவார்கள்!

✉ ✍

* தீர்வுப் பொதிக்கு அனைவரும் ஆதரவு தருமாறு மீலாத் விழாவில் ஜனாதிபதி பேசியுள்ளாரே?

வி. சிறீகாந்தன், திருமலை.

90 வீதமான மக்கள் ஆதரவு என்றார் முன்னர்! பின்னர் ஏன் இன்னமும் மக்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்? மக்கள்தான் தடை என்று பழிபோடுவது மாதிரியன்றோ இருக்கிறது!

✉ ✍

* சிந்தியா! காதல் கவிதை ஒன்று?

மு. துர்க்கா, வவுனியா.

எங்கேயோ படித்தது:
"என் காதலியும்
தபால் பெட்டியும்
ஒன்றுதான்;
இருவருமே
வாங்கிக் கொள்வதுண்டு.
வாசிப்பதேயில்லை!"

✉ ✍

* பொருட்களுக்கு விளம்பரம் செய்யும் பிரபலங்கள் அந்தப் பொருட்களை உபயோகிப்பதுண்டா?

ச. விஸ்வேஸ்வரன், மட்டக்களப்பு.

ஓர் இத்தாலியப் பாடகரை ஒரு நிருபர் பேட்டி எடுத்தார்.

"நீங்கள் சிகரெட் பிடிப்பீர்களா?" என்று கேட்டார்.

"ம்ஹூம் மாட்டேன்!" என்றார் பாடகர்.

"அப்படியானால் அந்த சிகரெட் விளம்பரத்தில் தோன்றி, "சிகரெட்டால் என் தொண்டைக்கும், குரலுக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை" என்று கூறியிருக்கிறீர்களே?" என்று கேட்டார் நிருபர்.

அதற்குப் பாடகர் சொன்னார்: "இப்போதும் சொல்கிறேன். அந்த சிகரெட்டால் எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஏனெனில் நான் சிகரெட் பிடிப்பதில்லை!"

✉ ✍

* பணம் இருப்பவர்கள் நிம்மதியாக இருக்க முடியாதா?

பா. சீதாராமன், வத்தளை.

முறையான வழியில் சேர்த்து, முறையான வழியில் செலவு செய்தால் நிம்மதிக்கு என்ன குறைச்சல்?

✉ ✍

* விஜய் இப்போது எப்படி இருக்கிறார்?

எஸ். குகன், கொழும்பு-12.

எழுந்து படப்பிடிப்புக்காக இலண்டன் பறந்துவிட்டார்.

✉ ✍

* சுயவிமர்சனம் என்றால் என்ன?

ஆர். தனலக்சுமி, களுவாஞ்சிக்குடி.

ஜோன் நியூட்டன் என்று ஒருத்தர் இருந்தார். அவர் கூறினார்: "நான் எப்போதாவது சொர்க்கத்துக்குப் போனால் அங்கே மூன்று அதிசயங்களைப் பார்ப்பேன்."

"என்ன அதிசயங்கள்?" என்று கேட்டனர்.

"நான் யார் யார் இருக்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேனோ, அவர்களில் சிலர் அங்கே இருப்பார்கள்! இது முதல் அதிசயம்!" என்றார்.

"சரி அடுத்தது?"

"இரண்டாவது அதிசயம். அங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்த்த சிலபேர் அங்கே இருக்கமாட்டார்கள். மூன்றாவது அதிசயம் என்ன தெரியுமா?"

"என்ன?" என்று கேட்டனர்.

"நான் அங்கே இருப்பேன் பாருங்க; அதுதான் மூன்றாவது அதிசயம்!" என்றார்.

✉ ✍

* இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்காவை வேறு பதவிக்கு மாற்றியது ஏன்?

எம். நிஷாம், நீர்கொழும்பு.

தணிக்கை அமுலில் இருப்பதால் அவர் திறமைக்கு வேலை இல்லை. அதுதான் மாற்றிவிட்டனர். இப்போது ஸ்கோர் கூறும் வேலை மட்டும்தானே இருக்கிறது. தினம் ஒரு ஸ்கோர் கூறியாகவேண்டும் என்று விதி இருக்கிறதோ என்று ஐயம் வருகிறது.

✉ ✍

* சிலர் சுத்தம் பற்றியே கவலைப்படுவதில்லையே-ஏன்?

பி. ராஜ்குமார், யாழ்ப்பாணம்.

பழக்கதோஷமும் காரணம்.

ஒரு நண்பரிடம்: "ஏண்டா உன் சாப்பாட்டுக்கு மேல் தலைமுடி தொங்குவது மாதிரி செய்தால் உன் கவனம் எதில் இருக்கும்?" என்று கேட்டார் இன்னொரு நண்பர்.

"சாப்பாட்டில்தான் என் கவனம் இருக்கும்!" என்றார் நண்பர்.

"ஏன்?" என்றார் மற்றவர்.

நண்பர் சொன்னார்: "என் வீட்டில் சாப்பாட்டிலேயே தலைமுடி கிடப்பது சகஜம். அதனாலே பழகிப்போச்சு!"

✉ ✍

* 'பிரியமுடன்' படத்தில் உங்களுக்குப் பிரியமானது என்னவோ?

க. உஷா, தெகிவளை.

"உன்மீது ஒரு பூ விழுந்தாக்கூட அந்த மரத்தையே வெட்டிவிடுவேன்!" என்பது போன்று பிடிவாதமான வசனங்கள்!

✉ ✍

* சுதந்திரக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றி விட்டதே?

எஸ். ஸ்ரீநாத், கம்பளை.

அங்கு கொடுத்ததை, இங்கு வந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். சவாலுக்குச் சவால்!

✉ ✍



'தர்மா' படத்தில் விஜயகாந்த்–ப்ரீதா

* விபத்துக்கள் அதிகரிக்க யார் காரணம்?

சோ.காந்தன், பண்டாரவளை.

கவனக் குறைவுதான் காரணம்! ஒரு ஜோக் கதை,

ஒருத்தர் தெருவிலே நடந்து போய்க்கொண்டிருந்தார். எதிரில் ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அதிலே மோதி இவர் கீழே விழுந்துவிட்டார். சைக்கிள்காரர் இறங்கி இவரைத் தூக்கிவிட்டார். இவர் எழுந்து அவரை முறைத்துப் பார்த்தார்.

"அப்படிப் பார்க்காதீர்கள். நீங்கள் ரொம்பவும் புண்ணியம் செய்துள்ளீர்கள். அதுதான் இப்போது வந்து சைக்கிளில் மோதினீர்கள்!" என்றார் சைக்கிள்காரர்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றார் அடிபட்டவர்.

சைக்கிள்காரர் கூறினார்: "பத்து நிமிஷத்துக்கு முன்னாலே நான் லொறி ஓட்டினேன். அப்போது எதிரில் வந்திருந்தீர்கள் என்றால் என்ன ஆகியிருக்கும்?"

✉ ✍

* ரஜினி அடுத்து என்ன செய்யப் போகிறார்?

கே. பாக்கியநாதன், கொழும்பு-09.

இப்படிக் கேட்டுக் கேட்டே அவரை ஒரு வழி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் தமிழகப் பத்திரிகையாளர்கள். நீங்களுமா பாக்கியநாதன்?

✉ ✍

* இன்றைய உலகின் கொடிய பகைவன் யார்?

வி. லத்தீப், கல்முனை.

எய்ட்ஸ்!



படிப்பகம்

# திருமறை தரும் பொது நெறி 18

ஆண்டவரின் அருளால் மோசே, செங்கடலை இரு கூறாகப் பிரித்தார். சாதாரண உலர்ந்த தரைமீது நடப்பதைப் போன்று இஸ்ரயேலர்கள் கடலின் தரையில் நடந்து சென்றனர்.

மோசேயும் விடுதலை பெற்ற மக்களும் ஆண்டவரின் வல்லமையை உணர்ந்தவர்களாக- ஆண்டவரின் பெருமையைத் தெரிந்துகொண்டவர்களாக- ஆடிப்பாடிக் கொண்டு சென்றனர். ஆண்டவர் தங்களுக்குக் காட்டிய கருணைக்காக நன்றி கூறிக் கொண்டு பாட்டுக்களைப் பாடினர்.



பாரவோனின் குதிரைப் படையும் தேர்களும் கன வேகத்தில் இஸ்ரயேல் மக்களைத் துரத்திக் கொண்டு வந்தன. செங்கடலைத் தாண்ட முடியாமல் இஸ்ரயேல் மக்கள் இக் கரையில் நிற்பார்கள்; சுலபமாக அவர்களைத் திசை திருப்பிக் கொண்டு போய்விடலாம் என்ற எண்ணத்துடன் பாய்ந்து சென்றனர் படையினர்.

இஸ்ரயேல் மக்கள் திக்குத் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருப்பார்கள் என்ற எண்ணத்துடன் சென்ற எகிப்தியப் படையினர் தான் திகைப்படைந்து தடுமாறினர். அப் படையினரை வழிமறித்து தீத்தம்பமும், மேகத் தம்பமும் நின்றன. ஏற்கனவே இரவிலும் பகலிலும் இஸ்ரயேல் மக்களுக்கு வழிகாட்டுவதற்காக ஆண்டவரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அக்கினித் தம்பமும் மேகத் தம்பமுமே இஸ்ரயேலர்களுக்கும் எகிப்தியப் படைகளுக்குமிடையில் நின்றன. இஸ்ரயேலர்கள் செங்கடலுக்கூடாகக் காணப்பட்ட தரையில் நடந்து செல்வதையும் அவர்கள் கண்டு பெருவியப்படைந்தனர்; அச்சமடைந்தனர்.

அவர்களில் பலர், 'இவையெல்லாம் ஆண்டவரின் கிருபையினால்தான் நடைபெறுகின்றன,' என்று கருதினர்.

ஆண்டவரின் அருளுடன் செங்கடலினூடாகச் செல்லும் இஸ்ரயேலர்களைத் தங்கள் படை பலத்தினால் வெற்றி கொள்வது கடினம் என்பதை உணர்ந்தனர். ஆனால் அவர்களைத் திரட்டி வந்த படைத் தளபதிகளுக்கு ஆண்டவரின் அற்புதங்களை உணரும் சக்தியற்றிருந்தது.

### எகிப்தியப் படைகள்

கடலினூடாக ஏற்பட்ட பாதை வழியாக இஸ்ரயேலர்கள் சென்று கொண்டிருக்கும் போது, அப்பாதையின் இரு மருங்கும் பெருமதில் போன்று கடல் நீர் திரண்டு இரைந்து கொண்டிருந்தது. அவர்கள் செல்லும்போது, அவர்களின் பின்புறமாக இரு தம்பங்களும் காவலாக நகர்ந்து கொண்டிருந்தன. எகிப்தியப் படையின் தளபதி, தொடர்ந்து இஸ்ரயேலர்களைத் துரத்திச் செல்லுமாறு ஆணை பிறப்பித்தான். குதிரைகளும் இரதங்களும் பாய்ந்து முன்னேறின.

எகிப்தியப் படைகள் பின்புறமாகத் துரத்திக் கொண்டு வருகின்றன என்ற தகவல் முன்புறமாகச் சென்று கொண்டிருந்த மோசேக்கு அறிவிக்கப்பட்டது. விரைவாகப் பின்புறம் வந்து சேர்ந்தார். எங்கே எகிப்தியப் படைகளிடம் அகப்பட்டுவிடுவோமோ, என்று பின்னணியிலிருந்த மக்கள் பயந்து பதற்றமடைந்திருந்தனர். மோசே பின்புறமாக வந்து சேர்ந்ததும் அவர்களின் அச்சம் நீங்கியது.

ஆண்டவர் மோசேயிடம் "மோசே! உன் கைக் கோலை கடலின் மேல் நீட்டும்! எகிப்தியப் படைகள் யாவும் இப்போது கடலின் நடுப்பாகம் வரை வந்து விட்டன!" என்றார்.

மோசே ஆண்டவரின் ஆணைப்படி தனது வலக்கையினால் கோலை கடல்மீது நீட்டி அசைத்தார். பேரிடிபோல் இரு புறமும் கடல் முழக்கமிட்டவண்ணம் மூடி ஒன்றிணைந்தது. எகிப்தியக் குதிரைகளும் தேர்களும் வீரர்களும் கடலால் மூழ்கடிக்கப்பட்டனர். இக்காட்சியைத் திரும்பிப் பார்த்த வண்ணம், முன்புறம் திறந்து கிடந்த உலர்ந்த தரையினூடாக இஸ்ரயேல் மக்களனைவரும் செங்கடலைக் கடந்து அக்கரையை அடைந்தனர். உடனடியாகவே அனைவரும் ஒரே குரலில் ஆண்டவரின் பெருமைகளைக் கூறும் வாக்கியங்களால் அமைக்கப்பட்ட கீதங்களைப் பாடி, ஆண்டவருக்கு நன்றியறிதலை வெளிப்படுத்தினர்.

மோசேக்கும் ஆரோனுக்கும் சகோதரியான மிரியம் இஸ்ரேலியப் பெண்கள் பலரை ஒன்று சேர்த்து அனைவரும் ஆண்டவருக்கு நன்றி தெரிவிக்கும் பாடல்களைப் பாடி ஆடினார்கள்.

### கசப்பு நீர்

செங்கடலுக்கு வடக்கே பரந்து கிடந்த சூர் பாலைநிலத்தில் மூன்று நாட்கள் பயணம் செய்தனர். அங்கிருந்து மாரா என்ற இடத்தைச் சென்றடைந்தனர். பாலை நிலத்திலும் இஸ்ரயேலர்களுக்குப் பருகுவதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அதேவேளை மாராவில் தண்ணீர் கிடைத்தது. தாகம் தீர்க்கலாம் என்று ஆர்வத்துடன் ஓடிச் சென்று தண்ணீரைக் குடித்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். அந்த நீர் கடும் கசப்பாக இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அதிருப்தியாளர்கள் தவறவில்லை. ஆண்டவர் அதுவரை அவர்களுக்கு அருளிய அநுக்கிரகங்கள் அனைத்தையும் மறந்தனர். மோசேயையும் ஆரோனையும் வசைபாட ஆரம்பித்தனர். மோசேயிடம் ஆண்டவர்: "மோசே! அதோ தெரிகிறதே ஒரு மரத் துண்டு; அதனை கசப்பு நீர் ஏரியில் போடும். நீர் சுத்தமாகி, குடிப்பதற்கு ஏற்றதாக மாறிவிடும்," என்றார். மோசேயும் ஆண்டவரின் வாக்குப்படி அம்மரக் கட்டையை எடுத்து நீரில் போட்டார். தானே நீரை மொண்டு பருகினார். பார்த்து நின்றோரும் மோசேயைப் பின்பற்றி நீரைக் குடித்துக் குதூகலம் அடைந்தனர்.



'மாரா' என்பது எபிரேய மொழியில் கசப்பு என்ற அர்த்தத்தைத் தருகிறது.

அடுத்ததாக ஏலிம் என்ற இடத்துக்குச் சென்று அவ்விடத்துக்கும் சீனாய்க்குமிடையிலுள்ள சீன் பாலைநிலத்தைச் சென்றடைந்தனர். இங்கு இஸ்ரேல் மக்களுக்கு உண்பதற்கு உணவு கிடைக்கவில்லை. மீண்டும் மோசேக்கு எதிராக ஒரு கூட்டம் வசைபாட ஆரம்பித்தது. ஆனால் மோசே அதனால் சோர்வடையவில்லை. 'கடவுள் இத்தனை கருணையுடன் வழிநடத்தியும் இம்மக்கள் திடீர் திடீரென நம்பிக்கை இழந்து விடுகின்றனரே!' என்று பச்சாதாபப்பட்டார். ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும், மக்கள் உணவினைப் பெறுவதற்கான ஏற்பாட்டினைச் சொன்னார். அவர்களும் இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தை ஒன்று கூட்டி ஆண்டவரின் சித்தத்தையிட்டு அறிவுறுத்தினார்கள்.

"இஸ்ரயேல மக்கள் சமுதாயத்தை பலநூறு ஆண்டுகளாக எகிப்தியர் அடிமைப்படுத்தித் துன்புறுத்தினர். அந்த அடிமைத் தளையிலிருந்து உங்களனைவரையும் ஆண்டவர் மீட்டார். நமக்காகவே ஆண்டவர் அருமையானதோர் இடத்தைத் தெரிவு செய்துள்ளார். அந்த இடத்தில் உங்களனைவரையும் பத்திரமாகக்கொண்டு சேர்க்கும் பொறுப்பினை எம்மிடம் ஒப்படைத்துள்ளார்.

எங்களுடைய தேவைகளை ஆண்டவர் உணராமலிருப்பாரா? அவ்வப்போது எமக்கு ஆண்டவர் செய்யும் பேருதவிகளை உடனுக்குடன் மறந்து விடுகிறீர்கள். எமது சகோதரரான ஆரோனும் நாமும் உங்களுக்குத் தீங்கிழைத்துவிட்டதாக எப்போதும் குறைகூறுகிறீர்கள். இவ்வாறு எங்களைக் குறைகூறுவதன் மூலம் அந்தக் கருணாகரரான ஆண்டவரையே தூஷிக்கிறீர்கள். இது தர்மமாகாது.

எமது செயல் ஒவ்வொன்றையும் ஆண்டவர் அவதானிக்கிறார். நாம் தவறுகள் விட்டாலும் அவர் அத்தவறுகளை மன்னித்து, எமக்கு வேண்டியவற்றை அருளுகிறார் என்பதை மறவாதீர்கள்.

எங்களுக்கு உணவு தேவை என்பதை எங்கள் ஆண்டவர் உணராதவரல்ல. காலையில் எங்களனைவருக்கும் போதுமான உணவு கிடைக்கும். மாலையில் இறைச்சியை நீங்கள் உண்ணலாம். காலையில் உங்களுக்காக அப்பம் கிடைக்கும். ஆகவே அமைதியடையுங்கள்!"

### உணவு கிடைத்தது

இவ்வாறு மோசேயும் அவருடைய சகோதரரான ஆரோனும் இஸ்ரயேல் மக்கள் சமுதாயத் தலைவர்களிடம் எடுத்துக்கூறி சகலருக்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

## நன்னீரும்.... நல்லுணவும்....

அடுத்த நாள் காலை பொழுது புலர்ந்தது. பாலை நிலமெங்கணும் பனிப்படலம் படர்ந்து மூடிக்கிடந்தது. பனிப்படலம் அகன்று ஒளிபரவியதும், பாலை நிலமெங்கும் தட்டை தட்டையாக உறைபனிபோல் எங்கும் காணப்பட்டன. காலையில் இப்பொருளினைக் கண்ட மக்கள், அவை என்னவாக இருக்கும் என்று தெரியாமல் தடுமாறினர்.

மோசேயும் ஆரோனும் தங்கள் விடுதியிலிருந்து வெளியே வந்து பாலை நிலத்தில் பரந்து கிடக்கும் அப்பொருட்களைச் சேகரிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டனர். ஆண்டவரால் இஸ்ரயேல் மக்களின் பசியினைப் போக்குவதற்காகப் பொழியப்பட்ட அப்பமே அது என்று விளக்கினார்கள்.

"ஒவ்வொரு நாளும் அந்தந்த நாளுக்குரிய அப்பத்தை மட்டுமே ஒவ்வொருவரும் சேகரியுங்கள். அவற்றை அன்றையப் பகலும் இரவும் உண்டு முடித்துவிட வேண்டும். அடுத்த நாள் காலையில் அன்றைக்குரிய அப்பம் கிடைக்கும். நாளை உணவைப் பற்றி எவரும் கவலைப்பட வேண்டாம். ஆண்டவரிடம் நம்பிக்கை வைத்து அவருடைய ஆணைப்படி நடவுங்கள்.

ஆறாவது நாளன்று மட்டும், ஏழாவது நாளுக்குரிய அப்பத்தையும் சேர்த்து இரட்டிப்பாகச் சேகரியுங்கள். ஏனெனில் ஏழாவது நாளன்று மட்டும் அப்பம் பொழியப்படமாட்டாது."

மோசே ஆண்டவருடைய கட்டளையை இவ்வாறு தெளிவாக எடுத்துக்கூறினார். ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு இருபடிகள் மட்டுமே அப்பம் சேகரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். ஆனால் பேராசை கொண்ட சிலர் கூடுதலாகச் சேகரிக்கவும் செய்தனர். ஆனால் அவ்வாறு மேலதிகமாகச் சேகரிக்கப்பட்ட அப்பம் அடுத்த நாட்காலையில் புழுத்து நாற்றமெடுத்தது. இதனால் அச்சமுற்ற மக்கள் இருபடிகள் வீதம் மட்டும் சேகரித்து மீதி வைக்காமல் அருந்தினர்.

(தொடர்ந்து வரும்)

## இராஜகுமாரன்

**திருமறை 16 விடை: 430 ஆண்டுகள்**

**பரிசு பெறுவோர்:**

1. ஜே. தேவாசீர்வாதம், ஏஞ்சல் இல்லம், 66, குடாகம, அட்டன்.
2. செல்வி கு. மயூரதி, 47, மகாரம்பைக்குளம், வவுனியா.
3. ஏ. அன்ரனி றொயிஸ், பங்குமனை, சொறிக்கல்முனை, சம்மாந்துறை.
4. லூயிஸ் சில்வியா, 3ம் வட்டாரம், நிலாவெளி.
5. எம். மதனி இஸ்மாயில், 11/2, ஜயரட்ண வீதி, நீர்கொழும்பு.

**திருமறை 18 வினா:- எகிப்தியப் படைகளுக்கு என்ன நடந்தது?**

ஜூலை 25க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 18—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : பில் கிளின்ரன் |
| வயது | : விளையாடும் வயதல்ல |
| தொழில் | : ஜனாதிபதி |
| உப தொழில் | : பெண்கள் சேகரிப்பது. |
| பொழுது போக்கு | : சமாதான மாநாடுகள் |
| பிடித்தது | : பெண்பால் |
| பிடிக்காதது | : புகார்கள் |
| வெறுப்பது | : வழக்குகளை |
| நேசிப்பது | : சட்டத்தின் ஓட்டைகளை |
| நீண்ட கால சாதனை | : இரு தடவை ஜனாதிபதி |
| சமீபத்திய மகிழ்ச்சி | : வழக்கில்வெற்றி |
| எரிச்சலடைய வைத்தது | : இந்தியாவின் அணுக்குண்டு. |
| நம்புவது | : கிளாரியை. |
| நம்பாதது | : அழகிய செயலாளர்களை |
| இலட்சியம் | : இன்னொரு கென்னடியாவது. கிளாரியை ஜனாதிபதியாக்குவது. |

## கந்தசாமியும் முத்துத் தம்பியும்

**முத்துத் தம்பி:** ஒரே குட்டை, ஒரே மட்டை. ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுவினம் நொட்டை. போட நினைக்கினம் எங்களுக்கு மொட்டை. இவையைத்தான் ஒன்று சேர்த்து சிலர் வாங்க நினைக்கினம் பெரிய முட்டை.

**க.சா:** இவர் தங்கள் பக்கம் இருப்பதால் மிஸ்டர் பண்டாரநாயக்கா, மிஸிஸ் பண்டாரநாயக்கா போன்றோரை விளாசித் தள்ள யானைக் கட்சியினருக்கு சங்கடம் தானே. அந்தப் பக்கம் போனார் என்றால் லெஃப்ட் அன்ட் ரைட்டில கொடுக்கலாம்.



**கந்தசாமி:** என்ன முத்துத்தம்பியர் அடுக்கு மொழியில் பிளந்து கட்டுகிறீர். பராசக்தி படம் அந்தக் காலத்திலே ஒன்றாக பார்த்தது ஞாபகம் இருக்குதோ? பத்து முறையல்லோ பார்த்தனாங்கள் இரண்டு பேரும்.

**மு.த:** சீரியஸ் தெரியாமல் ஜோக்கடிக்க வேண்டாம். எதிர்ப்பு கருவிகளைப் பூட்டி விமானங்களை யுத்தத்துக்கு அனுப்ப வேணுமாம்.

**க.சா:** எந்தத் தளபதி உத்தரவிட்டவர்?

**மு.த:** எந்தத் தளபதியும் இல்லை. யானைக் கட்சியின் எம்.பி. ஒருத்தர்தான் தங்கக் கம்பிமாதிரி நின்று யோசனை கூறியிருக்கிறார்.

**க.சா:** விமானத்திற்கு ஆபத்தில்லாமல் குடிமனைகளை தூள் பண்ணச் சொல்லுகிறாராக்கும்.

**மு.த:** போர் வேண்டாம் என்று சொல்லவில்லை. தம் சொற்படி போரிட சொல்லுகினம்.

**க.சா:** பொதி என்றால் என்ன, போர் என்றால் என்ன தங்கள் தங்கள் யோசனை தான் பாவிக்கப்பட வேணும் அதுதான் அவைக்குள்ளே போட்டி. நல்லது கெட்டது பற்றி பிரச்சனையில்லை.

**மு.த:** நல்லதாவது, கெட்டதாவது, அதிகாரம் கைக்கு எட்டினால் போதும் என்பது தானே பொலிசி.

**க.சா:** தமிழர்கள் தங்கள் குறை நிறைகளை முறையிட யானைக் கட்சியினர் அலுவலகம் திறந்து வைத்திருக்கினமாம்.

**மு.த:** பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகினம். போர் தொடர இலவச ஆலோசனையும் வழங்கிக்கொண்டு, போரால் பாதிக்கப்படும் சனத்திற்கு இலவச உதவியும் வழங்குகினம். மாகாண சபைத் தேர்தல் வந்தாலும் என்று தமிழ்ச் சனத்தின் வாக்குகளுக்கும் வலைபோடுகினம்.

**க.சா:** அதுதானே, சோழியன் குடுமி சும்மாவோ ஆடும்.

**மு.த:** சும்மா ஆடாது முடியையும், சொந்த அரசியல் ஆசையையும் சுமந்தபடிதான் ஆடும்.

**க.சா:** அவர் போவாரா? அவர் போவாரா? புகுந்தவீடு விட்டு பிறந்த வீட்டுக்கு அவர் போவாரா?

**மு.த:** எவர், அநுராவோ? போனால் போகட்டும் போடா. இந்த கட்சியில் நிலையாய் இருப்பவர் யாரடா? வந்தது தெரியும், போய் கதைத்தது தெரியாது. போனால் போகட்டும் போடா என்றல்லோ யானைக் கட்சிக்காரர் கூறுகினம்.

என்றதும் சிலரது விருப்பமாம்.

**மு.த:** தானாக வெளியே போனதாக இல்லாமல், அவர்களாக போகச் சொல்லட்டும் என்று அநுரா நினைக்கிறார் போல கிடக்கு. போகாதே போகாதே என் அநுரா, பொல்லாத சொப்பனமும் நானும் கண்டேன் என்று பாட யாருமில்லை.

**க.சா:** அக்காவுக்கு தம்பியில் பெரிய கரிசனை இல்லையாம். டவுட் இருக்குதாம். உள்ளே வந்தால் தனக்கு உபத்திரவம் என்று நினைக்கிறாராம். பெரிய அக்காதான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாக முனைகிறாராம்.

**மு.த:** மினிஸ்டர் மிஸ்டர் கதிர்காமருக்கு உது தெரியாதாக்கும்.

**க.சா:** தெரிந்தால் என்ன?

**மு.த:** அவருக்குத்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பிடிக்காதே.

**க.சா:** தங்களுக்கு பயன் கிடைத்தால் மூன்றாம் தரப்பு என்ன, முப்பதாம் தரப்பு மத்தியஸ்தம் வந்தாலும் ஓ.கேதான்.

**மு.த:** அக்காவுக்கு மீரிகம கூட்டத்தில் தம்பி ஐஸ் வைக்க, நடப்பது என்ன பச்சைக்கட்சி கூட்டமா நீலக்கட்சி கூட்டமா? என்று தொண்டர்களுக்கே குழப்பம் வந்துபோட்டுதாம்.

**க.சா:** அதுதான் பச்சைக் கட்சித் தலைவர் படு ஹீட்டாக இருக்கிறாராம்.

**மு.த:** எப்படியோ எந்தப் பக்கத்துக்கும் சூட்டாக இருக்கக்கூடியவர் மிஸ்டர் அநுரா என்பது முடிவாகிவிட்டது. அரசியலில் முக்கிய தகுதியே அதுதானே.

### பேச்சாளர் பேரம்பலம்



சந்திக்கு சந்தி படையினர் நிற்கின்றனர். குந்தியிருந்து அபிவிருத்தி செய்ய முடியாது என்று நான் கூறுவதால், பந்திக்கு முந்தும்போது மட்டும் சந்திக்கு சந்தி நின்ற காட்சி கண்ணில் தெரியவில்லையோ? என்று சில பத்திரிகைகளில் கேள்வி எழுப்பப்படுவது அப்பட்டமான அநியாயம் என்பதை அப்பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய பத்திரிகைகளுக்கு கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.


காதிலை பூ கந்தசாமி

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




ARUL JEWELLERS
அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# புகை

← அமெரிக்கா முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டபோது அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்கள் மத்தியில் தான் புகைத்தல் பழக்கம் காணப்பட்டது. செவ்விந்தியர்களிடம் கற்ற புகைத்தல் பழக்கம் 1500ம் ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் பரவியது.

உயர் வகுப்பினர், தனவந்தர்கள், இங்கிலாந்தின் பிரபுக்கள் சுங்கானைப் பயன்படுத்திப் புகை பிடிப்பதில் ஆனந்தமடைந்தனர்.

வண்ணம் வண்ணமான தோற்றங்களில் சுங்கான்கள் தயாரிக்கப்படுகின்றன. மத்தியதரைக் கடலை ஒட்டிய பிரதேசங்களில் காணப்படும் ஒரு வகைக் களிமினால் சுங்கானின் புகையிலையை அடக்கித் திமுட்டப்படும் பகுதி உருவாக்கப்படுகிறது. பீங்கானாலும் இவை செய்யப்படுகின்றன. புகை * திஞ்சும் குழாய்ப் பகுதி பெரும்பாலும் மரத்தினாலோ சில செடிகளின் தடித்த முள்ளினாலோ செய்யப்படுகின்றன.

பல சுங்கான்கள் வண்ண வண்ணப் படங்களால் அலங்கரிக்கப்படுகின்றன. ஒருவர் பயன்படுத்தும் சுங்கானைக் கொண்டே அவருடைய அந்தஸ்தை நிர்ணயித்த காலமும் உண்டு.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657



# உவகை

↓ சிறு பிள்ளைகள் எப்போதும் சுறுசுறுப்பாகவே இயங்குவார்கள். அவர்களை அடக்கி ஒடுக்காமல் அவர்களின் ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர வேண்டியது பெரியவர்களின் கடமை. ஓடி ஆடி விளையாடாமல் அடக்கி ஒடுக்கி வைக்கப்படும் குழந்தைகளின் உள்ளமும் உடலும் விருத்தியடைய முடியாது.

படத்திலுள்ள வாண விளையாட்டரங்கு அமெரிக்காவில் உள்ளது. குழந்தைகளுக்கு உவகை கொடுக்கும் வகையில் சிரத்தையுடன் அமைக்கப்பட்டது.



# குகை



← அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் மேற்கே 180 கிலோமீட்டர் தூரத்தில் மெய்ன் மலைத் தொடர் இருக்கிறது. இம்மலைத் தொடரில் காணப்படும் குகைகள் மிக விசித்திரமாக அமைந்துள்ளன.

நெடுங்காலத்துக்கு முன்னர் தோன்றிய சுண்ணாம்புக்கல் அமைப்புகள் வேடிக்கையான வடிவங்களைக் கொண்டவையாகக் காட்சி தருகின்றன.

அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடியினர் 'உயர்ந்த இடம்' என்ற கருத்தில் 'ஜெனோலான்' என்று பெயர் சூட்டினர். இவ்வடிவங்களை ஒளியில் பார்க்கும்போது தங்கம் உருகி வடிவது போல் தோற்றமளிக்கின்றன. இக்குகைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் முறைப்படி பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

முதன் முதலில் ஜெனோலான் குகைகள் 1860ம் ஆண்டுதான் பொது மக்களுக்கு அறிமுகமாயின. இதுவரை 60 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இவற்றைப் பார்த்துள்ளனர்.

# தனிவகை



→ ஐரோப்பிய நாடுகளில் வீடுகளில் வைத்து நேசமுடன் வளர்க்கப்படும் நாய்களில் 'பூடில்' என்ற வர்க்கம் மிகவும் புத்திசாலித்தனமுடையனவும் மனிதர்களுடன் மிகவும் நட்புடன் பழகக்கூடியதுமாகும்.

முன்னரெல்லாம் பூடில் இன நாய்களை வேட்டைக்குப் பயன்படுத்தினர். ஆனால் வேட்டைகளுக்கேற்ற குணாம்சங்கள், வேறு இன நாய்களை விட பூடில் நாய்களுக்கு குறைவாகவே காணப்பட்டமையினால் இவற்றை வளர்ப்பு நாயாகவே வளர்க்கலாயினர்.

பூடில் நாய்களின் ரோமம் அடர்த்தியாகவும் சுருட்டையாகவும் வளரும். இதனால் ரோமங்களைக் கத்தரித்து வெவ்வேறு வடிவங்களில் அமைத்து அழகு பார்ப்பார்கள். பெரும்பாலான இவ்வின நாய்கள் 25 முதல் 38 சென்டிமீட்டர் உயரம்வரை மட்டுமே வளரும்.

# வாகை

↘ சூரியனுக்கும் சூரியகாந்தி பூவுக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு. காலையில் இப்பூக்கள் மலரும். சூரியன் உதயமாகும் திசையை நோக்கியே மலர்ந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை சூரியனைப் பார்த்துக்கொண்டு தன்னைத் திருப்பிக் கொள்ளும் தன்மையுடையது.

சூரியகாந்தி செடி முதன் முதலில் வட அமெரிக்காவில்தான் தோன்றியிருக்க வேண்டும். பூக்களின் அழகுக்காகவே 1500ம் ஆண்டுகளில் இச் செடி ஐரோப்பிய நாடுகளில் பரவியது.

சூரியகாந்தி பூக்களில் மிகப் பெரியது இந்தப் பூதான். இதன் குறுக்கு விட்டம் மட்டும் 43 சென்ரிமீட்டர். பெரிய பூ இது.






# பகை

↑ சாதாரண போர்வீரனாக மிக இளவயதில் தலையெடுத்த நெப்போலியன் பொனப்பார்ட் மிக வேகமாக உயர்ந்து சிறந்த படைத் தளபதியாகத் திகழ்ந்து, ஃபிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்தியாகி, ஐரோப்பிய நாடுகளுக்குச் சிம்ம சொப்பனமாக வாழ்ந்து மறைந்தான். பகை நடுங்கும் வீரன் எனப் புகழ்பெற்றான்.


1769ம் ஆண்டு ஆகஸ்ட் 15ல் மத்தியதரைக் கடலிலுள்ள கோசிக்கா எனும் தீவில் பிறந்து, 1821ம் ஆண்டு மே 5ம் திகதி தென் அத்லாந்திக் பெருங்கடலிலுள்ள பிரிட்டிஷாருக்குச் சொந்தமான சென் ஹெலேனாத்தீவில் நாடு கடத்தப்பட்ட கைதியாகவே மாண்டான்.

நெப்போலியனின் உடல் வைக்கப்பட்டிருந்த இப் பேழை ஃபிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள டோம் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. மாவீரனைத் தாங்கிய பேழை இது. அதனால் சரித்திரப் புகழ்பெற்றுவிட்டது.

தனது 9வது வயதில் போர்ப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்ததனாலோ என்னவோ மிக நேர்த்தியான முறையில் படை நடத்தும் ஆற்றல் பெற்றிருந்தான். இறுதியாக 100 நாள் நடைபெற்ற வோட்டலு போரில் தோல்வி கண்டான்



# 1 வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன் ஈழதர்சன் செல்வபாலன் 25.07.1998**

ஈழத்தில் சாவகச்சேரி வடக்கு மருதடி வீதியைச் சேர்ந்த செல்வபாலன் - கிளிநொச்சி சேவீஸ் வீதியைச் சேர்ந்த மனோகரி (சசி) தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஈழதர்சன் தனது முதலாவது பிறந்தநாளை 25.07.98 சனிக்கிழமை சுவிஸ் SOLOTHURN மாநிலத்தில் உள்ள இல்லத்தில் மிக எளிமையாகக் கொண்டாடுகிறார். ஈழதர்சனை அன்பு அப்பா, அம்மா, கிளிநொச்சியிலிருக்கும் அம்மப்பா, அம்மம்மா, பாட்டி சித்திமார் சாவகச்சேரியிலிருக்கும் அப்பம்மா, ஆசை அத்தை, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், ஜேர்மனியிலிருக்கும் விஜயபாலன் மாமா குடும்பத்தினர், குலம் சித்தா குடும்பத்தினர், சுவிஸ் பெரியம்மா, பெரியப்பா, மற்றும் உறவினர்களும் தோழர்களும் ஈழதர்சனை கண்ணதாசன் கவிபோல, கன்னித்தமிழ் போல பல்லாண்டு, பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் என். செல்வபாலன், சுவிஸ்- T.P. 032-6757179

# நம்பிக்கை

→ சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிரடி ஆட்டத்துக்கு அடி எடுத்துக் கொடுத்தவர் ஸ்ரீகாந்த். இந்திய வீரர். தமிழர்.

விளாசல் மன்னராக இருந்தவரை கப்டனாக நியமித்தார்கள். அவரது ஆட்டத்திறமை காணாமல் போனது. கப்டன் பதவியில் இருந்து மட்டுமன்றி, அணியில் இருந்தும் தூக்கிவிட்டனர்.

இந்தியாவின் சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கு கப்டன் பதவிதான் வில்லன். பொறுத்துப் பார்த்த ஸ்ரீகாந்த் கிரிக்கெட் ஆடுவதில் இருந்து ஓய்வு பெற்றார். ஆனால் கிரிக்கெட் அவரை விடவில்லை. கிரிக்கெட் பயிற்சி கொடுப்பது, தொலைக் காட்சியில் கிரிக்கெட் ஷோ நடத்துவது என்று ஜமாய்த்துக் கொண்டிருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் 'ஏ' அணிக்கு நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.



படிப்பகம்